பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 14 வெள்ளிக்கிழமை (28.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 183

## ஜனாதிபதி மஹிந்த அல்ஜசீராவுக்குப் பேட்டி

# பயங்கரவாதத்தை ஒழித்த எவரையும் தண்டிக்க முடியாது!



### தமிழ்த் தலைவர்களுடன் இணக்கத்துக்கு வரத் தயார்

கொழும்பு, மே 28

★ வன்னிப் போரின் போது குற்றம் இழைக்கப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப் படுவர். ஆனால் பயங்கரவாதத்தை தோற்கடித்த எவரையும் தண்டிக்க முடியாது.

★ தமிழ் அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதற்கு அரசாங்கம் தயார். அதனாலேயே நான் அவர்களைப் பேச்சுக்கு அழைத்துள்ளேன். நான் அவர்களை நம்புகின்றேன். அவர்களும் என்மீது நம்பிக்கை வைத்து பேச்சுவார்தைக்கு வர வேண்டும் .

*இவ்வாறு அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவரது நீண்ட செவ்வியின் முக்கிய பகுதிகளை இங்கே தருகின்றோம்.*

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புச் சபை மீண்டும் இரண்டு மாதங்களில் செயற்படும்

### அதற்கான ஏற்பாடுகள் ஆரம்பம் என்கிறார் பிரதமர்

கொழும்பு, மே 28

நீண்டகாலமாக செயலிழந்து கிடக்கும் அரசமைப்புச் சபை இன்னும் இரண்டு மாதங்களில் மீண்டும் செயற்படும் என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தைத் தொடர்ந்து இச்சபையை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் கூறுகின்றார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

நல்லாட்சியை அமைப்பதில் எமது அரசு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. நாம் என்றும் ஊழல், மோசடிகளுக்கு எதிராகவே போராடி வருகிறோம். எமது ஆட்சியில் ஊழல், மோசடிகள் எவையுமில்லை.

யுத்தத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த எமது அரசு ஊழல், மோசடிகளையும் முற்றாக இல்லாதொழிக்கப் பாடுபட்டு வருகிறது. அந்த அடிப்படையிலேயே அரசமைப்புச் சபையை மீண்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பல பகுதிகளிலும் இன்று காற்றுடன் மழை பெய்யும்

கொழும்பு, மே 28

இலங்கையில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி ஆரம்பித்துள்ளதால் நாட்டின் பல பாகங்களில் இன்று காற்றுடன் கூடிய மழை பெய்யும் - என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், கரையோரப் பிரதேசங்களில் தங்கியுள்ள மக்கள் அவதானத்துடன் இருக்க

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாடு, கிளிநொச்சிக்கு இன்னும் இரு வருடங்களில் "லக்ஸபான" மின்சாரம்

### நேற்று அங்குரார்ப்பண நிகழ்வு

வவுனியா, மே 28

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கு ''லக்ஸபான'' மின்விநியோகத்தை வழங்கும் செயற்றிட்டம் நேற்று கிளிநொச்சியில் அங்குரார்பணம் செய்யப்பட்டது.

வவுனியாவில் இருந்து 132 வலுவுள்ள மின்சாரத்தை கிளிநொச்சி, சுன்னாகம் மின்நிலையங்களுக்கு வழங்கி, அவற்றின் ஊடாக ஏனைய பகுதிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இருவருடங்களில் பூர்த்தி செய்யப்படும் என்று மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாவில் இருந்து 73 கிலோ மீற்றர் தூரத்தில் கிளிநொச்சியில் மின் இணைப்புப்

(24ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு எங்கும் "வெசாக்" கோலாகலம்; யாழ். நகரில் வண்ணமிகு அலங்காரங்கள்!

### துரையப்பா அரங்கப் பகுதியில் கண்கொள்ளாக் காட்சிகள்



துரையப்பா விளையாட்டரங்கில் இ[illegible] பாடல் இசையின் போது எடுக்கப்பட்ட படம்.

யாழ்ப்பாணம், மே 28

வெசாக்பண்டிகையை ஒட்டி குடாநாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் பரவலாகப் பந்தல்களும், வெளிச்சக் கூடுகளும் கட்டப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் பிரதான இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டு, வெளிச்சக் கூடுகள் அமைக்கப்பட்டு, கண்கவர் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தன.

ஆரியகுளம் விகாரை மற்றும் நகரின்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி வைத்தியசாலை மீண்டும் இயங்க ஆரம்பம்

### திறப்பு விழாவில் பஸில் உட்படப் பல அமைச்சர்கள்

கொழும்பு, மே 28

யுத்த சூழ்நிலையால் சேதமடைந்திருந்த கிளிநொச்சி வைத்தியசாலை யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் 2 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 50 லட்சம் ரூபா நிதிய கட்டட புனர்நிர்மாண வேலைகளுக்கும், ஒரு கோடி ரூபா நிதி வைத்தியசாலை உபகரணங்களுக்கும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் கைப்பொம்மையாக செயற்படுகிறதா சர்வதேசம்?

### அரியநேத்திரன் எம்.பி. சீற்றம்

கொழும்பு, மே 28

அரசின் கைப்பொம்மையாக சர்வதேச சமூகம் இயங்குகின்றதா? - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான பா. அரியநேத்திரன் கேள்வி எழுப்பி உள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடா

(24ஆம் பக்கம் பார்க்க)

## சகல பொலிஸ் நிலையங்களிலும் இனி தமிழில் முறைப்பாடு செய்யலாம்

கொழும்பு, மே 28

இலங்கையில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களும் இனித் தமிழ் மொழிமூலமான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஸ்ரீ ஸ்ரீ மஞ்சுநாதா ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்.

**தனஞ்செயன் சாஸ்திரி :- 077 0366383**

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப்போகின்றவை பற்றிய விவரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விசேட பயணம், எதிரிகள் கண்திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாள்களுக்குள் செய்துதரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்.

**K.R.V.INN**

252,பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் முன்பாக)

கைரேகை பார்க்கும்நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்.

(98793)


## 31ஆம் நாள் நீங்கா நினைவுடன் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 27.04.2010 சித்திரைப் பூரணை அன்று சிவபதமடைந்த

அமரர்

### செல்லையா செகராசசேகரம்

*(புராண வித்தக மாமணி, பல்கலைக் களஞ்சியம், பூசாரியார்- நரசிங்க வைரவர் கோயில், புன்னையடி)*

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள், சபிண்டீகரண கிரியை கள் இன்று (28.05.2010) இடம்பெற்று தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். அதிற்கலந்து பிரார்த்திப்பதோடு, மகேஸ்வரப் பூசையிலும் கலந்து கொள்ளுமாறு மிக்க வினயமாக அழைக்கின்றோம்.

அணிஞ்சிலடி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி திருநாவுக்கரசு (அரசு)

வீமன்காமம், பளையைப் பிறப்பிடமாகவும், உடுவிலையும், வவுனியாவையும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி திருநாவுக்கரசு (அரசு) நேற்றுமுன்தினம் (26.05.2010) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு (ஆயுள்வேத வைத்தியர், வீமன்காமம்) - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா - இராசம்மா தம்பதிகளளின் மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் (அரசு) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயிலடி, உடுவில்,
சுன்னாகம்.T.P. - 0212240997

(98852)

தகவல் :
பெறாமக்கள்.


## தேவை

1. ஓவ் செற் மெசின் மைண்டர் (ரொட்டா, ஹமடா)
2. புக்பைண்டர்.

அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

*தீபம் பிறின்டேர்ஸ்,*
*717, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

## Running Interview

Marketing Cordinator வியாபார நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கில, கணனி அறிவுடைய பெண் உடன் தேவை. காலை 9-11 மணிக்கிடையில் சகல ஆவணங்களுடன் நேரில்வரவும்.

Northrn Office Automation,
738A Hospital Road, Jaffna.
T.P: 0215678800, 0215679900


## தவறிவிட்டன

பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியையுடைய சச்சிதானந்தேஸ்வரக்குருக்கள் பசுபதீஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.4633 28364V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், குருமார் அடையாள அட்டை, வங்கி ஆவணங்கள், காப்புறுதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய கைப்பை கல்வியங்காடு சந்தைக்கு முன்பாக 27.05.2010 அன்று தவறிவிட்டது. எனவே இவற்றைக் கண்டெடுத்தவர்கள் 110/11, சட்டநாதர் கோயில் மேற்கு வீதி, நல்லூர் என்ற முகவரியில் அல்லது பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய் அல்லது ஸ்ரீமுருகன் பார்மசி, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு என்ற முகவரிகளிலோ ஒப்படைக்கவும். 0777911425 என்ற எண்ணுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் தவமலர்



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் தவமலர் நேற்று (27.05.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளைய தம்பி கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் பாலகுமாரின் அன்புத் தாயும், செல்வநாயகம், செல்லத்துரை (சேவையர், கனடா), மகேஸ்வரி, மகாலிங்கம், செல்வரத்தினம், அருளம்மா, சிவஞானம் (ஜேர்மனி), யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாம்பாள், லோக சறோஜா (கனடா), காலஞ்சென்ற பால கிருஸ்ணன், பாக்கியலட்சுமி, பத்மராணி, பாலச்சந்திரன் (வேவி), கௌரி (ஜேர்மனி), ருக்மணி, கந்தையா (CTB), பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திரானை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல் :
இ. செல்வநாயகம்

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 28

யாழ்.அரசடி ஜனசத்தி சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்டரீதியிலான 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும், 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இதில் பங்குகொள்ள விரும்பும் வீரர்கள் தங்களது பெயர் விவரங்களை ஜனசக்தி சனசமூக நிலையத்தில் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (6-231)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா இராசு



(ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச, காரைநகர்)

சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பாயைப் பிறப்பிடமாவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசு (25.05.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார்காலஞ்சென்றவர்களானசின்னையா - இலட்சுமி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சீதேவி தம்பதியரின் மருமகனும் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் ரவீந்திரராஜா (ஜேர்மனி), ஜெயானந்தராஜா (ஜேர்மனி), பவானந்தராஜா (ஜேர்மனி), விஜிதா (கொழும்பு), சகிதா (நங்கி), கவிதா (சுவிஸ்), ரஜிதா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரன் (V.J.Enterprices, கொழும்பு), விக்னேஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயந்திரகுமார் (சுவிஸ்), ஜெயரஞ்சன் (டோகா-கட்டார்), மதிவதனி (ஜேர்மனி), ஜெயசிறி (ஜேர்மனி), புஸ்பா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் மார்க்கண்டு (சாமியார்), காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோதிவேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.

(98800)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### கந்தையா இராசரட்ணம்

உசனைப் பிறப்படமாகவும், ஹட்டன் சாமிமலையை வசிப்பிடமாவும் கொண்ட கந்தையா இராசரட்ணம் 26.05.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் கந்தையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை - அழகரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், சயிந்தாவின் பாசமிகு தந்தையும், நவரத்தினம், காலஞ்சென்றவர்களான குணரட்ணம், செல்வராணி மற்றும் சந்திராதேவி, புவனேஸ்வரி, தயாவதி, செல்வரட்ணம்,மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரருமாமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை ஹற்றன் சாமிமலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன்,
மிருசுவில்.

(சி/567983)

தகவல் :
குடும்பத்தினர்.

### இராமசாமி கனகலிங்கம்

(Accountant, Ceylon Biscuits Limited, Pannipitiya)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 32, கொலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி கனகலிங்கம் 26.05.2010 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னால் காலஞ்சென்ற இராமசாமி மற்றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் நவமணியின் பாசமிகு கணவரும் சிவதாயினி (Children fund, Srilanka), கௌசலன் (விரிவுரையாளர், அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், யோகலிங்கம், அஞ்சலிங்கம் மற்றும் மகேஸ்வரி, ஞானலிங்கம், சோதிலிங்கம், நவரட்ணலிங்கம், நாகேஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சற்குணகுமாரி, குமுதினி, சரோஜினிதேவி, இராசசூரியர், பிரேமா, புனிதவதி, கௌரி, சிவாஜினி மற்றும் இராசரத்தினம் (சேனா), இராசமணி, காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், சீவரத்தினம் மற்றும் அழகரட்ணம், விஜயரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வமணி, காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் தவகுலமணி, இராஜேஸ்வரி, சிவமலர், சுகுணாதேவி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பி.ப. 4 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(98851)

தகவல்:
செ.இராசரத்தினம்
(மைத்துனர்)

## 'ஒதெல்லா' நாடக மேலதிக ஆற்றுகை

யாழ்.பல்லைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நாடகமும் அரங்கக் கலைகளும் மாணவர்களால் கடந்த 26ஆம் திகதி முதல் அளிக்கை செய்யப்பட்டுவரும் 'ஒதெல்லா' நாடகத்தின் காட்சி நேரம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இன்று காலை 10.30 மணிக்கு இடம் பெறும் காட்சிக்கு மேலதிகமாக மாலை 3 மணிக்கும் நாடக ஆற்றுகை இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ். மண்ணில் புதியதோர் அறிமுகம்

**Photo copy Machine 1/= cost இல் வாடகைக்கு**

சகல விதமான
- Photo copy machine parts
- Brand new, Re-condition photocopy machine
- Laser, ink cartridges, toners
- Continues ink system

அனைத்தையும் மலிவாகவும் சிறந்த தரத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் printerஇன் printing செலவை 80%ஆல் குறைக்க, கூடிய வசதிகள் உண்டு.

- Photo copy - 3/=
- A4 Colour printing - 25/=
- CD/DVD Lable printing,
- Photo printing 4R, 8" X 12"
- Birthday cards printing
- Plastic ID cards,
- Lamination,
- Book Binding (spiral)



அத்துடன் கணனிசார் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

**Northern Office Automation,**
**738 A, Hospital Road, Jaffna.**
0215678800 / 0215679900

(9885)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 .தொலைநகல்.: 222 9944

## தேர்தல் முறையில் மாற்றங்கள்.....?

இந்த நாட்டில் எந்த ஒரு தேர்தலிலும், அதாவது நாடாளுமன்றத் தேர்தல் தொட்டு மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் வரை விருப்பு வாக்குமுறை பின்பற்றப்படமாட்டாது. எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்கள் தொகுதி மற்றும் வட்டார முறையிலேயே நடத்தப்படும் என்று நாடாளுமன்றத்தில் அரச தரப்பின் முன்னாள் பிரதம கொறடாவும் நீர்ப்பாசன நீர்வளத்துறை அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். பதுளையில் தமக்கு நடத்தப்பட்ட வரவேற்பு விழாவில் வைத்து இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார் அமைச்சர். இவர் அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களில் ஒருவர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உள்வட்டப் பிரமுகர்; மிக நெருக்கமானவர். அதனால் விருப்பு வாக்கு முறை விரைவில் இல்லாமல் செய்யப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க காரணமில்லை.

கடந்த ஏப்ரலில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு விருப்பு வாக்குமுறை , மாவட்டத் தேர்தல் முறை ஆகிய இரண்டையும் நீக்கி விடும் சமாச்சாரம் குறித்து அரசாங்கத் தரப்பில் அமளியாகப் பேசப்பட்டது. அதுவும் அரசாங்கத் தரப்பு வட்டாரங்களிலேயே இது குறித்து முழுக்க முழுக்கப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

எப்போதும் இல்லாதவாறு, ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் தமக்கிடையே மோதிக்கொண்ட தேர்தல் வன்செயல்கள், வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட ஒருவார காலத்திற்குள்ளேயே அதிக எண்ணிக்கைகளில் பதிவு செய்யப்பட்டன.

அதுவும் ஒரேகட்சியின் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் தமக்கிடையே மோதிக்கொண்ட மோசமான சம்பவங்கள் ஆளுங்கட்சிப் பக்கத்திலேயே அதிக எண்ணிக்கையில் நடைபெற்றன. இது ஜனநாயகத் தேர்தலை கேலிக்கூத்தாக்கியது! அப்போதே விருப்பு வாக்கு தேர்தல் முறையை நீக்கவேண்டிய தேவை குறித்து ஆளும்கட்சி உரத்துப் பேசியது.

வெளிப்படையாகத் 'தக்க காரணம்' ஒன்று காட்டப்பட்டாலும், ஆளும்கட்சித் தரப்பின் சூத்திரதாரிகள் அதனைத் தக்க வகையில் பயன்படுத்தத் திட்டமிட்டார்கள். மக்கள் தாம் விரும்பும் வேட்பாளர் களை தெரிவுசெய்வதற்கு விருப்பு வாக்கு முறை நீக்கப்படுவதால், உண்மையான ஜனநாயகத் தேர்தல் முறை மீளவரும் என்ற கருத்தைப் பரப்பினார்கள்.

ஆனால் சோழியன் குடுமி ஒருபோதும் சும்மா ஆடுவதில்லை. விருப்பு வாக்குமுறை நீக்கப்படுவதால், அரசியல் கட்சிகளின் அதிகாரம் மேலும் வலுக்கும். அதனை விடவும் கட்சித் தலைமைத்துவத்தின் அதிகாரத்தைப் பல மடங்காக்கும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் அதிக விருப்புவாக்குகளை பெற்றால் தமக்கே அமோக ஆதரவு கிடைத்தது; தமக்கு முக்கிய பதவிகள் தரவேண்டும் என்று தலைமைப்பீடத்துடன் முட்டி மோதும் நிலை உண்டு. இதனை முற்றாக நீக்கி கட்சிக்குள்ளே தலைமைத்துவத்தின் அதிகாரத்தைப் பெருக்கி, நினைத்ததைச் செய்யும் நிலைக்கு விருப்பு வாக்குமுறை ஒழிப்பு இலகுவாக வழிவிடும்.

அதாவது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தலைமைத்துவம் தனது விருப்புக்கு ஏற்பக் கட்டி ஆளும், அவர்களின் சொந்த அபிலாஷைகளை துடைத்துத் தூளாக்கி உள்ளக சர்வாதிகாரம் தங்கு தடையின்றித் தலையெடுக்க வழி செய்யும்.

எண்ணிக்கையில் பலவீனமான எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை உள்ளே இழுத்து, தனது கட்சியின் மூத்த உறுப்பினர்களைக் கூட கீழே தள்ளிவிட்டு, தமக்கு விரும்பியவர்களை மேலே உயர்த்திவைக்க கதவு திறந்துவிடப்படும்.

ஒரு கட்டத்தில் எதிர்க்கட்சிகள் எவ்வித பலமும் இல்லாத நிலைக்குத் தள்ளப்படும் அபாயம் கூட உண்டு என்று எதிர்வு கூறப்படுகிறது.

இது இப்படியிருக்க -

மாவட்ட ரீதியான தேர்தல் முறையை நீக்கி, தொகுதி வாரி மற்றும் வட்டார ரீதியான முந்திய முறையைக் கொண்டுவரவும் அரசாங்கத் தரப்பிடம் திட்டமுண்டு என்றும் சொல்லப்படுகிறது.

இதன் உள்ளார்ந்த கூர்மையான நோக்கம், நாடாளுமன்றத்தில் தமிழ்மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்துவிடுவதுதான் என்று பல தரப்புகளும் சுட்டிக்காட்டுகின்றன.

அதனையும் விட, தமிழர்களுக்குக் கெடுதலான கபட நோக்கம் ஒன்றும் அரசாங்கத்திடம் இருப்பதாகப் பெரிதும் சந்தேகிக்கப்படுகிறது. வன்னி மற்றும் யாழ். மாவட்டங்களில் அபிவிருத்தி என்ற போர்வைக்குள், தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு சிங்களக் குடியேற்றங்களை ஒப்பேற்றி, தொகுதி வாரியான தேர்தல் வழியூடாக பெரும்பான்மை இன எம்.பிக்களை வடக்கிலும் வைத்திருக்கும் எண்ணக்கிடக்கை அரசுக்கு நிறையவே உண்டு என்று கூறப்படுகிறது.

கிழக்கில் டி.எஸ்.சேனநாயக்கவும் அவரைத் தொடர்ந்து வந்த அரச தலைவர்களும் சென்ற அதே வழியில், மஹிந்தவும் செல்வதற்கான சகல புறச்சூழ் நிலைகளும் தோற்றுவிக்கப்படுகின்றன என்பதில் கேள்விக்கு இடமில்லையே!

# வன்னி மக்களின் நிலைமை ஆதிவாசிகளை விட மோசம்

## நேரில் பார்த்தவற்றை விவரிக்கிறார் பியசேன எம்.பி.

அம்பாறை, மே 28

வன்னியில் மீளக் குடியமர்த்தப்படும் மக்கள் ஆதிவாசிகளைவிட மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறார்கள் என்று சமீபத்தில் அங்கு சென்று திரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மக்களை மீள்குடியேற்றம் என்ற போர்வையில் 10 தகரங்களையும், 6 கம்புகளையும் வழங்கி அனுப்புகிறார்கள். அவர்கள் இவற்றை வைத்துக் கொண்டு எவ்வாறு கூடாரம் அமைப்பது? ஏனைய கத்தி, மண்வெட்டி போன்ற உபகரணங்களுக்கு எங்கே போவார்கள்?

வடக்கு, கிழக்கிலிருந்து இளைஞர் அமைப்புகள் அங்கு சென்று சிரமதானம் செய்வதனூடாக அம்மக்களுக்கு உதவ முடியும்.

எமது பிரதேச இளைஞர்கள் ஒன்றிணைந்து அங்கு சென்று அரச அதிபர் ஊடாகப் பேசி பல உதவிகளைச் செய்யவேண்டும். இத்தருணத்தில் உதவாவிட்டால் பின்னர் நினைத்து வருந்தவேண்டி நேரிடும்.

உடன்பிறப்புகள் என்றும், இரத்தம் என்றும் உணர்ச்சியுடன் வீரவசனம் பேசுவோர் இத்தருணத்தில் அவற்றைச் செயலில் காட்டவேண்டும்.

புதிதாக மீள்குடியேற்றப்படு வோர் நிறையத் தேவைகளை எதிர்பார்க்கிறார்கள். சில குடும்பங்களில் வேலை செய்ய இளைஞர்களோ, ஆண்களோ இல்லை.

அங்கு ஆலயங்கள், பாடசாலைகள், குடிமனைகள் இருந்த தடயங்களே இல்லாத அளவுக்கு யுத்தம் இடம் பெற்றுள்ளது.

மக்கள் எந்த அடிப்படை வசதியுமில்லாமல், மீள்குடியேற்றப்படுகின்ற சூழலில் நாம் அங்கு சென்று உதவவேண்டும்.

அங்குள்ள பழைய கிணறுகளை மீண்டும் தோண்டவேண்டாம் எனக் கூறியுள்ளேன். முடியுமானவர்கள் குழாய்க்கிணற்றையாவது அமைத்துக் கொடுக்க முன்வரவேண்டும்.

அங்கு மக்கள் படும் துன்பங்களை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. குழந்தைகள் படும் பாடு சொல்லுந்தரமன்று. மழை வந்தால் அவர்களால் சற்றும் தாக்குப் பிடிக்க முடியாது. காலில் செருப்புக்கூட இல்லை.

பாடசாலைகளில் தளபாட வசதி குறைவு. ஆசிரியர் பற்றாக்குறையுமுள்ளது. பிள்ளைகள் எழுதுவதற்கு பென்சில் கூட இல்லை. சப்பாத்தோ, செருப்போ இல்லாமல் உள்ளனர். கொப்பிகளும் தேவைப்படுகின்றன.

அவர்களிடம் பேச்சுக் கொடுத்தால் அவர்கள் கூறும் வேதனை வார்த் தைகள், சம்பவங்கள் நெஞ்சைப் பிழிகின்றன.

ஒட்டுமொத்தத்தில் ஆதிவாசிகளைவிட மோசமான நிலையில், அவலங்களுடன் பின்தங்கிய நிலையில் அவர்கள் வாழ்கிறார்கள். எனவே, நல அமைப்புகள், அரச சார்பற்ற அமைப்புகள் விரைந்து செயற்படவேண்டும்.

அவர்களது பகுதிகளுக்குச் சென்று முதலில் சிரமதானத்தை மேற்கொண்டு கொட்டில் அமைக்க உதவவேண்டும். அதேவேளை, வேறு அத்தியாவசியப் பொருள்களையும் வழங்கமுடியும்.

மனிதாபிமானம் என்பது இதுதான். அதனை விடுத்து அறிக்கையை மட்டும் விட்டுவிட்டு இருப்பது பொருத்தமாகாது.

அம்பாறையிலிருந்து என்னுடன் கைகோக்கும் பொதுநல அமைப்புகள் உடனடியாக தொடர்புகொண்டால் அங்கு செல்ல சகலதையும் செய்வேன். - என்றார். (ஒ-சி)

# வவுனியா - சுன்னாகம் நேரடி மின் விநியோகம் எம் மக்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும்

## கிளிநொச்சியில் நேற்று நடந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்

கிளிநொச்சி, மே 28

மின் வழங்கல் செயற்றிட்டம் ஊடாக மீண்டும் ஒளிமயமான எதிர்காலம் மலரவுள்ளது எனப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற வவுனியா - சுன்னாகம் மின் வழங்கல் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:-

வரலாற்றில் இன்று ஒரு முக்கிய நாளாகும். இந்த மின் வழங்கல் செயற்றிட்டம் மூலம் எமது மக்கள் நிச்சயம் நல்ல பயன்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

இத்திட்டத்திற்கான ஆலோசனையை வழங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கும் ஏனையோருக்கும் எமது மக்கள் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது மக்கள் நீண்ட நெடுங்காலமாக மின்சாரத்தைப் பெறுவதில் பலத்த இடர்பாடுகளை எதிர்கொண்டனர். ஆனால் இன்று அந்தநிலை மாறி ஓர் ஒளிமயமான எதிர்காலம் மலரவுள்ளதை இந்த மின் வழங்கல் செயற்றிட்டம் எடுத்துக்காட்டுவதை எண்ணி மனம் மகிழ்வடைகிறேன் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த வவுனியா - சுன்னாகம் மின் வழங்கல் செயற்றிட்டத்தின் நினைவுக் கற்கள் விருந்தினர்களால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர், பிரதி நிதியமைச்சர் டாக்டர் சரத் அமுனுகம, இலங்கை மின் சபைத் தலைவர் அமரபால, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடமாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் கொரூடா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஒ)

# வெசாக் தினத்தையொட்டி குடாநாட்டில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 28

இனமத பேதமின்றி அனைத்து மக்களும் யாழ்ப்பாணத்தில் வெசாக் தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளனர். தென்பகுதியில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் யாழ். நகருக்கு வருகை தரவுள்ளனர். எனவே பாதுகாப்பு நடவடிக்கைகள் நல்ல முறையில் அமைய வேண்டும். இதற்காக 700 பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் - இவ்வாறு யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வெசாக் தினத்தையொட்டி பொலிஸ் அதிகாரி ஹெட்டியாராச்சி தலைமையில் யாழ். பொலிஸ் தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்த பின் இடம் பெறும் முதலாவது வெசாக் தினம் இதுவாகும். சிறந்த திட்டத்தின் கீழ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா, சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி அமரக்கோன், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நெவின் பத்மதேவா ஆகியோரின் அறிவுறுத்தலுக்கமைய வெசாக் தினத்தையொட்டிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுமக்களின் பாதுகாப்புக்காக பொலிஸார் சாதாரண உடைகளுடனும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

வெசாக் தினத்தையொட்டி சகல விதமான மதுபான விற்பனைகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. மதுபானம் பாவித்த பின் வாகனங்களைச் செலுத்துபவர்கள், மதுபானம் பாவித்த நிலையில் நடமாடுபவர்கள் கடுமையான தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 9 பொலிஸ் பிரிவுகளுக்கும் பக்திப் பாடல் ஊர்வலம் ஒன்று செல்லவுள்ளது எனவும் பொலிஸ் அதிகாரி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர்களுக்கு உணவுப் பொதிகளையும் பொலிஸ் அதிகாரிகள் நேற்று வழங்கினார்கள்.

(எ-111-14-23)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 15 29.05.2010 | |
| | சனிக்கிழமை |
| திதி | : துதியை |
| | பி.இ. 05.49 |
| நட்சத்திரம் | : கேட்டை |
| | பி.ப. 1.51 வரை |
| சுபநேரம் | : 02.52 - 04.22 |
| ராகுகாலம் | : 08.52 - 10.22 |

# பஸில் வருகையையொட்டி மன்னாரில் பலத்த பாதுகாப்பு

மன்னார், மே 28

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் வடக்கு செயலணியின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ப்ஸில் ராஜபக்ஷவின் மன்னார் வருகையையொட்டி மன்னார் நகரில் நேற்றுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மன்னார் நகரில் பள்ளிமுனை வட்டாரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கியும் மன்னார் பொது வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நோயாளர் தங்கும் விடுதி மற்றும் சத்திர சிகிச்சைக் கூடம் என்பவற்றை பஸில் ராஜபக்ஷ திறந்து வைக்கவிருந்தார். இதனையொட்டியே வைத்தியசாலை வளாகத்தில் பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன் விளைவாக சிகிச்சைக்கு வந்த பலரும் கடும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்ட அதேசமயம் சிலர் காவலர்களோடு முரண்பட்டு திரும்பிச் சென்றனர். (எ-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 28

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீட்டான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும். (எ-க-236)


## ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய ஆட்டோ ஏல விற்பனை

மேற்படி ஆலயத்தின் பாவனையில் இருந்த NP HR-4833 ஆட்டோ எதிர்வரும் 06.06.2010 ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 10 மணிக்கு ஆலயப் பகுதியில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஆட்டோவை வந்து பார்வையிட்டுக் கொள்ளலாம். ஏலத்தில் அதிக தொகையினை கோருபவர் அன்றே முழுத்தொகையினையும் செலுத்தி ஆட்டோவைப் பெற் றுக்கொள்ளலாம்.

ஆலய பரிபாலன சபையினர்.

ஆ.சிவசண்முகஐயர் தலைவர். வி.சுரேஷ்குமார் பொருளாளர். வி.தெய்வேந்திரஐயர் செயலாளர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிறா, மிட்லாண்ட் (கிறிஸ்போ) புறோயிலர் குஞ்சுகளை பதிவுசெய்து எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை - 135/=

தொடர்புகளுக்கு: தம்பிப்பிள்ளையும் மைந்தரும்,
343, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
222 3353, 222 8495

(98789)


## செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் திருவிழா

மேற்படி ஆலயத்திருவிழாவை நாளை (29.05.2010) சனிக்கிழமை கொண்டாட பலாலி இராணுவத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது. அன்று மு.ப. 10 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

எனவே மேற்படி திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்கள் உங் கள் அடையாள அட்டையுடன் ஏ-9 வீதி, புதுக்காட்டுச் சந்தி ஊடாக பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இ.போ.ச. பேருந்துகள், காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் புறப்படும். உணவு, குடிதண்ணீர் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இதில் கலந்துகொள்ளும் பக்தர்கள் உங்கள் பாதுகாப்பை நீங்களே கருத்தில்கொண்டு இராணுவத்தினரின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(98792)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகம் 26 ★ 09 ★ 1947



விண்ணுலகம் 28 ★ 04 ★ 2010

### அமரர் இராசையா செல்வநாயகம்

கடந்த 28.04.2010 அன்று இறைபதமடைந்த எமது குல விளக்கு இராசையா செல்வநாயகம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (28.05.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

கரந்தன், நீர்வேலி மேற்கு.
T.P.: 021 3735500

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி ஆழ்வார் கண்ணகை

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஆழ்வார் கண்ணகை 26.05.2010 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் - பொன்னாச்சி தம்பதியினரின் மகளும் அமரர்களான சுப்பிரமணியம், லச்சுமிப்பிள்ளை, சின்னத்துரை, வள்ளிப்பிள்ளை மற்றும் குழந்தையார் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (27.05.2010) வியாழக்கிழமை ந.ப. 12 மணிக்கு ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இடைக்காடு,*
*அச்சுவேலி.*

(98794)

தகவல்: குகமலர்
ராதாகிருஷ்ணமூர்த்தி (பேரமகள்)


Baraka®

உங்கள் நலத்தின் பங்காளி




**JointSafe**

மூட்டுவலிகளினால் ஏற்படும் உபாதைகளுக்கான நிவாரணி.




**Memo-Plus**

கற்றல், ஞாபகசக்தி மற்றும் மனம் சம்பந்தமான தொழிற்பாடுகளை அதிகரிக்கும்.




**FOOT-KIO**

பித்த வெடிப்பு மற்றும் வரண்ட சருமத்தினை மென்மையாக்கும்.




**HAIRMENN**

இளநரை மற்றும் முடி உதிர்தலை தடுக்கும்.

Manufactured by:
BIO EXTRACTS (PVT) LTD.
No: 11, S.De. S. Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.
Marketed by:
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
HOT LINE: 0777 800668

யாழ். விநியோக முகவர்:
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna.
TEL: 0212222567


## அருள்மிகு உசன் கந்தசாமி கோயில் அலங்கார உற்சவம்

மேற்படி ஆலயத்தின் அலங்கார உற்சவம் இன்று (28.05.2010) வெள்ளிக்கிழமை நடைபெறும். முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம் . இடம்பெற்று அதனைத் தொடர்ந்து இரவு 8 மணிக்கு கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

**கலை நிகழ்வுகள் வரிசையில்...**

- பரிசளிப்பு வைபவம்
- யாழ்.மண்ணின் முன்னணி ஆசிரியர்களால் வழங்கப்படும் "வாழ்க்கை போராட்டமா? பூந்தோட்டமா?" என்னும் தலைப்பிலான பட்டிமன்றம்
- இராகம்ஸ் இசைக்குழுவின் இன்னிசைக் கானங்கள்

அனைவரும் திரண்டு வந்து முருகனின் அருளைப் பெற்று கலைநிகழ்வுகளைக் கண்டு களிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நிர்வாகத்தினரும் தொண்டர்களும்,
உசன் கந்தசாமி கோயில்.

(சி/567985)


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்சினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா..

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010


## மரண அறிவித்தல்

### திருமதி இராயப்பு லூர்துநாயகி



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும், இல.28, மாட்டீன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராயப்பு லூர்துநாயகி கடந்த 25.05.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றோமான் - யோசேப்பின் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - சிசிலியா தம்பதி களின் மருமகளும், குருசுமுத்து இராயப்புவின் (கலையார்வன்) பாசமிகு மனைவியும், ஜெயந்திரன் (லண்டன்), திருமதி வி.ஜெயந்தினி, ஜெயப்பிரகாஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும். விவியன் விமலாணந்த் (மீள் எழுச்சித்திட்டம், செயலகம், யாழ்ப்பாணம்), கமன்சி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், செல்வி அக்ஷயா, செல்வி ஜஸ்மீகா ஆகியோரின் பேர்த்தியும், திருமதி யூ.வேவி (லண்டன்), கிறிஸ்ரியன், காலஞ்சென்ற அன்ரன் மற்றும் கஸ்மர் கில்பேட், றிச்சட் ஒலிவர் (யாழ். மாநகரசபை),காலஞ்சென்ற அன்ரனி (கிராமசேவகர்) மற்றும் திருமதி பீ.ஜெயசீலி(பிரான்ஸ்), ஸ்ரனிஸ்லோஸ் (நோர்வே), டயஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற யூடா மற்றும் திருமதி கி.புஸ்பராணி, திருமதி அ.கமலா, திருமதி க.கி. இராசேஸ், காலஞ்சென்ற திருமதி றி.ஒ.இமாக்குலெற் மற்றும் திருமதி அ.கொன்சி, பீலிக்ஸ் (பிரான்ஸ்), திருமதி ஸ்.கமல், திருமதி ட.றெனி, காலஞ்சென்றவர்களான கிளமென்ற் -குணகுந்தம்மா, பிரான்சீஸ் மற்றும் திருமதி பி.அன்னமலர், அழகேந்திரன் - லைலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.05.2010) சனிக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு, அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*28,மாட்டீன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(98778)

தகவல்:
கு.இராயப்பு (கணவன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெசாக் பண்டிகையை முன்னிட்டு யாழ்.பொலிஸ் திணைக்களம், யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள 500 நோயாளர்களுக்கு நேற்று வியாழக்கிழமை உணவுப் பொதிகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா மற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவரும் நோயாளர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன், உமா, தமிழினியன்)

# இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 'வேள்ட்விஷன்' நடவடிக்கை

## மாவட்டப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மே28

இடம் பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 16.5 மில்லியன் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை ''வேள்ட்விஷன்'' நிறுவனம் வழங்கவுள்ளது.

இத்தகவலை 'வேள்ட் விஷன்' நிறுவன யாழ்.மாவட்டப் பணிப் பாளர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுமார் ஆறுமாத கால அளவைக் கொண்ட மேற்படி பிரதேச புனர் நிர்மாணத் திட்டத்தின் மூலம் வட்டுக்கோட்டை தெற்கு, தொல்புரம் கிழக்கு, தொல்புரம் மேற்கு, கைதடி மேற்கு, நாவற்குழி, சந்திரபுரம், சரசாலை தெற்கு ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்கள் பயன் பெறவுள்ளனர்.

அவுஸ்திரேலிய நாட்டின் நிதியுதவியுடன் ''வேள்ட்விஷன்'' நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 127 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களும், 50 பேருக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சிறு வியாபார உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் 21 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள், விதைகள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

மேலும் 113 பேருக்குக் கோழிவளர்ப்புக்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளதுடன் கடற்றொழிலாளர்களுக்கான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதுடன் அப் பகுதியைச் சேர்ந்த ஏனைய மக்களும் பயன்பெறும் வகையில் ஒருகிலோ மீற்றர் தூரத்துக்கு வீதி அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளையும் மேற்கொள்ளவுள்ளது.

இதனால் இடம்பெயர்ந்த மக்களுக்கு தற்காலிக வேலை வாய்ப்பை வழங்க முடியும்.

இதன் முதற்கட்டமாக நாவற்குழிப் பகுதியில் வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதுடன் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது - என்றார். (எ-க-16)

# ஆலோசனைக் கலந்துரையாடல்

கொழும்புத்துறை,மே28

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செயற்படுத்தக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு முன்னுரிமைப்பட்டியலை தயாரிப்பதற்கான ஆலோசனைக் கலந்துரையாடல்கள் நல்லூர் பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் கிராம சேவையாளர் பிரிவுகள் ஜே/110 தொடக்கம் ஜே/114 வரையான பகுதிகளில் வாழும் மக்களுக்கான கலந்துரையாடல் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில்அதேதினம் பி.ப.3 மணிக்கு ஜே/89, 90, 94, 96 பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறும். இந்த சந்திப்புகளில் கலந்து கொண்டு மக்கள் தமது கிராம அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களையும் பிரச்சினைகளையும் அறியத்தருமாறு நல்லூர் பிரதேச செயலகம் கேட்டுள்ளது. (எ-க-135)

# இளையோர் எழுச்சி ஒன்று கூடல்

கொழும்புத்துறை,மே28

யாழ்.மறைமாவட்ட இளையோர் எழுச்சி ஒன்று கூடல் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ஆயர் இல்லப் பகுதியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த எழுச்சி ஒன்று கூடலில் யாழ்.மறை மாவட்டத்தின் அனைத்துப் பங்குத் தலங்களிலிருந்து வரும் இளையோர் பங்கு பற்றுவர்.

இதில் ஆன்மீகத்திலும் சமூக செயற்பாடுகளிலும் இளையோரின் நிலை தொடர்பான ஆய்வுகள் இடம்பெறும்.

அதேவேளை மேற்படி ஒன்றியத்தினரால் நடத்தப்பட்ட மறைமாவட்ட ரீதியான போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக் குழு இயக்குனர் அருட்திரு இ.ம.வி. இரவிச்சந்திரன் அடிகள் தெரிவித்தார். (எ-க-135)

# கைவரிசையைக் காட்ட நினைத்த திருடனுக்கு கையில் கிடைத்ததோ இளம்பெண்ணின் 'கடி'

## -மட்டுவிலில் சம்பவம்-

யாழ்ப்பாணம், மே 28

திருடனுக்குத் தேள் கொட்டியதைப் போல என்ற பழமொழியை திருடனுக்கு பெண் கடித்தது போல என்று மாற்றக் கூடிய சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

வீட்டுக்குள் நுழைந்த திருடனை அங்கிருந்த பெண்கள் கடித்ததில் தப்பினேன் பிழைத்தேன் என ஓடியதாக கூறப்படும் விநோத சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வீட்டில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: இரவு வீட்டிலிருந்த வயோதிபர் கழிப்பறைக்குச் சென்றிருந்த சமயம் பார்த்து உள்நுழைந்த திருடன் சந்தடியில்லாமல் வீட்டினுள் மறைந்திருந்தான். பின்னர் நள்ளிரவு நேரத்தில் அங்கிருந்த அறையில் படுத்திருந்த பெண்களைப் பயமுறுத்தி வாயினுள் துணியை அடைக்க அவன் முயற்சி செய்யபோது இளம்பெண் ஒருவர் திருடனின் கையைப் பலங்கொண்டமட்டும் கடித்தார். அவ்வேளையில் மற்றொரு பெண் கூக்குரலிடவே அயலவர்கள் உதவிக்கு ஓடி வந்தனர். திருடன் தன்னைக் கடித்த பெண்ணைத் தாக்கிவிட்டு தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து பொலிஸார் உடனடியாக அப் பகுதிக்கு வந்து தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-207)

# புகைப்பொருள் எதிர்ப்பு தினம்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினமும் வலிகாமம் வலயப் பாடசாலைகளில் இருந்து ஜீ.சி.ஈ. (சா/த) மற்றும் ஜீ.சீ.ஈ. (உ/த) பரீட்சைகளில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் எதிர் வரும் 31 ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 1 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல் லூரியில் இடம்பெறவுள்ளன.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம், மார்பு நோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.யமுனானந்தா, ஈ.எஸ்.பி.நிறுவன உரிமையாளர் பே.நாகரத்தினம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதி பர் வ.ஸ்ரீகாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (எ-16-29)

# வீதி அகலமாக்கல் பணியால் இடம் நகரும் மின்சாரத் தூண்கள்

யாழ்ப்பாணம்,மே28

யாழ். - பருத்தித்துறை வீதியினை அகலமாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக மின்சாரத் தூண்களை இடம் நகர்த்தி நடும் வேலையினை இலங்கை மின்சார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேச செயலர், கிராம அலுவலர்களின் வேண்டுகோளை ஏற்றும் வலி. கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் பொது மக்கள் வீதி அகலமாக்கலுக்கு இடையூறாக உள்ள தென்னை மரங்களையும், மரக் கிளைகளையும் அகற்ற ஒத்துழைத்து வருகின்றனர்.

தறிக்கப்பட வேண்டியுள்ள ஒரு சில தென்னைமரங்களுக்கு 'ஈ' என்ற ஆங்கில எழுத்துப் பொறிக்கப்பட்டு அவை தறிக்கப்படுகின்றன.

இதேவேளை கிளைகள் அகற்றப்பட வேண்டிய மரங்களுக்கு 'ஈ பி' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு அவற்றின் கிளைகள் அகற்றப்படுவதனையும் காண முடிகின்றது. (எ - 121)

# பொது இடத்தில் புகைபிடித்தவர் எச்சரிக்கையின் பின் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மே28

பொது இடத்தில் புகைபிடித்த நபர் ஒருவர் சாவகச்சேரி நீதிமன்றினால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

கொடிகாமம் நகர்ப்பகுதியில் உள்ள தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் உணவு [illegible] புகைத்தலில் [illegible] எதிராக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த புதன் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குற்றஞ் சாட்டப்பட்ட நபர் தனது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக் கொண்டு பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதை யடுத்து இந்த நபர் மன்றினால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (எ - 207)




# சுற்றுலாப் பயணிகள் புகையிரத நிலையத்தில்

கொழும்புத்துறை, மே 28

யாழ். புகையிரத நிலையம் தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடமாக மாறியுள்ளது.

புகையிரத நிலையக் கட்டடமும் சுற்றாடலும் சுத்தம் செய்யப்பட்டு, தினமும் பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கிச் செல்வதைக் காணமுடிகிறது.

புதிதாகப் பல மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதிக்கு மின்சார வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

யாழ். கோட்டை மற்றும் துரையப்பா விளையாட்டரங்கப் பகுதிகளில் வெசாக் கொண்டாட்டங்கள் நடைபெறுவதால் அங்கு சென்று சுற்றுலாப் பயணிகள் தங்க முடியாதுள்ளமையாலேயே புகையிரத நிலையப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்கி வருவதைக் காணமுடிகிறது. (எ-க-135)

# மீளக்குடியேற்றுமாறு கோரிக்கை

கொழுப்புத்துறை மே 28

கொழுப்புத்துறை எழிலூர் கிராம மக்கள் தமது சொந்த வீடுகளில் மீளக்குடியேற அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 58 வீடுகளைக் கொண்ட இக் குடியற்றத்தில் வசித்த மக்கள் 15 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்த நிலையிலேயே உள்ளனர்.

நாட்டில் இயல்பு நிலை தோன்றி உயர் பாதுக்காப்பு வலயங்கள் அகற்றப்பட்டு வரும் வேளையில் தம்மையும் தமது வீடுகளுக்குச் சென்று குடியமர அனுமதிக்குமாறு இவர்கள் கேட்டுள்ளனர்.

இந்த மக்கள் இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் மற்றும் வாடகை வீடுகளிலேயே இன்னமும் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (எ-க-135)

# கூட்டங்கள்

சண்டிலிப்பாய், மே 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களின் கூட்டமும், விசேட தேவைக்குரியோரின் கூட்டமும் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

முதியோர் சங்கங்களின் கூட்டம் காலை 9 மணிக்கும் விசேட தேவைக்குரியோரின் கூட்டம் 10 மணிக்கும் நடைபெறும்.

செயலகத்தில் கடன்பெற்ற விசேட தேவைக்குரியோர் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு சமூக சேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60 வது அகவையில் மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்



அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று
இன்று (28.05.2010) வெள்ளிக்கிழமை தனது 60வது
பிறந்தநாளைக் கொண்டாடும் மணிவிழா நாயகன்
எம் அன்புக்கும் மதிப்புக்குமுரிய

**திரு.பொன்னம்பலம் ஆறுமுகசாமி**

(தொழிநுட்ப உத்தியோகத்தர் - தரம்-1, யாழ். மாநகரசபை)
அவர்களை, தச்சன்தோப்பு ஸ்ரீ முத்துக்குமார சுவாமியினதும், ஸ்ரீ ஞானவைரவப் பெருமானினதும் ஆசியுடன் மென்மேலும் சீரும், சிறப்பும் பெற்று வாழ வாழ்த்தும் அன்பு நெஞ்சங்கள்.

★திரு.க.சங்கரலிங்கம் குடும்பம்
★திரு.சி.கணபாலன் குடும்பம்
★திரு.து.மகாலிங்கம் குடும்பம்
★திரு.ச.உதயகுமார் குடும்பம்



மானிப்பாய் வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(98782)





## கரம்பொன் அன்னை வேளாங்கன்னி மாதா
## ஆலய வருடாந்த விழா

**31.05.2010**

ஆலய வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்
26.05.2010 புதன் ''செபமாலை பக்தியின் மகத்துவம்'' நற்செய்தி லூக் : 6:46-49
27.05.2010 வியாழன் ''ஜெபவாழ்வின் முன் மாதிரிகை'' லூக் : 11:5-8
28.05.2010 வெள்ளி ''உம் வார்த்தையின்படி எனக்காகட்டும்'' நற்லூக் : 8:19-21
29.05.2010 சனி ''இரக்கமுள்ளோர் பேறுபெற்றோர்'' மத் : 5:1 -10
30.05.2010 ஞாயிறு ''வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்'' யோவா : 1:10 -14

*(நற்கருணை ஆராதனை)*
31.05.2010 திங்கள் காலை 7மணிக்கு திருவிழா திருப்பலி
**''அன்னை மரியாள் அனைத்துக்கும் அரசி''**

குறிப்பு : அன்பளிப்பு வழங்க விரும்புவோர் புனித செபஸ்தியார் ஆலய பங்குத் தந்தையிடம் கையளித்து பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.

(எ/567982)

**அனுசரணை: A.C.D, JAFFNA.**

பங்குத்தந்தையும்,
பங்கு மக்களும்



## காணி விற்பனைக்கு

புலோலி பாடசாலைக்கு அருகாமையில்
(கொடிகாமம் வீதி) வெட்டுக்
கிணற்றுடன் கூடிய 4 பரப்பு காணி
உடன் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

☎ 077 3975195


## காசநோய் மருத்துவர் இந்தோனேசியா விஜயம்

நாவற்குழி, மே 28

காசநோய் தொடர்பான 6 நாள் செயலமர்விலும், வெளிக்கள ஆய்வுகளிலும் ஈடுபட காசநோய் சிறப்பு மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ்.ஜமுனாந்தா மிக அண்மையில் இந்தோனேசியா சென்று வந்துள்ளார்.

இவருடன் தென்பகுதியைச் சேர்ந்த மேலும் 5 மருத்துவ நிபுணர்களும் இந்தோனேசியாவிற்குச் சென்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-121)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02
✱
01
✱
1937



மறைவு
08
✱
06
✱
2009

**வன்னித்தம்பி சின்னத்துரை**

திதி - பிரதமை

எங்கள் குடும்பத்தின் பாசமலராய்
எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காய்
எம்மைப் பாசமுடனும் நேசமுடனும் வளர்த்து
எமக்கு நல்வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
நீர் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உமது நினைவு எம்மைவிட்டுப் பிரியாது
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.5, சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(98787)



## நல்லை..... மங்கையர்கரசியின் மனமார்ந்த பிரார்த்தனைகள்



எமது வித்தியாலய பகுதித் தலைவர் திருமதி குஞ்சலம்மா பசுபதீஸ்வரன் அவர்களின் அன்பு மாமி திருமதி சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் இராஜேஸ்வரி அம்மா அவர்களின் 14ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் நாமும் பங்கேற்று அவரது ஆன்மா மோட்சமும் சாந்தியும் அடையப் பிரார்த்தனை செய்கின்றோம்.

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய குடும்பம்,
**நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.**



## பதவி வெற்றிடம்

எமது தாபனத்திற்கு ஆய்வுகூட உதவியாளர்கள் தேவை. முன் அனுபவமுள்ளவர்கள் 30.05.2010 முற்பகல் 11 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

**சுகர்னி மருத்துவ நிலையம்**
578, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 8222


# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் கமலநாதன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, நாகபூஷணி வீதியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கமலநாதன் (பிரபல புகையிலை வர்த்தகர்) 25.05.2010 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- அன்னரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-ரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் பாசமிகு கணவரும் வர்சிகா, திருக்குமரன், கிரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பராசக்தி, காலஞ்சென்ற தவமணி தேவி மற்றும் சிவயோகநாதன் (சிவா), சறோஜினிதேவி, பத்மலோஜினி, குகநாதன், சாவித்திரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சபேசனின் அன்பு மாமனும் ராகவியின் பேரனும் மகேஸ்வரி, இராசரட்ணம், பூபாலசிங்கம், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் அன்னலட்சுமி ஸ்ரீகாந்தராஜா, பாலசுப்பிரமணியம் (குஞ்சன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.05.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூஷணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(98788)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் துன்பமின்றி வாழக்கூடிய அறிவினை ஒவ்வொரு மனிதரும் பெற்றிருப்பது அவசியம்

யாழ்ப்பாணம்,மே28

விஞ்ஞான பொருளாதார ரீதியான அறிவினை மனிதன் பெற்றிருக் கின்ற போதும் துன்பமில்லாது எவ்வாறு வாழலாம் எனும் அறிவு மனிதர்களிடம் முழுமையாக இல்லாதுள்ளது. இவ்வாறு இந்திய தமிழ்நாடு மனவளக் கலை பேராசிரியர் அருள்நிதி வேதசுப்பையா தெரிவித்தார்.

முழுமை நல வாழ்விற்காக மனவளக் கலை காய கல்பப் பயிற்சியின் அறிமுக நிகழ்வு அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மனவளக்கலை காய கல்பப் பயிற்சியின் அறிமுகவுரையை நிகழ்த்தும் போதே பேராசிரியர் அருள்நிதி வேதசுப்பையா இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வாழ்க்கையில் துன்பமில்லாது வாழ மனித மனம் விரும்புகிறது. அதனால் எந்தச் செயல் இன்பத்தையும் விளைவிக்கிறது எனும் தெளிவான அறிவு மனிதனுக்குத் தேவை. அந்த அறிவு இருந்தால் துன்பமில்லாது வாழ முடியும்.

விஞ்ஞான ரீதியான அறிவு, பொருளாதார ரீதியான அறிவு என்பவற்றைப் பெற்றிருக்கும் மனிதர்கள் துன்பமில்லாது எப்படி, வாழலாம் எனும் அறிவு இல்லாதவர்களே இருக்கின்றனர். அந்த அறிவுதான் முழுமையாக மனிதனுக்குத் தேவை.

மனிதனுக்கு அறிவுக் குறைபாடும் ஆற்றல் குறைபாடும் இருக்கும். இதனை நிவர்த்தி செய்வதற்கு மனவளக் கலையே சிறந்ததாகும். துன்பமில்லாத வாழ்வு வாழ்வதற்கு மனவளக் கலை அவசியமானதாகும். மனவளக் கலை என்ற சொல் பலருக்குப் புதிது போலத் தோன்றலாம். யோகாசனத்தின் தூய தமிழ் சொற்பதமே மனவளக் கலையாகும்.

உடல், உள, குடும்ப, சமூக, ஆன்மீக விடயங்களில் முழுமை பெற்றிருப்பதே ஆரோக்கியம் என உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. அந்த ஆரோக்கியத்தை வழங்குவதே இந்தச் சேவையாகும். எனவே இது தொடர்பான அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானதாகும்.

தமிழ் நாட்டின் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும், பாடத்திட்டங்களிலும் மனவளக் கலை இணைக்கப்பட்டுள்ளது.

மனவளக் கலையின் ஓர் அங்கமாகத் தியானம் உள்ளது. தியானம் செய்வதால் அனைத்தையும் பெறமுடியும். இது ஆன்மாவிற்குக் கொடுக்கும் பயிற்சியாகும்.

இந்த மனவளக் கலைகாய கல்பப் பயிற்சி மூலம் மனிதன் துன்பங்களற்று நிம்மதியாக வாழமுடியும் - என்றார்.

(எ-14)

## மீளக்குடியேறியோர் சமுகமளிக்கவும்

நவாலி,மே28

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ளவர்களுக்கு யு.என்.ஏச்.சி.ஆர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உணவல்லாத பொருள்களை பெற்றுக்கொள்ளாதவர்களும், மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கும் எதிர்வரும் 31 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்துப் பொருள்கள் வழங்கப் படவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இதற்குரிய ஆதாரங்களுடன் காலை 9 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(எ-100)




## சுற்றாடல் தினத்தையொட்டி மாணவரிடையே போட்டிகள்

கொழுப்புத்துறை,மே28

உலக சுற்றாடல் தினம் ஜூன் மாதம் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுவதை ஒட்டி அரியாலை அபிவிருத்திச் சங்கம் அரியாலைப் பகுதி பாடசாலை மாணவர்களுக்கிடையே தமிழ்மொழியறிவு மற்றும் பொது அறிவு தொடர்பான போட்டிகளை நடத்தவுள்ளது.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இப்போட்டிகள் யாவும் நடைபெறவுள்ளன.

தரம் 5-7 மாணவர்கள் கீழ்ப்பிரிவு, தரம் 8-9 மாணவர்கள் மத்திய பிரிவு, தரம் 10-13 மாணவர்கள் மேற்பிரிவு என்னும் ரீதியில் நடைபெறவுள்ள போட்டிகளில் பங்கேற்க முடியும். இவற்றுக்கான விண்ணப்ப முடிவு தினம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுப்பெயர், முகவரி, கிராம உத்தியோகத்தர் பிரிவு, குடும்ப பங்கீட்டு அட்டை இலக்கம், கற்கும் பாடசாலை, தரம் என்பவற்றை உள்ளடக்கிய சுய தயாரிப்பு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு அபிவிருத்திச் சங்க நிர்வாகம் கேட்டுள்ளது.

வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கு பணப்பரிசும், சான்றிதழும் சுற்றாடல் தின விழாவின்போது வழங்கப்படும். (எ)

## கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு ரூ.40ஆயிரம் அபராதமும் ஒரு வருட சிறையும்

யாழ்ப்பாணம், மே 28

சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு 40 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் சாவகச்சேரி நீதிமன்றில் வழங்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்நபர் ஏற்கனவே நீதிமன்றில் அபராதம் செலுத்தியதோடு நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து முன்னைய குற்றத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும் தற்போதைய குற்றத்திற்கு 30 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்ததுடன் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதத் தொகை செலுத்தத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறையும் விதிக்கப்பட்டது.

(ஒ-207)

## நடமாடும் சேவை மூலம் 46 பேர் பயன்பெற்றனர்


நவாலி,மே28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகதத்தில் சில் தினங்களுக்கு முன் இடம்பெற்ற பிறப்பு, இறப்பு சம்பந்தமான நடமாடும் சேவையில் நீண்ட காலமாகப் பதிவுகளை மேற்கொள்ளாமலிருந்த 46 பேருக்கு பிறப்பு, இறப்பு, கல்யாணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் திருமதி அ. எழிலரசி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். பிறப்பு, இறப்பு உதவிப் பதிவாளர் திருமதி இராசரத்தினம் விசாரணைகளை மேற்கொண்டு சான்றிதழ்களை உடன் வழங்கினார்.

இதில் 14 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்களும் 26 பேருக்கு உத்தேச வயதுச் சான்றிதழும், ஒருவருக்குத் திருமணச் சான்றிதழும் மேலும் 5 பேருக்கு திருத்தங்களும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக நிர்வாக உத்தியோகத்தர் முரளி தெரிவித்துள்ளார்.

(எ-100)



புலோலியில் அமைந்துள்ள பொது நூலகத்தில் வாசிப்பு வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேசசபையினரால் நடத்தப்பட்ட கருத்தரங்கிலும் புத்தகக் கண்காட்சியிலும் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் ஓய்வுபெற்ற பிரதேச செயலர் வி.வீரபத்திரபிள்ளை உரையாற்றுவதையும் புற்றளை மகாவித்தியாலயம், புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் ஆகியோர் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (எ-36)

## பத்திரிகைகள் இடப்படாமையால் வெறிச்சோடியிருக்கும் வாசிகசாலை

கோப்பாய்,மே28

குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் கடந்த சில மாதங்களாக வாசிப்புப் பகுதியில் எந்தவித நாளிதழ்களும் இருப்பதில்லை என பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பிரதேச சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இவ்வாசிகசாலையை பயன்படுத்தி தமது அறிவை விருத்திசெய்து வந்தனர்.

யுத்த காலத்திற்கு முன்னர் இரவு 10 மணிவரை இயங்கி, இப்பிரதேச வாசகர்களின் அறிவுப் பசியைப் போக்கி இந்த சனசமூக நிலையம் இன்று எந்தவித நாளிதழ்களும் இன்றி வெறுமையாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கவனத்திற்கொண்டு சனசமூக நிலைய நிர்வாகத்தினர் பத்திரிகையைத் தினமும் இடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-க-72)

## மாதாந்த உதவித் தொகை பெற மேலும் 7 சிறுவர்கள் தெரிவு

நல்லூர், மே 28

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவித்தொகை மேலும் ஏழு சிறுவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிறுவனம் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு மாதாந்தம் 300 ரூபாவை உதவி நிதியாக வழங்கிவருகின்றது. ஏற்கனவே நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் ஐந்து சிறுவர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டு வந்ததாகவும் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள ஏழு சிறுவர்களையும் சேர்த்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உதவி பெறுவோரின் எண்ணிக்கை பன்னிரண்டாக உயர்ந்துள்ளது.

(எ-க-111)

## நீர்வேலியில் இயங்கிய கண்ணாடித் தொழிற்சாலையில் பணியாற்றியோருக்கு உரிய நிவாரணத்தை வழங்குக

### பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே28

நீர்வேலிக் கண்ணாடித் தொழிற்சாலை இயங்கிய சமயத்தில் பணியாற்றிய பணியாளர்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை சேதமடைந்து தரை மட்டமான நிலையிலேயே இன்று காணப்படுகின்றது.

இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிய ஊழியர்களுக்கு இதுவரை எவ்வித நஷ்டஈட்டு கொடுப்பனவுகளே அல்லது நிவாரணங்களோ வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்வேலி சந்திக்கு அண்மையில் அமைந்திருக்கும் இந்தத் தொழிற்சாலையில் கடமையாற்றிய பணியாளர்கள் அனைவரும் தமது தொழிலை இழந்து நிவாரணம் இன்றி நிர்க்கதியான நிலையில் வாழ்ந்து வருவதாகப் பாதிக்கப்பட்ட பணியாளர் ஒருவர் கவலையுடன் கூறினார்.

எனவே இவர்களின் கஷ்ட நிலையைக் கருத்திலெடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தலையிட்டு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் ஊழியர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

(எ-224)

## சைவசமய அறிவுப்போட்டி முடிவுகள் வெளியாகின

கோப்பாய், மே 28

கோப்பாய் வடக்கு ஞான பண்டித சைவ விருத்திச் சங்கம் கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளியிடப்பட்ட முடிவுகள் வருமாறு:

**ஆரம்பப்பிரிவு**

1ஆம் இடம் - ரஜித்தன் தனுஷாஜினி - கோப்பாய் நாவலர் த.வி,2ஆம் இடம் - தணிகாசலம் விதுரகா- கோப்பாய் நாவலர் த.வி,3ஆம் இடம் - சதானந்தம் கீர்த்தனி - கோப்பாய் நாவலர் த.வி.

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் - ஞானசேகரம் மதுஷா - யா/ வேம்படி மகளிர் கல்லூரி,2ஆம் இடம் - மார்க்கண்டேயர் ஆரணி - கோப்பாய் நாவலர் த.வி,3ஆம் இடம் - இராசேந்திரம் மகிந்தன் - கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்.

**மத்திய பிரிவு**


1ஆம் இடம் - விமலேந்திரன் வினுஜன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் - பாஸ்கரநாதசர்மா சிவபானுசுதர் சர்மா - கோப்பாய் நாவலர் த.வி, 3ஆம் இடம்- சிவலிங்கம் திருமகன்- கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்.


**மேற்ப்பிரிவு**

1ஆம் இடம் - இராஜேஸ்வரன் துளசி -கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம், 2ஆம் இடம் - சுகன்ஜா- யா/ வேம்படி மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்- ஜெயசந்திரன் ஜெயஸ்ரிக்கா -கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. (எ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்....






காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திரு விழாவின் தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றபோது சுவாமி தேருக்கு எழுந்தருளி வருவதையும் தேரில் ஆரோ கணித்து வீதி உலா வந்துபக்தர்களுக்கு அருள் பாலிப் பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: தர்ணிகா)



மாதகல் நுணசை முருகன் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றபோது முருகப் பெருமான் தேரில் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.
(விக்ரோறி)



பாண்டியன் தாழ்வு நரசிம்ம ஞானவைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழாவில் வைரவப் பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருளி வீதி வலம் வருவதைப் படத்தில் காணலாம்.
(படம்: நந்தன்.)

## தொலைபேசி அழைப்பை பெற்றுக்கொள்ளுநர் சேவை வழங்குநருக்கு 50 சதம் கொடுப்பனவு

### ஜூன் மாதம் முதல் புதிய சட்டம் அமுல்

கொழும்பு, மே 28

தொலைபேசி அழைப்பை மேற்கொள்ளும் சேவை வழங்குநர், குறித்த தொலைபேசி அழைப்பைப் பெறும் சேவை வழங்குநருக்கு 50 சதம் வழங்க வேண்டும் என்ற புதிய சட்டமொன்று எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப் படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உதாரணமாக மொபிடெல் இலக்கத்திலிருந்து டயலொக் இலக்கத்துக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் குறித்த 50 சதக் கொடுப்பனவானது மொபிடெல் நிறுவனத்திடமிருந்து டயலொக் நிறுவனத்தையே போய்ச்சேரும் என்று இலங்கை தொலைத்தொடர்புபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பல்பிட்ட தெரிவித்தார்.

இந்தப் புதிய சட்டத்தின் அடிப்படையில் குறுந்தகவல் சேவைக்கும் 15 சதம் வழங்கப்படவுள்ளது எனவும் அவர் கூறினார்.

இந்தச் சேவையின் மூலம் தொலைபேசி அழைப்பைப் பெறுபவரின் சேவை வழங்குநரும் இலாபமடைவார் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கொடுக்கல் வாங்கலானது தொலைபேசி அழைப்பை மேற்கொள்ளும் மற்றும் அந்த அழைப்பைப் பெறும் சேவை வழங்குநர்களுக்கிடையிலேயே இடம் பெறும் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் விளக்கமளித்தார். (சி)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

மித்ர ஜித்ர

28 05 2010



உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடி யைச் சேர்ந்த **கேதீஸ்வரக்குருக்கள்- தர்சினி** தம்பதிகளின் செல்வக் குழந்தைகள் **மித்ர,ஜித்ர** இன்று [28.05.2010] வெள்ளிக்கிழமை தங்களது முதலாவதுபிறந்த நாளை பெற்றோர்,உறவினர், ஊர்மக்கள் சகிதம் தமது இல்லத்தினில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.மித்ர, ஜித்ர அன்புச் செல்வங்கள் வீரபத்திரர் துணையுடன் சகல ஐஸ்வர்யங்களுடன் ; பல்கலையும் கற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க, வளர்கவென வாழ்த்துகின்றோம்.

கனகசபாபதிக் குருக்கள் (தாத்தா)
இராமமிர்தம் (பாட்டி).
மற்றும் உடுப்பிட்டி வாழ் மக்கள்.
[98742]



**German, Swiss மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடை பெறுகின்றது.(Germanyயிலிருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது)

தொடர்புகளுக்கு - 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823



**வேலைக்கு ஆள் தேவை**

(விற்பனையாளர்)

யா/மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்
11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212223857


## மானிடப் பிறவியின் மாண்பு

அரிது, அரிது மானிடப் பிறவியரிது என்று மானிடப் பிறவியின் மாண்பு குறித்து ஒளவையார் முருகப் பெருமானுக்குப் பாடல் வடிவில் பதிலிறுத்துள்ளார்.

அத்தகைய பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் அப்பிறவியிலேயே ஈஸ்வரனை அறிய முயற்சிக்க வேண்டும். முயற்சிக்காவிடின் அப்பிறவி வீண் பிறவியாகிவிடும்.

தன்னலம் கருதாத புண்ணியச் செயல்களும், உலகத்தின் நன்மைக்கென்றே செய்யப்படும் செயல்களும், தியாக சிந்தனையுடன் ஆற்றும் செயல்களும், ஈஸ்வர ஆராதனையே!

பிறவியெடுக்கின்ற ஆன்மா ஒரு கணப்பொழுதேனும் செயலாற்றாமல் இருப்பதில்லை. ஒவ்வொரு உயிருக்கும் தன்னலமின்றி கர்மம் செய்விக்கப்படுகின்றது.

ஞானக்கதிர்

உடல் உறுப்புகள் ஒவ்வொன்றும் தமது தொழிற்பாடுகளைப் புரிகின்றன. அவை ஒன்றாவது இயங்காவிட்டால் எமது உயிருக்கு ஆபத்து விளைவித்துவிடும். எனவே, நித்திய கர்மங்கள் ஒழுங்காகச் செயற்படவேண்டும். அணுமுதல் அண்டம் வரை இயற்கையிலேயே அசைகின்றன. அதில் பிணைக்கப்பட்டுள்ள உயிரும், கர்மத்தைச் செய்தேயாக வேண்டும். கர்மத்தை ஒதுக்கிவிடும் சுதந்திரம் உயிருக்குக் கிடையாது. நித்திய கர்மங்கள் உயிர் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதன.

''அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்'' என்பது பித்ருயக்ஞமாகும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது தேவயக்ஞமாகும். முதலாவதாக தேவையக்ஞத்தைப் பற்றிக் கூறும்போது பிறவியெடுக்கின்ற ஆன்மாக்கள் நித்திய கர்மங்களோடு சேர்ந்து தினமும் கடவுள் வழிபாடு செய்யவேண்டும். தத்தமது சக்திக்கேற்றவாறு கடவுள் வழிபாட்டைச் செய்யலாம். தத்தம் இயல்புக்கேற்றவாறு கடவுள் வழிபாட்டைச் செய்யலாம்.

இறைவனை வழிபடும்போது மனதில் வேறு எண்ணங்களை வைத்துக்கொண்டு வழிபடுதல் தவறு. பிற சிந்தனைகள் ஒன்றுமே மனதில் இருக்கக்கூடாது. சொல்லும் செய லும் ஈஸ்வர வழிபாட்டிலேயே ஈடுபட வேண்டும். மனம் ஒன்று நினைக்க செயல் வேறாக இருக்கக் கூடாது. காலை, மாலை போன்ற நேரங்களில் ஈஸ்வர வழிபாடு செய்தல் நன்று. கடவுளை மனதில் இருத்திக் கடவுளைச் சிந்தித்து வழிபடல் வேண்டும்.

பிறவியெடுக்கின்ற ஆன்மாக்களுக்குக் கண்கண்ட தெய்வங்கள் அன்னையும் பிதாவும். எனவே, கண்ணினாற் காணாத கடவுளை வணங்க, எவ்வளவு முக்கியத்ததுவம் கொடுக்கின்றோமோ அவ்வளவு முக்கியத்துவம் கண்கண்ட கடவுளர்களை வழிபடக் கொடுக்க வேண்டும். பூலோகத்தில் கடவுளைப்போன்று பஞ்சகிருத்தியங்களைச் செய்பவர்கள் அன்னையும், பிதாவுமே. அன்னையும் பிதாவும் உயிரோடிருக்கும்போது அவர்களுக்கு நாள்தோறும் பணிவிடை செய்தல் வேண்டும் - பணிவிடையே உண்மையான வழிபாடாகும்.

ஏழாலைக் குமரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரிலே தீபம் எரியும் வற்றாப்பளை பொங்கலில் கண்ணீரோடு மீளவும் சங்கமித்துக்கொண்ட உறவுகள்

கடந்த வருடம் யுத்தம் மிகத்தீவிரமாகி மக்கள் அனைவரும் வன்னியை விட்டு வெளியேறிய ஒரு சில நாள்களில் வற்றாப்பளை அம்மன் வருடாந்த திருவிழா வந்தது. முன்பு வற்றாப்பளை அம்மன் கோயிலை சுற்றி லட்சக்கணக்கான மக்கள் திரண்டு இருக்கும் நிலையில் அந்த வருடம் கோயிலையோ திருவிழாவையோ யாராவது நினைத்துப் பார்த்திருப்பார்களா என்று தெரியவில்லை. யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. வற்றாப்பளை ஆலயத்தை சுற்றிமிக அண்மையில்தான் மீள் குடியேற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

நான் வற்றாப்பளை ஆலயத்திற்கு செல்லும் பொழுது இருட்டி விட்டது. வற்றாப்பளை சந்தியில் இறங்கி பார்த்த பொழுது தூரத்தில் கலர் மின் குமிழ்கள் எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. கோயிலில் சனக்கூட்டம் நிறைந்திருப்பதைபோல தெரியவில்லை. ஏனென்றால் அந்த வீதியில் இறங்கி நடப்பவர்கள் முதல் அந்த வீதியால் வரும் பொழுது வரும் வாகனங்கள் வரை எல்லாமே மிக குறைவாக காணப்பட்டன. தொடர்ந்து கோயிலுக்குள் சென்ற பொழுது அங்கு சனக்கூட்டங்கள் பெரியளவில் காணப்படவில்லை. ஆனால் எப்படியிருந்த கோயில் எப்படி இருந்த சனக்கூட்டம்தான் என்ற நினைவுகள் எனக்கு மேலிட்டன.

இந்த கவர்ஸ்டோரியில் நான் முதலில் சந்தித்த பாத்திரம் கோயிலின் முன்பாக இருந்த நந்திக் கடலை காட்டி என்னுடன் பேசத் தொடங்கியது. அவர் சமீபத்தில் விடுதலையான முன்னாள் போராளி சிறையிலிருந்து வெளியில் வந்த மகிழ்ச்சியை நந்திக்கடல் மறைத்துக் கொண்டிருந்தபடி பேசுகிறார்.

இந்தக் கடலில்தான் எங்கள் பிணங்கள் போனவருடம் மிதந்து கொண்டிருந்தன. இப்பொழுது மிக அமைதியாக இந்தக் கடல் இருக்கிறது. இடையிடையே பெருஅலைகள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. மிக இதிநேரத்தில்தான் நான் வெளியேறினேன். கொல்லப்பட்ட உடல்கள் நிறைய மிதந்து கொண்டிருந்தன. எங்கள் தோல்வி, உலகம் காப்பாற்றும் என்ற நம்பிக்கை, கணக்கிட முடியாத மரணம் எல்லாவற்றையும் இந்த நந்திக் கடல் இன்று பிரதிபலிக்கிறது. இந்தக் கடல் எங்கள் வாழ்க்கையிலும் மரணத்திலும் மிக நெருக்கமானது. இந்தக் கடலில் இருந்துதான் தண்ணீர் எடுக்கப்பட்டு அதில்தான் தீபம் ஏற்றப்பட்டுள்ளது. அடங்காத பல உயிர்கள் அதில் எரிந்து கொண்டிருப்பதைப்போல எனக்கு தோன்றுகின்றது.

இம்முறை மக்கள் பெரியளவில் வரமாட்டார்கள் என்பதை யாராலும் முற்கூட்டியே புரிந்து கொள்ள முடிந்திருக்கும். வந்தவர்களினதும் வராதவர்களினதும் கதைகள் ஆயிரம் ஆயிரம் எனது காதுகளில் கேட்டுக் கொண்டிருந்தன. முதலில் கோயிலுக்குள் சென்றேன். மிகக் குறைவான மக்கள் வணங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்கள். சிலர் தேவாரங்களை படித்துக் கொண்டிருந்தார்கள். கோயில் தொண்டு செய்து கொண்டிருந்த ஒரு முதியவருடன் பேசினேன்.

இந்தக் கோயிலின் பழமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வன்னியில் இந்தக் கோயில் ஆண்டாண்டு காலமாக மக்களின் மனநிலைகளுடன் இணைந்து வந்திருக்கிறது. எங்கள் நம்பிக்கை சமூக அடுக்கு பொருளாதார நிலை என்பவற்றுடன்தான் இந்தக் கோயிலை நீங்கள் பார்க்க வேண்டும். அதற்கமைவாகவே திருவிழா நடக்கிறது. இதில் நாங்கள் நிறைய நம்பிக்கைகளை வைத்திருக்கிறோம். இந்த ஆலயத்திற்கு ஏற்றும் தீபத்திற்கு கடல் நீரை எடுத்து வருவதற்காக ஏழுபேர் போகிறார்கள். அவர்கள் சமூகத்தின் ஒவ்வொரு அடுக்கமைவுகளையும் சார்ந்தவர்கள். எல்லா சமூகத்தவரும் ஒரு விடயத்தை நடத்த அவசியமானவர்கள் என்பதை இதில் நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

கடல் நீரில் ஏற்றும் தீபம் உள்ளே எரிந்து கொண்டிருந்தது. அதற்கு தொடர்ந்து நீரை விட்டுக் கொண்டிருந்தார்கள். இறுதிப் பூசைக்காக பூசகர்கள் தயராகிக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்து பேசிய அந்த முதியவர் கடலில் அந்த நீரை எடுக்கும் முறை பற்றி குறிப்பிட்டார்.

கடலுக்கு இந்த நீரை எடுப்பதற்காக செல்லும் பொழுது வரும் சிறிய அலைகளைத் தவிர்த்து ஒரு பெரிய அலைக்காய் காத்திருப்போம். அந்த அலை வரும் பொழுது ஒருவர் அதில் மூழ்க்கி ஒரு குடம் நீரை எடுப்பார்.



தீபச்செல்வன்

அந்த நீரில் இந்த தீபம் எரியும். அந்த ஒரு குடம் நீரில் முதலில் காட்டு விநாயகர் கோயிலில் எட்டு நாள்கள் வரை தீபம் வைப்போம். பின்னர் இறுதி இரண்டு நாள்கள் இந்தக் கோயிலில் தீபம் வைப்போம். இது பல ஆண்டு காலமாக நடந்து வருகிறது. உங்களுக்கு நம்பமுடியாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் பார்க்கும் அந்த தீபம் தண்ணீரில்தான் எரிகிறது. நாங்கள் நம்புகிறோம். இந்த தீபத்தைச் சுற்றி எங்கள் நம்பிக்கைகள் பல இருக்கின்றன.

அந்த விளக்கு எரிந்து கொண்டு தான் இருக்கிறது. அவர் குறிப்பிடும் நம்பிக்கையை மக்கள் வாழ்வுடன் வைத்துப் பார்க்க வேண்டும். வரலாற்றுப் பின்னணிகளுடன் வைத்துப் பார்க்க வேண்டும். வற்றாப்பளை அம்மன் கோயில் என்றதும் அந்த தீபம்தான் மக்களின் முதல் நம்பிக்கையும் ஆச்சரியமுமாக இருக்கிறது என்பதை நாம் எல்லோருமே அறிந்திருக்கிறோம். அந்தத் தீபத்தைச் சுற்றி என்ன என்ன நம்பிக்கைகளை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன்.

நீரை எடுக்கும் பொழுது குறைக்குடமாக வரக்கூடாது. தீபம் ஏற்றும் பொழுது அது அணைந்து விடக்கூடாது. கடைசியாக திருவிழா நடந்ததிற்கு முதல் முறை அப்படி குறைக்குடமாக நீர் வந்தது. அப்பொழுது முதல் எங்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் இம்முறை நிறைகுடமாக வந்திருக்கிறது. தீபமும் அணையால் எரிகிறது.

கண்ணகி கோயிலின் பின்புறமாக தீபங்களை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். கோயிலுக்குள் இன்னொரு இடத்தில் புராணம் படித்துக் கொண்டிருந்தார்கள். வயது முதிர்ந்தவர்கள் சிலர் ஓலையில் உள்ள புராணத்தை பாடிக் கொண்டிருந்தார்கள். காட்டு விநாயகா ஆலயத்திலிருந்து கண்ணகி அம்மன் வற்றாப்பளைக்கு வந்த வரலாற்றை சொல்லும் புராணம் என்று புராணம் படிக்கும் ஒருவர் குறிப்பிட்டபடி புராணத்தை பாடிக் கொண்டிருந்தார். வற்றாப்பளையின் பழைய பெயர் பத்தாப்பளை என்றும் காட்டு விநாயகர் கோயிலில் இருந்து புறப்பட்ட கண்ணகி ஒன்பது இடங்களுக்கு சென்றுவிட்டு பத்தாவது இடமாக குறித்த இடத்திற்கு வந்தமையால் அதை அப்படி பத்தாப்பளை என அழைப்பதாக அந்தப் புராணத்தில் பாடினார்கள்.

கோயிலுக்கு வெளியில் மணல் திட்டுகளில் வயல்களில் அமர்ந்திருந்த பலரைச் சந்தித்து பேசத்தொடங்கினேன். அவர்களில் பலர் இன்னமும் தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையாகவில்லை. பலர் கோயிலுக்குள் உள்நுழையாமல் வெளியில் இருக்கிறார்கள். மணல் திட்டுகளில் படுத்துறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இராமநாதன் முகாமிலிருந்து வந்திருக்கிறேன். என்னுடன் சித்தி வந்திருக்கிறார். சித்தியின் பிள்ளைகள் வந்திருக்கிறார்கள். எனது அம்மா வரவில்லை. எங்கள் அப்பா சண்டை நடந்த பொழுது காணாமல் போயிருந்தார். அதனால் அம்மா வரவில்லை. நான் எல்லோருக்காகவும் சித்தியுடன் சேர்ந்து அர்ச்சனை செய்துவிட்டு இருக்கிறேன்

இப்படி என்னுடன் பேசிய சிவன் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான். முகாமில் வாழ்ந்து கொண்டிருப்பதற்குரிய அடையாளங்கள் அவனிடம் நிறையத் தெரிகின்றன. இயல்புக்கு மாறாக மெலிந்து போயிருந்தான். களைப்பும் சோர்வும் முகத்தில் தெரிந்தது. தொடர்ந்து ஒரு பல்கலைக்கழக மாணவனை பார்த்து பேசினேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறேன். முன்பு உயர்தரம் படித்துக் கொண்டிருந்த பொழுது எங்கள் பெற்றோருடன் இந்தக் கோயிலுக்கு வருவோம். ஆனால் எங்கள் வகுப்பு மாணவர்களை ஆசிரியர்களை இந்தக் கோயிலில் வைத்து எப்படியாவது சந்தித்திருக்கிறோம். போரால் எனது நண்பர்கள் என்னவானார்கள் என்று தெரியவில்லை. நிறையப் பேருடைய தொடர்புகள் இல்லை. அவர்களை இன்று சந்திக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் கோயிலுக்கு வந்தேன். நீங்கள் பார்க்கும் இந்த நண்பனை இன்றுதான் கோயிலில் வந்து சந்தித்தேன்

இப்படி பல இளைஞர்கள் தங்கள் நண்பர்களைத் தேடுகிறார்கள் என்பதை அவர்கள் ஒவ்வொருவருடைய முகத்தையும் கூர்ந்து பார்ப்பதிலிருந்து புரிய முடிகிறது. பலர் களைத்துப் போய் கோயிலைச் சுற்றியிருந்தார்கள். வயதான முதியவர் ஒருவரை மற்றொரு இடத்தில் வைத்து சந்தித்தேன்.

முகாமிலிருந்து 'போம்' போட்டுத்தான் வந்திருக்கிறேன். முக்கியமாக ஊரைப் பார்க்க வேண்டும். ஊர் எப்படி இருக்கிறது. வீதிகள் எப்படி இருக்கின்றன என்பதனை பார்க்க வேண்டும் என அவாவுடன் தான் வந்தேன். கோயிலுக்குள் உள் நுழையும் அளவில் என் மனம் இல்லை. எவ்வளவோ நடந்து விட்டன. அடுத்த வருடம் கோயிலுக்குள் போவதைப் பார்ப்போம்.

தொடர்ந்து பேச முடியாதபடி வெளித் தெரிந்த அவருடைய பதில்கள் விரக்தியடைந்தனவாகத் தெரிந்தன. அவருக்குப் பக்கத்தில் சில நிமிடங்கள் மௌனமாக இருந்து விட்டு செல்கையில் ஒரு வயதான அம்மாவைப் பார்த்தேன். ஒரு பாயில் இருந்துகொண்டு தனியே யோசித்தபடியிருந்தார்.

தனியே கோயிலுக்கு வரும்பொழுது எப்படி மனம் வலிக்கும் என்று இன்றுதான் எனக்குத் தெரிகிறது. நான் இப்பொழுது தனி மரமாயிருக்கிறேன். பொங்கல் செய்யிற மாதிரி எனக்கும் எந்த நேர்த்திகளும் நிறைவேறவில்லை. சண்டை நடந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த பொழுது நான் வாய்க்கு வாய் வற்றாப்பளை அம்மாளை வேண்டிக் கொண்டிருந்தேன். இறுதியில் எல்லோரையும் இழந்துவிட்டேன். இன்று மன ஆறுதலுக்காக அம்மாளிடம் வந்திருக்கிறேன். நாங்கள் வேறு எங்கு போக முடியும் இங்கு பொங்கல் செய்யும் எல்லோருமே நேர்த்தி நிறைவேறியதால் பொங்கவில்லை. ஏதோ ஒரு ஆதலுக்காக பொங்குகிறார்கள்.

மிக கனத்துப்போன மனதுடன் இருக்கும் அந்த அம்மாவை இந்தக் கோயிலில் பல வருடங்கள் வந்து போகிறார். அவர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர். இன்னும் மீள்குடியமர்வு செய்யாத நிலையில் உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருக்கிறார். நீண்ட தூரத்திலிருந்துவரும் சில பறவைக் காவடிகளையும் தேவாரங்களுடன் வரும் சில காவடிகளையும் பார்த்துக் கொண்டு தொடர்ந்து பேசினார்.

இம்முறை சனங்கள் குறையவே வந்திருக்கிறார்கள். முன்புடன் ஒப்பிடும் பொழுது கால்வாசியினால்தான் வந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் நீண்ட காலம் வராமல் இருந்தவர்கள். வன்னிக்கு வெளியில் இருந்து வந்தவர்கள், முஸ்லீம்கள் என முக்கால்வாசிப்பேர் புதியவர்களாக இருக்கிறார்கள்.

இங்கு அந்த அம்மா குறிப்பிடும் பொங்கல் நிகழ்வுகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கோயிலில் நேர்த்தியை நிறைவேற்றியமைக்காக அப்படி பொங்குவதும் ஒரு சிறப்பான நிகழ்வாயிருக்கிறது. வழமையான திருவிழாப்போல எதிர்பார்க்காமல் மிக குறைவான பானைகளை பொங்கலுக்காக தயார்படுத்தி வைத்திருந்த பொழுதும் அவற்றில் அதிகளவானவை பொங்கப்படாமல் அடுக்கப்பட்டு இருந்தன.

நான் புத்தளத்தில் இருந்து வருகிறேன். எங்கள் இடம் முள்ளியவளை. நாங்கள் 90 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து போயிருந்தோம். சமாதான காலத்தில் வந்து எங்கள் ஊரை பார்த்திருக்கிறேன். நான் ஊரைப் பார்க்க வேண்டும் என்று வந்தாலும் நாங்களும் இந்தக் கோயில் திருவிழாவுக்கு வந்துபோகும் பழக்கம் இருப்பதாக வாப்பா சொன்னார். அதனால் கோயில் திருவிழாவுக்கு கலந்துகொள்ள வேண்டும் என்பதால் கொழும்பு போன்ற பல இடங்களில் வேலை பார்த்துக்கொண்டிருந்த நமது நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து வந்திருக்கிறோம்.

இப்படி சொல்லும் ஒரு முஸ்லீம் சகோதரர் என்னுடன் தானாக முன் வந்து அறிமுகம் செய்துகொண்டு பேசினார். அப்படி, முஸ்லீம் சகோதரர்கள் பலர் பேருந்துகளில் வந்தார்கள். அங்கிருந்த பலரை தேடிச் சென்று தங்களை அறிமுகப்படுத்திப் பேசிக் கொண்டிருந்தார்கள். இறுதியில் நள்ளிரவளவில் கோயிலை விட்டு புறப்படும் பொழுது வழியில் ஒரு முதியவர் பேசிக்கொண்டு வந்தார்.

வற்றாப்பளை அம்மாள் சக்தி மிக்கவள் என்றும் அவள்தான் இந்தப் பகுதி மக்களை மீள இந்த இடத்திற்கு எங்களை கொண்டு வரப் பண்ணினாள் என்றபடி புன்னகைத்தார். படைகள் பாம்புகளை பார்த்தாகவும் அவைகள் மிரட்டியதாலும் அவர்களுக்கு, நோய் உண்டாகியதாலும்தான் எங்களை இந்த இடத்திற்கு குடியமர்த்தினார்கள் என்றும் பிரமிப்புடன் சொல்லுகிறார். இந்த வருடத்தில் அம்மாளுக்கு திருவிழா செய்வது மட்டுமல்ல முல்லைத்தீவுப் பகுதிக்கு நாங்கள் குடியேற எத்தனை ஆண்டுகள் ஆகுமோ என்ற ஏங்கியிருந்தோம் என்றும் அவர் குறிப்பட்டார். இப்படி தமிழ் மக்களின் வாழ்க்கை, அன்றாட நிகழ்வுகள், நம்பிக்கைகள் என்று எல்லாவற்றுடனும் இந்தக் கோயில் இணைந்திருப்பதை தரிசனமாகப் பார்க்க முடிகிறது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் நினைவலைகளில்.....
# நன்றி நவிலும் அழைப்பு

அன்னையின் மடியில்
25 ★ 06 ★ 1973



ஆண்டவன் அடியில்
14 ★ 04 ★ 2010

## அமரர் அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் (நிமால்)
### (இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதி)

அன்பான அப்பா! காவலரனாக இருந்த- உம்மை
காலவன் காவு கொண்ட தேனோ?
சோதியாய் சுடர்விட்ட எமது இல்லம்- உமது பிரிவால்
சோலை இழந்து போவதையா....
காலவன் கண்ணுற்றானோ!- எங்கள் களிப்பை
பாலர் நாம் பதறிப் பரிதவிக்கின்றோம்- பாரினிலே
நேரிலே எப்போ நீங்கள் வருவீர்கள்
நிஜமாக............அப்பா!!..........

அன்னாரின் ஆத்மசாந்தித் திருப்பலிப் பூசை இன்று (28.05.2010) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சாவகச்சேரி லிகோரியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

30.05.2010 ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி கலாசார மண்டபத்தில் மதியபோசன நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிப் பயணத்தின்போது உதவிக்கரம் நீட்டிய இலங்கைப்போக்குவரத்துச்சபை தலைமைப்பணிமனை உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம், திருகோணமலை, பருத்தித்துறை, இரத்தினபுரி இ.போ.ச.சாலை உத்தியோகத்தர்கள், காப்பாளர்கள், சாரதிகள், வடபிராந்திய தனியார் சிற்றூர்திச் சங்கத்தின் சேவையினர், தென்மராட்சி வலயக்கல்விப்பணிமனை உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், வழிபாடு நடத்திய அருட்தந்தையர்கள், லிகோரியார் தேவாலய பாடகர் குழாம், வழிபாட்டு குழுவினர், பூலனூர் கென்றியரசர் தேவாலய அருட்தந்தையர்கள், வழிபாட்டுக் குழுவினர், பங்கு மக்கள் திருவுளப்பணியோர் சபையினர், தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்கள், நல்லடக்கப் பவனியில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், ஜேர்மனியில் வசிக்கும் அருட்தந்தை அவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசன நிகழ்வுகளுக்கு அழைப்புக்கள் கிடைக்கப் பெறாதவர்கள் இவ்வழைப்பை ஏற்று வருகை தருமாறு அன்போடு அழைக்கின்றோம்.

பிறப்பு என்று ஒன்று உண்டெனில்
இறப்பு என்பது நிச்சயம்.
மீண்டும் மெசியாஸ் பிறந்திட.....ஆமென்.

இல.25, பர்க வீதி,
சாவகச்சேரி.
தொ.பே.: 0213217898.

குடும்பத்தினர்.

(98767)

### முறிகண்டிப் பகுதியில் முன்னர் கடை வைத்திருந்தோர் பாதிப்பு

நல்லூர், மே 28

முறிகண்டி ஆலயச் சூழலில் ஏற்கனவே வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பலருக்கு மீண்டும் அங்கு தமது கடைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தற்சமயம் அங்கு இரண்டு கூட்டுறவுக் கடைகள் மட்டுமே உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் இப்பகுதியில் தொழில்செய்து வந்த சுமார் 100 குடும்பங்கள் தொழில்வாய்ப்பின்றிப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதே வேளை இப்பகுதியில் பெரிய அளவிலான நவீன ரக ஹோட்டல் ஒன்று கட்டப்படுவதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. (எ-111)

### சூழல் பாதுகாப்பு வரி மீளளிப்பைப் பெறவும்

நவாலி, மே 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகதில் மோட்டார் வாகன வரிஅனுமதிப் பத்திரத்தினை இவ்வரும் ஜனவரி முதலாந் திகதி யிலிருந்து 5ஆம் திகதி வரை பெற்றுக் கொண்டவர்களில் சூழல் பாதுகாப்பு வரி மீளளிப்பினை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்குள் பெற்றுகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ-100)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.





ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணைப்
புங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
02 . 05 . 1923



விண்ணில்
21 . 05 . 2008

## அமரர் வேலுப்பிள்ளை சிவசம்பு
### (ஓய்வுபெற்ற அதிபர்)
திதி: பிரதமை (28.05.2010)

அன்னை மடியில் தொடங்கி, ஆண்டவன் அடியில்
இணையும் வரை ஊர் போற்றும் உத்தமனாகத் திகழ்ந்தீர்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (சி/567975)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# நினைவலைகள்

பிறப்பு
01.07.1939

இறப்பு
20.05.2008





பிறப்பு
19.09.1941

இறப்பு
04.05.2008

## அமரர் இராசையா முருகேசு

## திருமதி முருகேசு கமலாதேவி

எமது குடும்பத்திற்கு அணையா விளக்காக இருந்து ஒளி கொடுத்து
எங்களுக்கு நல்வழி காட்டிய எமது பாசமிகு உயிர்த் தெய்வங்களே!
திடீர் என அணைந்த விளக்குகளினால் எமக்கு வழி காட்டிகள் இல்லாமல் தடுமாறுகின்றோம்
ஆனாலும் உறுதியுடன்எழுந்து நிற்க முயற்சிக்கின்றோம் உங்கள் கனவுகளை நனவாக்கிட.

எம்மை விண்ணிலிருந்து வழிநடத்தும் பாசதெய்வங்களே !
இரண்டு ஆண்டுகள் என்ன நாம் இருக்கும்வரை உங்கள் ஞாபகங்கள் மறையாது.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கச்சாய் றோட்,
ஆத்தியாடி ஒழுங்கை, கொடிகாமம்.

(98710)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமகிழ்வான வாழ்க்கைக்கு வழிகாட்டும் யோகா

ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.



'' ஆசனம் பிராணாயாமம்
அனுதினம் பயில
ஆட்டும் பிணி அகன்று
ஆரோக்கிய உடலும்
ஆனந்த உளமும்
ஆயுள் நூறும்
ஆண்டவன் அருளும்
அடைவது உறுதி''

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து தனது உணவு, உடை, சுற்றுப்புறம் இவற்றை உணர்ந்து சீரமைத்துக் கொண்டு வந்துள்ளான். அதே நேரத்தில் தனது உடல் நலத்துக்கான சில பயிற்சிகளையும் செய்து கொண்டு வந்துள்ளான். சாதாரண உடற்பயிற்சிகள் உடல் வலிமையைப் பெறுவதற்கு உதவுகின்றன. ஆயினும் உடலின் சீரான இயக்கத்திற்கு உறுதுணையான உள்ளுறுப்புக்களின் ஆரோக்கியத்தை இவைகள் போதிய அளவில் பேணுவதில்லை என்பது உடலியலாளர்களின் கருத்தாக உள்ளது.

யோகாசனப் பயற்சிகளே பூரணமான முறையில் உடலையும்,உள்ளத்தையும் ஒருங்கிணைத்து வலிமை பெறச் செய்கின்றன என்பது ஆன்றோரின் கருத்தாகும். யோகம் என்பது இணைதல் அல்லது ஒரு நிலைப்படுத்தல் எனப் பொருள்படுகின்றது. உடலின் ஒவ்வோர் உறுப்பையும் அதன் நுண்ணிய பகுதிகள் உட்பட பூரணமாக அசைத்து வளைத்து முறுக்கி, உள்ளத்தோடு இணைத்து ஒருமித்துச் செயற்படச் செய்வது யோகாசனப் பயிற்சிகளின் தனிச் சிறப்பாகும்.

மனதை மட்டுமல்லாமல் குறிப்பிட்ட உடலின் பகுதிகளையும் ஒருநிலைப்படுத்தி அவற்றின் சக்தியை ஒன்று திரட்டி இயக்குவதற்கு ஆசனங்கள் எனப்படும். பயிற்சி முறைகள் பெரிதும் உதவுகின்றன. பயிற்சிகளின்போது மனதையும்,உடல் உறுப்புக்களையும் சீராகச் செயற்படுத்துவதற்கு சுவாசம் இணைப்புப் பாலமாக விளங்குவது யோகாசனத்தின் விசேட தன்மையாகும். மனம், உடல்,செயல் என்ற மூன்றையும் இணைத்துச் செயல்படுத்துவதற்குத் தேவையான பயிற்சியை யோகாசனம் வழங்குகின்றது.

யோகாசனம்

* சோர்வு, களைப்பு என்பவற்றை விரட்டி சுறுசுறுப்பான உள்ளத்தையும், உடலியக்கத்தையும் கொடுக்கும்.
* கட்டான உடல் வனப்பையும் முகத்தில் தேஜஸை உண்டாக்குகின்றது.

அமைதியும், தெளிவும் உறுதியும் கொண்ட உள்ளத்தையும் சிந்தனையோட்டத்தையும் தருகின்றது.

* உள்ளத்தில் பதட்டம், உணர்ச்சி வசப்படும் தன்மை என்பவற்றை குறைக்கும்.
* சமநிலை மாறாமல் வாழ்க்கையில் ஒழுகுவதற்கும், செயற்படுவதற்கும் தேவையான மனப் பக்குவத்தையும், உடல் உறுதியையும் வழங்கும்.
* ஆரோக்கிய வாழ்வையும் நீண்ட ஆயுளையும் வழங்கும்.
* ஞாபக சக்தியை அதிகரிக்கின்றது.
* ஆண்மையை அதிகரிக்கின்றது.
* தூக்கமின்மையும், பசியின்மையும் போக்கி மலச்சிக்கலையும், செரியாமையையும் நீக்குகிறது.
* நீண்டநாள் வியாதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.
* சுவாச உறுப்புக்கள், நரம்புகள், தசைகள்,சுரப்பிகள் என எல்லாவற்றிற்கும் புத்துயிர் அளிக்கிறது.
* சீரான உணவுமுறைகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றையும், நற்சிந்தனை, நல்லொழுக்கத்தையும் வளர்க்கின்றது.
* கோபத்தை மாற்றவும், கொடுந்துயர் மறக்கவும் வழிவகை செய்கிறது.
* நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகின்றது.

மனித வாழ்விற்கு சகல வழிகளிலும் அவசியமான யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு உபகரணங்களோ, கருவிகளோ அவசியமில்லை - உறுதியான தீர்மானமும் விடாமுயற்சியும் மட்டும் இருந்தாலே போதும். ஆண்களும், பெண்களும் எந்த வயதினரும் யோகாசனப் பயிற்சிகளில் அவரவரின் உடல் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.

'' ஆன்மா அறியாது
ஆனால் அறிவிக்க முடியும்''

*(இன்னும் வளரும்)*

# பூக்களும் குழந்தைகளும்

பேரறிஞர் பெர்னாட்ஷார்வைக் காணவந்த நண்பர் ஷாவின் வீட்டைச் சுற்றிப்பார்த்தார். வீட்டைச் சுற்றிலும் ஏராளமான பூச்செடிகள் இருந்தன. அந்த வீட்டின் முகப்புப் பகுதியிலிருந்த பூந்தோட்டம் பூத்துக்குலுங்கி எழிலுடன் இருந்தது. உடனே ''ஷா ! இந்தப் பூக்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. ஆனால் உங்களுக்கு இரசனையே இல்லையே.

வீட்டைச்சுற்றிலும் அழகான பூச்செடிகளை வளர்க்கும் நீங்கள் வீட்டிற்குள் வெறுமையாக வைத்திருக்கிறீர்கள். இந்த அழகான மலர்களைப் பறித்து அலங்கார ஜாடிகளில் வீட்டுக்குள் வைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! '' உங்களுக்குப் பூக்களைப் பிடிக்காதா?'' என்றார்.



அதற்கு பெர்னார்ட் ஷா, பட்டென்று '' எனக்குக் குழந்தைகளை ரொம்பவும் பிடிக்கும். அதற்காக குழந்தைகளின் கழுத்தைத் திருகி அலங்காரமாக எனது வீட்டிற்குள் வைக்க முடியுமா?''என்றார். செடிகளைச் சிரச்சேதம் செய்து பூக்களை ரசிப்பதை விட செடியைச் சுமங்கலியாக பூவுடன் வாழ விடுவது உயர்ந்த பண்பாடு என்கிறேன். நமக்குப் பிடித்தவற்றைத் தனி உடைமையாக்கி அனுபவிக்க நினைப்பது ஆணவம் என்கிறேன். சுயநலம் என்கிறேன். அதில் அழகுணர்ச்சியை விட ஆக்கிரமிப்பு உணர்வு அதிகம் என்கிறேன்.

*(சொன்னவர் - சுகி சிவம்.)*

# துறவுக்குத் தகுதி என்ன?



சுவாமி விவேகானந்தர் நரேந்திரனாக இருந்தபோது துறவறம் மேற்கொள்ள விரும்பினார். ஆனால் தமது தாயாரின் அனுமதி வேண்டுமென்று காத்திருந்தார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தாயாரிடம் தமது துறவு விருப்பத்தைத் தெரிவிப்பார். ஒருமுறை அவ்வாறு துறவுக்கு அனுமதி கேட்டபோது ''சமயலறைக்குப் போய் அங்கிருந்து கத்தியை எடுத்து வா'' என்றார் அன்னை. விவேகானந்தர் கத்தியைக் கொண்டுவந்து கொடுத்ததும் '' கொஞ்சநாள் போகட்டும். பிறகு நீ சந்நியாசியாகலாம்'' என்று கூறிவிட்டார். எப்போதெல்லாம் துறவற விருப்பத்தை தமது தாயிடம் வெளியிடுகிறாரோ அப்போதெல்லாம் இதே நாடகம் நடந்தேறியது. துறவுக்கும் கத்திக்கும் என்ன சம்பந்தம் என்று விவேகானந்தருக்கும் புரியவேயில்லை.

ஒருமுறை இவ்வாறு கத்தியைக் கொண்டுவந்து விவேகானந்தர் கொடுத்ததும் '' இனி நீ துறவுக்குப் போகலாம். தடையில்லை'' என்றாராம் அன்னையார். துறவுக்கு அனுமதி கூறும் பொழுதெல்லாம் கத்தியைக் கொண்டுவரச் சொன்ன காரணம் தெரிந்துகொள்ள விரும்பினார் விவேகானந்தர்.

அன்னையார் சிரித்துக் கொண்டே'' முன்பு ஒவ்வொருமுறையும் நான் கத்தியைக் கொண்டுவரச் சொன்னபோதும் பாதுகாப்பான கைப்பிடியை நீ பிடித்துக்கொண்டு ஆபத்தான கூர்மைப் பகுதியை என்பக்கம் நீட்டுவாய், ஆபத்து பிறருக்கு, பாதுகாப்பு உனக்கு என்கிற சுயநல உணர்ச்சியின் வெளிப்பாடு அது. ஆனால் நாளாகநாளாக ஆபத்தான கூர்ப்பகுதியை நீ பிடித்துக்கொண்டு பாதுகாப்பான கைப்பிடிப் பக்கத்தை என் பக்கம் நீட்டத் தொடங்கினாய். மகனே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்கிற சுயநலம் நீங்கி பிறரைப் பாதுகாக்க வேண்டும் என்ற தியாக உணர்வு உனக்கு ஏற்பட்ட பிறகே துறவுக்கு அனுப்பச் சம்மதித்தேன்'' என்றார்.

சுயநலமுடைய எவனும் துறவியாகவே முடியாது. தியாகமே துறவின் அத்திபாரம்.

*(சொன்னவர்: கோவை உமா மகேஸ்வரி)*

# இப்படியும் ஒரு விமர்சனம்



பிரெஞ்சு சக்கரவர்த்தி 18ஆம் லூயி புத்தகம் ஒன்றை எழுதினார். தமக்கு வேண்டியவர்களிடம் அந்த நூலைக் கொடுத்து வாசிக்கச் சொன்னார். மன்னன் எழுதிய நூலாயிற்றே! அன்றைய தினத்தில் பிரான்சில் ஒரு புகழ்பெற்ற பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. அது நடுநிலைப் பத்திரிகை, அப்பத்திரிகைக்கு தாம் எழுதிய நூலை அனுப்பி விமர்சனம் எழுதுமாறு சொன்னார் மன்னர்.

சில தினங்கள் கழித்து அந்த நடுநிலைப் பத்திரிகை அந்த நூலைப்பற்றிய மதிப்புரையை பின்வருமாறு எழுதியிருந்தது. '' இந்த நூல் மன்னரால் எழுதப்பட்டிருந்ததால் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது. மன்னரைத் தவிர வேறு யாரும் இந்நூலை எழுதியிருந்தால் விமர்சனத்திற்கே அருகதையற்றது!''

*(தகவல் - அன்புமதி அருகதையற்றது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 08

## வினாத்தாள் - II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

✱ பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

காட்டில் சிங்கம் ஒன்று மனிதன் விரித்த வலையில் விழுந்து துடித்தது. ஒரு நுளம்பு பறந்து வந்து சிங்கத்தின் மூக்கில் கடித்தது. சிங்கம் நுளம்பைப் பார்த்துக் கர்ஜித்து மிரட்டியது. ''உனக்கென்ன தைரியம் சிங்கராஜாவையே கடிக்குமளவுக்கு தைரியம் உனக்கு எப்படி வந்தது'' நுளம்பு பவ்வியமாகக் கூறியது. ''மனிதன் விரித்த வலையில் நீ விழுந்து கிடக்கிறாய்! ஆனால், மனிதனோ எனக்குப் பயந்து வலை கட்டி அதற்குள் விழுந்து கிடக்கின்றான். உனக்கேன் பயப்பட வேண்டும். நான் ராஜாவாம் ராஜா! சிறைப்பட்ட பின் எதற்கு ராஜாப்பட்டம்'' சிங்கத்திற்கு தலை சுற்றியது.

01. இவ்வுரையாடலில் பங்குபெறும் இரு பிராணிகளும் எவை?

..........................................................................

02. விழுந்து கிடக்கிறாய் - இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய்ச்சொல் எது?

..........................................................................

03. சிங்கம் கர்ச்சிப்பதுபோல புலி யாது செய்யும்?

..........................................................................

✱ ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

04. சிங்கம் - ..............................

05. தைரியம் - ..............................

✱ எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

06. விழுந்தது - ..............................

07. வந்தது - ..............................

08. நுளம்பினால் பரப்பப்படும் நோய்கள் 2 தருக.

1) ..............................................

2) ..............................................

09. ''பவ்வியமாகக் கூறியது'' என்பதினால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

..........................................................................

10. மேலே உள்ள உரைப்பகுதியில் வந்துள்ள சினைப்பெயர் ஒன்று தருக.

..........................................................................

11. உரைப்பகுதியிலுள்ள உயர்திணை நிகழ்கால வினைமுற்று எது?

..........................................................................

12. இவ் உரைப்பகுதியிலுள்ள சம்பவத்திற்குப் பொருத்தமான பழமொழி ஒன்று தருக.

..........................................................................

✱ கருத்துள்ள வாக்கியங்களாக ஒழுங்குபடுத்துக.

13. துன்பம் / கூடாது / நாம் / விளைவித்தல் / பிறருக்கு

..........................................................................

14. நிறைய / உண்டு / எங்கள் / பாடசாலையில் / வளங்கள்

..........................................................................

✱ பின்வரும் தொடர்கள் உணர்த்தும் கருத்தினை எழுதுக.

15. கண்ணும் கருத்துமாக வளர்த்தல்:

..........................................................................

16. தோள்கொடுத்தல்: ..............................

✱ பின்வரும் சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

17. தனது சொந்த இருப்பிடம், சொத்துக்களை இழந்து நிற்பவன்

..............................

18. மனைவியை இழந்தவன் ..............................


✱ பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

19. நுளம்பு ..............................

20. பறவைகள் ..............................

✱ பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் தருக.

21.




✱ பின்வருவனவற்றிற்கான சிங்களச் சொற்களை எழுதுக.

22.



..............................

23.



..............................


✱ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

24. எமது தேசியக்கொடியில் காணமுடியாதது,
1) அரசிலைகள் 2) வாழேந்திய சிங்கம்
3) பச்சைநிறக்கீலம் 4) தர்மச்சக்கரம்

25. தண்டுத்துண்டங்களைக்கொண்டு புதிய கன்றுகளைப் பெறமுடியாதது,
1) கரும்பு 2) மரவள்ளி
3) வாழை 4) செவ்வரத்தை

26. கதிர்காமக்கந்தன் தீர்த்தமாடும் நதி எது?
1) மகாவலி கங்கை 2) மாணிக்க கங்கை
3) களனி கங்கை 4) களுகங்கை

27. பின்வருவனவற்றில் பருந்தின் அலகு எது?

1) 

2) 

3) 

4) 

28. மட்பாண்டத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் உபகரணம் ஒன்று,
1) வனைச்சில்லு 2) நாம்புவ
3) தீதாள் 4) அத்தாங்கு

29. சமையலறையில் பாதுகாப்பதற்காக அணிந்துகொள்வது,
1) தலைக்கவசம் 2) ஏப்ரன்
3) கையுறை 4) காலுறை

30. இக்குறியீட்டின் விளக்கம்,



1) தொடர்பாடல்
2) சமாதானம்
3) பாதுகாப்பு
4) சரணாலயம்

31. ஆடையில் படிந்த தார்க்கறையைக் கழுவி நீக்குவதற்கு உகந்தது,
1) அசற்றோன் 2) வினாகிரி.
3) எலுமிச்சம்பழச்சாறு. 4) மண்ணெண்ணெய்.

32. இவ் உடுக்கோலத்தின் பெயர்,



1) பெருங்கரடி
2) கலப்பை
3) விருட்சிகம்
4) சிம்மம்

33. ''விகடகவி'' எனப்படுவோன்,
1) கோமாளியாக வேடந்தாங்கி நடிப்பவன்.
2) இயற்கையாகவே கவி இயற்ற வல்லவன்.
3) நகைச்சுவையாகப் பேசவும் பாடவும் வல்லவன்.
4) அரச சபைக் கவிஞராக இருப்பவன்.

34. இலங்கையின் தேசிய கீதத்திற்கு இசையமைத்தவர்,
1) அமரதேவா 2) இளையராஜா
3) ஏ.ஆர்.ரகுமான் 4) ஆனந்த சமரக்கோன்.

35. இலங்கையின் கலாசார முக்கோணப் பிரதேசம் என்பது,
1) அநுராதபுரம், கண்டி, பொலன்னறுவை.
2) கண்டி, கொழும்பு, பொலன்னறுவை.
3) அநுராதபுரம், பொலன்னறுவை, மன்னார்.
4) அநுராதபுரம், பொலன்னறுவை, யாழ்ப்பாணம்.

✱ பின்வரும் கோட்டுப்படங்களினுள் மறைந்திருக்கும் பிராணிகளின் பெயர்களை எழுதுக.

36.




..............................

37.



..............................

38.



..............................

39.



..............................

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

✱ பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.

40.

..............................

41.

..............................

42.

..............................

43.

..............................

✱ பின்வரும் விலைப்பட்டியலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| அரிசி | 1 kg | 36.00 |
| தேங்காயெண்ணெய் | 1/2 $l$ | 36.00 |
| தீப்பெட்டி | 9 | 27.00 |
| சவர்க்காரம் | 2 | 43.00 |
| பென்சில் | 8 | 36.00 |
| துணி | 1 m | 43.00 |

44. 2kg அரிசி, 1 டசின் தீப்பெட்டி ஆகிய வற்றின் விலையைக் காண்க.

(.......................................)

45. 1 லீற்றர் தேங்காயெண்ணெய், 3 பென்சில்கள் ஆகியவற்றின் விலை யாது?


(.......................................)

46. சிட்டையிலுள்ள அனைத்துப் பொருட்களையும் வாங்கிவிட்டு ரூபா 300 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

(.......................................)

✱ பின்வரும் வட்டவரைபினை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

A, B, C, D என்ற 4 கிரிக்கெட் வீரர்கள் குறித்த போட்டி ஒன்றில் பெற்ற ஓட்டங்கள் வட்ட வரைபிலே காட்டப்பட்டுள்ளன. இங்கு C என்ற வீரர் அதிகூடிய 150 ஓட்டங்களைப் பெற்றார்.




47. A என்பவர் பெற்ற ஓட்டங்கள் எத்தனை?

(.......................................)

48. சம எண்ணிக்கையில் ஓட்டங்களைப் பெற்ற வீரர்கள் யாவர்?

(.......................................)

49. போட்டியிலே அரைச்சதம் பெற்ற வீரர்கள் யார்?

(.......................................)


50. இப்போட்டியில் A, B, C, D ஆகிய நான்கு வீரர்களும் பெற்ற மொத்த ஓட்டங்கள் எத்தனை?

(.......................................)

✱ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக.

51. 12cm நீளமும் 8cm அகலமும் கொண்ட செவ்வக வடிவ கடதாசி அட்டை ஒன்றில் இருந்து பக்க நீளம் 2cm கொண்ட எத்தனை சிறிய சதுரங்களை வெட்டமுடியும்?

(.......................................)

52.



இவ்வுருவின் சுற்றளவு யாது?

(.......................................)

53. பி.ப 3.35 என்பதை நியம நேரத்தில் தருக.

(.......................................)

54. 621 மாபிள்களை மூன்று பிள்ளைகளிடையே சமமாகப் பகிர்ந்தால் ஒருவருக்குக் கிடைக்கும் மாபிள்கள் எத்தனை?

(.......................................)

55. A, B, C, D, E .... என்ற ஒழுங்கில் மொத்தமாக 121 எழுத்துக்கள் எழுதப்பட்டிருப்பின் D என்ற எழுத்து எத்தனை தடவைகள் இடம் பெற்றிருக்கும்?

(.......................................)

56. கூட்டுக. 1/4 + 5/8 = (.......................)

57. நிறந்தீட்டப்பட்ட பகுதியைத் தசம எண்ணாகத் தருக.



(.......................................)

✱ ''எனது பாடசாலைப் பூந்தோட்டம்'' எனும் தலைப்பில் கருத்துள்ள ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களேனும் இருப்பதோடு எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக அமையவேண்டும்.

58. ..............................................................................

59. ..............................................................................

60. ..............................................................................

61. ..............................................................................

62. ..............................................................................

36. ..............................................................................

(நிறைவுற்றது)

## விடைகள்: முன்னோடிப் பரீட்சை இல.07, வினாத்தாள் II

01. 1-செல்பேசி/கைத்தொலைபேசி,2-✱அறிவு+இயல்✱தவிர்த்து+விடுவாய், 3-மற்றவர்க்கு துன்பம் ஏற்படாது, 4-நீ, 5-✱கையில், ✱கொடை, ✱இடர், 6.கையில், 02. பரீட்சையில் சித்தி அடைவதற்கு பயிற்சி மிக முக்கியமானதாகும். 03.1-சிறைச்சாலை, 2-தபுதாரன், 04. 1-ப்ழங்கள், 2-நூலகம், 3-பவளம். 05.1-உறவினர், 2-பூவும். 06. 1-Moon, 2-Telephone, 3-Picture, 4-Vehicles. 07.1-இர பாயனவா, 2-ஹொந்தாய் யமு. 08.4 , 09.4, 10.2, 11.2, 12.3, 13.1, 14.3, 15.2, 16.2, 17.2, 18.3, 19.1, 20.4, 21-3, 22.1, 23.3, 24.1, 25.2, 26.4, 27.2, 28.2, 29.2, 30.3, 31.1, 32.2, 33-3 34.3 35.4, 36-ரபான் அடித்தல், 37.மாட்டு வண்டி சவாரி, 38.வழுக்குமரம் ஏறுதல், 39.முட்டி உடைத்தல், 40.தலையணை அடி, 41.படகு ஓட்டம், 42.3, 44.3மாபிள்கள், 43.ரூபா1000, 45.700 முத்திரைகள், 46.5 பஸ்கள், 47.5 துண்டுகள், 48.6, 49.21m, 50.2000g, 51.65 பிஸ்கட்டுகள், 52.10 தடவைகள், 53.300 ரூபா, 54.பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

## விடைகள்: முன்னோடிப் பரீட்சை இல.08, வினாத்தாள் I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-3 | 02-2 | 03-3 | 04-2 | 05-1 | 06-2 | 07-2 | 08-2 | 09-2 | 10-1 |
| 11-2 | 12-3 | 13-2 | 14-1 | 15-3 | 16-2 | 17-2 | 18-1 | 19-3 | 20-1 |
| 21-1 | 22-2 | 23-2 | 24-2 | 25-1 | 26-1 | 27-3 | 28-2 | 29-2 | 30-3 |
| 31-14 | 32-ஒரு நாள் | | 33-4 | 34-40/= | | 35-20/= | | 36-110/= | |
| 37-சரியாக நிறந்தீட்டப்பட்ட பகுதி. | | | | | 38-140mதூரம் | | 39-2 | 40-கிழக்கு. | |

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்:
P.பரமதயாளன்,
சது/ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம், வீரமுனை.

கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/071-4273035



மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இல்ல மாணவர் தலைவர்களும் மாணவர்களும் சத்தியப்பிரமாணம் செய்து நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சின்னஞ் சூட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. கைலாசநாதன், 16 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் திருமதி பு. பாலசுப்பிரமணியம் ஆகியோர் மாணவிகளுக்கு சின்னஞ் சூட்டுவதை படங்களில் காணலாம். (படங்கள் 38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம் - புங்கங்குளம் வில்லையடி
# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய
# வருடாந்த பொங்கல் விழாச் சிறப்புமலர்

**28.05.2010**

## வில்லையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

### அம்பாளின் அருட்பார்வை

யாழ்.குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால், இந்தப் புங்கங்குள அம்மனின் அருட் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று.

இன்றைக்கு சுமார் 44 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருள் பார்வை இவ்விடத்தில் தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை அறிவும், ஆற்றலும், தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்ல மரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அருளையும் அருட் தோற்றத்தையும் தெய்வீக மேவீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து தெய்வீக மேவீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர்.

காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ்.நகரிலே புங்கங்குளப் பகுதியிலே வில்வ மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிகமிக மேலோங்கி புள்ளவமை குறிப்பிடத்தக்க விடயம்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவச நிலை அம்பாளைத் தரிசிக்க வரும்போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள் அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடு கின்ற தன்மை. அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கிறதோர் இனம் தெரியாத தெய்வீக நடமாட்டம். அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை. அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக் குழம்பின்மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.


### நம்பியே கை தொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ்.நகரில் புங்கங்குளம் பகுதி வில்லை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

அம்பிகையைச் சரண் புகுந்தால்
அதிக வரம் பெறலாமே.
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே.

கே.வைத்திலிங்கம்



வில்லை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகல புங்கங்குளத்தூர் புகுந்து
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்


கட்டடப் பொருள்கள்,
உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர்
உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்கள்
கே.வைத்திலிங்கம் அன் கொம்பனி
38, 40, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.தொ.பே: 2075

இளவரசி
சேலைச்சோலை
(பட்டு புடவைகளின் சாம்ராஜ்யம்)
நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222503

கோயிலுக்குத் தேவையான பட்டு
சரிகைத் துணிகள், பட்டு
வேட்டிகள், சால்வைகள் மற்றும்
நவீன சாறி வகைகள்
முதலியவற்றுக்கு நாடுங்கள்
அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும் அசல்
22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம்
மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
சிறிநதியா நகைமாடம்
டிஜிற்றல் கலர் லாப், வீடியோ அன் ஸ்டூடியோ
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
கச்சான் பிஸ்கட்
தயாரிப்பு: T.S.நாதன்
இல.96/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 2491

தரமான நல்ல பொருள்களை நீங்கள்
நயமாக வாங்கிக்கொள்ள நாடுங்கள்
வேல் முருகன் வணிக நிலையம்
(முருகன் றேடர்ஸ்)
56A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான
மரங்களை எந்நேரமும் சகாய விலை
களில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
அன்னை மரக்காலை
உரிமையாளர்: க.முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகூட்டும் தங்க
ஆபரணங்களுக்கு நீங்கள்
நாடவேண்டிய இடம்
அலங்கார் நகை மாளிகை
21/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும்
விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
தம்பிப்பிள்ளையும்
மைந்தரும் நகைமாடம்
191(343), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

குளிர்பானம் தயாரிக்கும் தரமான
பொருள்களுக்கு நம்பிக்கையான
ஸ்தாபனம்
ஸ்ரீ காந் எசன்ஸ் அன் குறோசரிஸ்
161, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 2219.

தரமான குளிர்பான வகைகளுக்கும்
ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்
ஐடியல் கிறீம் ஹவுஸ்
458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும்
நகைகளை ஓடருக்குப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
சானுகா நகைமாடம்
200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 3700

மின் உபகரணங்கள், மின்சாரப்
பொருள்கள் நியாய விலையில்
பெற்றுக்கொள்ள
அபிராமி
எலக்றிக்கல்ஸ்
62/31,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக
முறையில் அழகிய தங்க நகைகளை
குறித்த தவணையில்
செய்துபெற்றுக்கொள்ள
பூரணி நகைமாடம்
1/4, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே: 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய
நகைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த
நல்ல இடம்
சோபனா நகைமாளிகை
116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கொனிக்கா கலர் லாப்
சிறிராம் ஜுவெல்லர்ஸ்
193, கஸ்தூரியார் வீதி.
தொ.பே: 0212228334

உங்கள் இளமைக்கு மேலும் மெரு
கூட்டும் கண்கவர் 22 கரட் தங்க நகை
களைப் பெற்றிட சிறந்த ஸ்தாபனம்
உதயா ஜுவெல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
81, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

நவீன டிசைன்களில்
நாகரிகத்திற்கேற்ப தங்கப்பவுண்
நகைகளை நயமாகச்
செய்துகொள்ள
சிறி மீனாட்சி ஜுவெல்லர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சபேஸ்
போட்டோ
இல.193/4, சபா லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
இல. 105,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2226953


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்த ஆட்சியில் இருக்கும்வரை ஒருபோதும் ஆயுத கலாசாரம் தலைதூக்காது

## கல்முனை பொலிஸ் அதிகாரி நௌபல் தெரிவிப்பு

அம்பாறை, மே 28

''பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவு கட்டி வளர்க்கப்படல் வேண்டும், பிரதேசங்களில் மறைமுகமாக நடைபெறும் குற்றச் செயல்கள் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் ஒழிக்கப்படல்வேண்டும் என்ற நல்ல நோக்கங்களுக்காகவே சிவில் பாதுகாப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்குப் பெறுமதியான அடையாள அட்டைகள் வழங்கியிருப்பது டன் அடிக்கடி கலந்துரையாடல்களையும் நடத்தி வருகின்றோம்.''

- இவ்வாறு கல்முனை பொலிஸ் நிலையப் பொலிஸ் - பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுப் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபல் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே பொலிஸ் - பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுப் பொறுப்பதிகாரி நௌபல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

''பொதுமக்களின் உதவி ஒத்தாசை இன்றி நாட்டில் நடைபெறும் குற்றச்செயல்களை ஒழித்துவிட முடியாது. மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் கொலைக்கான குற்றவாளிகளை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. காரணம் சம்பவம் நடைபெற்று சிறிது நேரத்துக்குள் அந்த இடம் நீரினால் கழுவப்பட்டு விட்டது. அதனால் தடயங்களை வைத்துக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாது என்பதற்கு இது உதாரணமாகும்.

இப்பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் சிலர் போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ளனர். இந்தப் போதைப்பொருள் பாவனை காரணமாக இப்பிரதேசத்திலுள்ள ஒரு பெற்றோர், ''தமது மகனை எங்களால் திருத்தி வளர்க்க முடியவில்லை; நீங்கள்தான் திருத்தித்தர வேண்டும்'' எனப் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பை ஒப்படைத்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது. எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். சிவில் பாதுகாப்புக் குழுக்களில் உள்ளவர்களும் போதைப்பொருள்கள் விநியோகம் செய்பவர்கள் பற்றித் தகவல் தெரிவிக்க வேண்டும்.

எமது பிரதேசங்களில் அரசியல் குரோதத்திற்கோ, பிரிவினைவாதத்திற்கோ, பயங்கரவாதத்திற்கோ ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. நாம் சகலவற்றையும் மறந்து அனைவரும் ஒன்றுபட்டவர்களாக இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்காக உழைக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்வரை இந்நாட்டில் ஆயுத கலாசாரம் இனிமேல் ஒருபோதும் தலைதூக்காது.

தற்போதைய பொலிஸ் மா அதிபர், பொலிஸ் - பொதுமக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் பொருட்டு பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றார். பொதுமக்கள் பொலிஸ் உயர் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து முறையீடு செய்யக் கூடிய வாய்ப்பும் இன்று வழங்கப்பட்டிருக்கிறது - என்றார். (ஏ)

# கிராமங்களின் அபிவிருத்தியே எனது பிரதான நோக்கம்

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 28

''கிராமப்புறத்தில் உள்ள மக்கள் பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தபடவேண்டும். எனவே, கிராமப்புறங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்''

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கூறினார்.

செங்கலடி பிரதேசத்தின் படுவான்கரைப் பகுதியின் ஈரளக்குளம் கிராம அதிகாரி பிரிவிற்கு திடீர் விஜயம் மேற்கொண்டு அங்கு மக்கள் மத்தியில் உரை வழங்கிய போதே மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''மட்டக்களப்பு மாவட்டம் ஆழிப்பேரலையாலும், யுத்த சூழலாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியாகும். இதிலும், படுவான்கரைப் பகுதி எனக் குறிப்பிடும் பகுதி யுத்த சூழலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இங்கு வாழும் மக்கள் இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், இப்பகுதி மக்களுக்கு இதுவரை அவர்களது மீளக்குடியமர்வுக்கான உதவிகள் முற்றாக நிறைவு செய்யப்படாத நிலையில் உள்ளன. இதனால் இம்மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளேன். ஏனெனில் கிராமப்புறங்களை அபிவிருத்தி செய்வதே எனது நோக்கமாகும்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஏற்ற வீடுகளை அரசு வழங்காமல் உள்ளது. யானைகளின் தொல்லைகளால் துன்புறும் இப்பகுதி மக்கள் மேலும்பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இங்கு ஒழுங்கான போக்குவரத்து வசதியில்லை; தபால் தொடர்பு முறைகள் இல்லை; தபால் கந்தோர் இல்லை;சில காலங்களில் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுகிறது; மருத்துவ வசதிகள் இல்லை; மின்சார வசதியில்லை; இவற்றுக்கு மத்தியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான ஒழுங்கான கொடுப்பனவு முறைகள் நடைபெறவில்லை. இது போன்ற பல பிரச்சினைகளைக் கொண்டுள்ள இம்மக்கள் பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் தங்கள் குடும்பங்களை நடத்தி வருகின்றனர். எனவே இம்மக்களுக்கு ஏற்ற வசதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளேன்''- என்றார். (ஏ)

# புலமைப்பரிசில் பரீட்சை மாணவருக்கு துரித மீட்டல் விசேட செயற்றிட்டம்

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று - 2 கல்விக்கோட்டப் பாடசாலைகளிலிருந்து இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு துரித மீட்டல் விசேட செயற்றிட்டமொன்று அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

பரீட்சைத் திணைக்களத்தினால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தேசிய ரீதியாக நடத்தப்படவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.சுகுமாரன் தெரிவித்தார்.

ஏறாவூர்ப்பற்று - 2 கல்விக்கோட்டத்திற்குட்பட்ட 24 பாடசாலைகளைச் சேர்ந்த 300 மாணவர்களுக்காக 200 மணித்தியாலங்களைக் கொண்ட காலை, மாலை நேர மீட்டல் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் மாணவர்களின் அடைவு மட்டத்தை மதிப்பீடு செய்து தேவையான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக 10 மாதிரிப் பரீட்சைகளை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு மாணவர்கள் பரீட்சைக்கு விடையளிக்கும் விதம் தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதுடன், கற்பித்தல் அணுகுமுறைகள் தொடர்பாக ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்குடன் விசேட பயிற்சி செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஏ)

# சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியில் நாளை பொலிஸ் நடமாடும் சேவை

அம்பாறை, மே 28

பொலிஸ் நடமாடும் சேவை கல்முனையை அடுத்துள்ள சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும் எனக் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொலிஸ மா அதிபர் மஹிந்த பாலசூரிய கலந்துகொள்ளும் இந்தப் பொலிஸ் நடமாடும் சேவையில் முறைப்பாடுகள் பதிவு செய்தல், முறைப்பாடுகளை விசாரணை செய்தல், முறைப்பாட்டுப் பிரதிகள் வழங்குதல், இப்பிரதேச மத்தியஸ்தர் சபையை நடத்துதல் ஆகிய செயற்பாடுகள் நடைபெறவுள்ளன.

அத்துடன், போக்குவரத்து ஒழுங்குகள் சம்பந்தப்பட்ட கருத்தரங்கு, பெண்களுக்கு எதிரான வன்முறை, பெரும் குற்றம் - சிறு குற்றம் என்பன குறித்த விளக்கம், போதைப்பொருள் பாவனை சம்பந்தமான கருத்தரங்கு என்பன நடைபெறும். அதே வேளை, இலவச வைத்திய சிகிச்சைகள், பற்சிகிச்சை, மூக்குக் கண்ணாடி வழங்குதல் என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நடமாடும் சேவையில் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர், அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர், அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கல்முனைப் பொலிஸ் அத்தியட்சகர், கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்படப் பலர் கலந்துகொண்டு பொதுமக்களுக்குச் சேவையை வழங்குவார்கள் எனக் கல்முனை பொலிஸ் நிலையப் பொலிஸ் - பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுப் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபல் தெரிவித்தார். (ஏ)




# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கழிவறையின்றி மாணவர் அவதி

மட்டக்களப்பு, மே 28

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் போதியளவு கழிவறை வசதிகள் இல்லாமையால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெண்கள் பயன்படுத்திவந்த விலங்கியல் பீட பகுதியில் இருந்த கழிவறை பூட்டப்பட்டு அது அலுவலர்களுக்கு மாத்திரம் என எழுதப்பட்டுள்ளமையால் குறிப்பாக மாணவிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்த மாணவர்கள் இளைப்பாறும் மண்டபமும் மூடப்பட்டுள்ளது. தற்போது பெண்களுக்கு மாத்திரம் வசதியற்ற சிறிய மண்டபம் வழங்கப்பட்டுள்ளது எனவும் மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தற்போது மாணவர்கள் பயன்படுத்திவரும் கழிவறைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே இடத்தில் அமையப்பெற்றுள்ளமையால் குறிப்பாக மாணவிகள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களின் நலன் கருதி இவ்விடயத்தைக் கருத்தில் எடுக்கவேண்டும் எனப் பல்கலைக்கழக நலன்விரும்பிகள் கோருகின்றனர். (ஏ)

# கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் சட்டதிட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும்

அம்பாறை, மே 28

'' கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் சட்டதிட்டங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றி நடக்க வேண்டும்'' - என்று கல்முனை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.ஷரீப் முஹம்மட் தெரிவித்தார்.

பெரிய நீலாவணை அக்பர் கிராம மாதர் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுக்கு 'நெக்டப்' திட்டத்தின் கீழ் சுய தொழில் முயற்சிக்காக கடனுதவி வழங்கிய வைபவம் சமீபத்தில் அக்பர் கிராமம் சனசமூகக் கட்டடத்தில் நடைபெற்றபோது உரையாற்றுகையிலேயே ஷரீப் முஹம்மட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவி எஸ்.எல்.எஸ். மர்ஜானி தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கிராம உத்தியோகத்தர் எம்.ஐ.எம். நஸ்மி, சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஷரீபா சாஜஹான் உட்பட சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இங்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மேலும் கூறியவை வருமாறு:-

''மக்களின் சுயதொழில் மேம்பாட்டுக்காகவே நெக்டப் திட்டத்தின் மூலம் கடனுதவி வழங்கப்படுகிறது. இந்தக் கடனைப் பெறுகின்றவர்கள் சுயதொழிலை அக்கறையோடு செய்து, பெற்ற கடனை மீளச் செலுத்த வேண்டும்.

அதேபோன்று, கடனைத் திருப்பிக் கொடுப்பது மாத்திரமே நோக்கமாக இருக்கக்கூடாது. கடனைச் செலுத்துவதோடு தொழிலை மேம்படுத்தி சேமிப்பையும் மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் நீங்கள் கடனில்லாது சுதந்திரமாகத் தொழில் செய்யமுடியும்.

சங்கத்திற்குச் சந்தா செலுத்துவதன் மூலம் சங்கத்தை வளர்க்க முடியும். சங்கம் சிறப்பாக இயங்கினால் வெவ்வேறு வழிகளில் நன்மைகளைப் பெற்று சங்க உறுப்பினர்கள் பயனடைய முடியும்.

எனவே, ஒவ்வொருவரும் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடந்து சங்கத்தைச் சிறந்த முறையில் கட்டியெழுப்ப முன்வர வேண்டும் - என்றார். (ஏ)

# வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த வாசகர் வட்டங்கள் அமைப்பு

மட்டக்களப்பு, மே 28

கிழக்கு மாகாணத்தில் மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் வகையில் வாசகர் வட்டங்களை அமைப்பதற்கு கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட செயலகங்களின் கலாசாரப் பிரிவுகளின் மூலமாக இது தொடர்பான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக புதிதாக வாசகர் வட்டங்களை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[illegible] குறையாத அங்கத்தவர்களைக் கொண்டு அமைக்கப்படும் இந்த வாசகர் வட்டங்கள் மூலமாக மாதாந்தம் ஒன்றுகூடல்களை மேற்கொண்டு வாசிப்புத் திறமைகளை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள் அமுல் படுத்தப்படவுள்ளன.

பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் நோக்கத்துடன் போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் கலாசார அமர்வுகளை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கலாசார உத்தியோகத்தர்கள் மூலமாக பிரதேச செயலக மட்டத்தில் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



சிறிய வேலை ஒன்றுக்கு நீண்ட நேரம் காத்திருக்கலாம். மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். தண்டச் செலவுகளை தவிர்க்க எதிலும் விழிப்போடு செயற்பட வேண்டும்.

### இடபம்



ஆடை, ஆபரணங்கள் வாங்கச் செல்லும் சிலருக்கு துணையாகச் செல்லலாம். பிரியமான சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் உண்டாகும். திடீரென சந்திக்கும் நண்பர்களை உபசரிக்க கணிசமான தொகையைச் செலவிடலாம். ஆனைமுகன் வழிபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம்.

### மிதுனம்



குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். இரண்டு நாட்களாக தடைபட்ட காரியம் ஒன்று இன்று நடக்கலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வரலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம்.

### கடகம்



மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். கொடுக்கல் வாங்கல்களில் கவனமுடன் செயற்பட வேண்டும். அரசு தொடர்பான காரியங்கள் தடையின்றி, அனுகூலமாக முடியும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என பயம் கொள்வீர்கள்.

### சிங்கம்



மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படுவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரிடலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். நீங்கள் எதிர்பார்த்த நேரத்தில் வராத பணவரவு ஒன்று இன்று கிடைக்கலாம். விமர்சனங்களை எதிர் கொள்ளலாம்.

### கன்னி



ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணலாம். தேக ஆரோக்கிய விஷயங்களில் அக்கறை காட்டுவீர்கள். ஆதாயமான நாள்.

### துலாம்



கடன் மிகுதிகளை, கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை திடீரென மாற்றி அமைக்க நேரிடலாம். பணிபுரிவோர் சக ஊழியர்களின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

### விருச்சிகம்



மற்றவர்கள் மத்தியில் உங்களின் பெருமையை காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். சில விடயங்களில் தயக்கம், தடுமாற்றத்துடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திக்கலாம். பிள்ளைகளுக்கு நல்ல ஆலோசனைகள் சொல்வீர்கள்.

### தனுசு



தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்களுக்கு பிடித்த ஒன்று, குடும்ப உறுப்பினர்களுக்கு பிடிக்காமல் போகலாம். தொழில் ரீதியாக சிலரிடம் கடுமையாக நடந்து கொள்ளலாம். நடக்குமோ, நடக்காதோ என, சந்தேகத்தில் இருந்த விஷயம் ஒன்று நல்ல விதமாக நடக்கலாம். தம்பதியரிடையே மனஸ்தாபம் உண்டாகலாம்.

### மகரம்



ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறுவீர்கள். நண்பர்களுடன் ஜாலியாக பொழுதுபோக்குவதில், அரட்டை அடிப்பதில் நாட்டம் செல்லும். சில வேலைகளை காலதாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். புதிய அனுபவங்களைப் பெறலாம். செவ்வாய் வழிபாடு சிறப்பு தரும்.

### கும்பம்



கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் அதிகரிக்கும். கடும் சிரமப்பட்டு சில வேலைகளை முடிக்க நேரிடலாம். தொழில் ரீதியாக சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும்.

### மீனம்



உங்களைப் பற்றிய ரகசியம் ஒன்று மற்றவர்களுக்கு தெரியலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். நண்பர் ஒருவருக்காக நீங்கள் மற்றொரு நண்பரிடம் உதவி கேட்கலாம். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும் நாள்.

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## மயூரி ரவிக்குமார்
### யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை

நான் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் பரீட்சையை எதிர்கொண்டு 7ஏசிஎஸ் எனும் பெறுபேற்றினைப் பெற்றுக்கொண்டது திருப்தியாகவுள்ளது.

பல நிறுவனங்களுக்குச் சென்று கல்வி கற்காமல் பாடசாலையிலும், மேலதிக ஒரு ஆசிரியரிடமும் கணித, விஞ்ஞானப் பாடங்களைக் கற்றுக் கொண்டேன். அத்துடன் பெற்றோரின் நெருக்கடி இல்லாத அளவான படிப்புமே எனது பெறுபேற்றுக்குப் காரணமாக அமைந்தது.

நான் இப்பெறுபேற்றினைப் பெறுவதற்கு துணைபுரிந்த எமது பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவில் கணிதத் துறையை தேர்ந்தெடுத்துள்ளேன். சாதாரணதரப் பரீட்சை பெரிய விடயமல்ல. உயர்தரமே எதிர்காலத்திற்கு முக்கியமென பலரும் தெரிவித்ததையடுத்து அதற்காக என்னாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன்.



## பவித்திரா கிருஷ்ணானந்தன்
### யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை

நான் தரம் 1 முதல் இன்றுவரை யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றேன். இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 6ஏ3பி என்ற பெறுபேற்றைப் பெற்றுள்ளேன். இப்பெறுபேறு எனக்கு மனமகிழ்வைத் தந்தது.

இப்பரீட்சையை எழுத முன்னர் சற்றுப் பயமாக இருந்தாலும் எழுதிய பின்னர் திருப்தியாக இருந்தது. இதற்காக பாடசாலையும், சயன்ஸ் அக்கடமியும் எனக்கு தனியாக கல்வி கற்பித்த ஆசிரியரும், கடந்த கால வினாத் தாள்களும் உறுதுணையாக இருந்தன. கடவுளுக்கும், குடும்பத்தினருக்கும், அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் உயர்தரத்தில் உயிரியல் துறையை தெரிவு செய்துள்ளேன். எதிர்காலத்தில் வைத்தியராக வருதலே எனது இலட்சியம் ஆகும்.



## வி.பிரியா
### நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

ஆரம்பக்கல்வியை பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்று இடைநிலைக் கல்வியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றேன்.தற்போது நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சையில் 7ஏ2பி சித்தியைப் பெற்றேன்.

எனது இச்சித்திக்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், பெற்றோர்கள், எனது சக மாணவர்களே காரணகர்த்தாக்கள். எனவே அவர்களிற்கு எனது மனமார்ந்த நன்றிகள்

நான் தற்பொழுது உயிரியல் பிரிவிலே கல்வி பயில்கிறேன். உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றினை பெறுவதற்கும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசியும், பெற்றோர், பெரியோர், ஆசிரியர்கள் அனைவரினதும் அருளும் ஆசியும் வேண்டி நிற்கிறேன்.



## முருகானந்தன் அபிராம்
### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

நான் ஆரம்பக் கல்வியை நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையில் கற்றேன். இடைநிலைக்கல்வியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் கற்று 6 ஏ 2பிசி பெறுபேற்றைப் பெற்று உள்ளேன்.

எனக்கு இப்பெறுபேறு கிடைக்க உறுதுணையாக இருந்து வழிகாட்டிய குடும்பத்தினர், பாடசாலை அதிபர் , பிரதிஅதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கலைத்துறையை தெரிவு செய்துள்ள நான் எனது இலட்சியப் பாதையில் வெற்றிபெற மாதா, பிதா, குரு, தெய்வம் என அனைவரதும் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

நேர்காணல்: மூர்த்தி, சுகந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.09.1991

* போராட்ட காலத்தில் எமது இழப்புக்கள் பொதுமக்களிடையே எம்மீது அனுதாபத்தையும், தங்களைப் புலிகள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தின என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் யாழ். பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.

* ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்த லலித் அத்துலத்முதலி மற்றும் பிரேமச்சந்திர ஆகியோரைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் லஷ்மன் செனிவிரத்னவும் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

02.09.1991

* விடுதலைப் புலிகளுடன் புதிதாகப் பேச்சுக்களைத் தொடங்க இவ்வாரம் வடபகுதிக்கு வரவிருந்த அமைச்சர் தொண்டமானின் உத்தேச விஜயம் தெற்கின் அரசியல் நெருக்கடி காரணமாக தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்குக்கு வெளியில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க நாம் அனுமதிக்க மாட்டோம் என் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு.

03.09.1991

* ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணை பிரேரணை போன்று பிரதமர் விஜேதுங்கவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சியினர் தயாராகி வருவதாகத் தெரிவிப்பு.

* ஜனாதிபதி பிரேமதாஸாவை பதவியிலிருந்து அகற்றும் முயற்சியின் பின்னணியில் இந்தியாவினதும் மேற்கு நாடுகளினதும் அழுத்தம் இருப்பதாகக் கூறப்படுவதை லலித் அத்துலத்முதலியும் காமினி திஸநாயகாவும் மறுப்பு.

04.09.1991

* நாடாளுமன்றத்துக்கு முன்னர் போல் நிறைவேற்று அதிகாரத்தை வழங்கும் நடைமுறையை மீண்டும் கொண்டுவர வேண்டுமா என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த ஜனாதிபதி பிரேமதாஸ இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

* ஜனாதிபதி பிரேமதாஸாமீது கொண்டுவரப்பட்டுள்ள குற்றவிசாரணை பிரேரணை மீதான தனது தீர்ப்பை சபாநாயகர் எம்.எச்.முஹம்மது இன்று வழங்கவிருப்பதாகத் தெரிவிப்பு.

05.09.1991

* இந்தியப் படைகளுக்கு எதிராகப் போராட அமைச்சரவை கலந்து ஆலோசிக்காமலேயே ஜனாதிபதி பிரேமதாஸ விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவிகளை வழங்கின என லலித் அத்துலத்முதலியும் காமினி திஸநாயகாவும் குற்றச்சாட்டுத் தெரிவிப்பு.

* இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை விடுதலைப் புலிகளின் வளர்ச்சி அரசுக்கு உணர்த்தியிருக்கிறது என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.

06.09.1991

* தம்மைப் பதவியிலிருந்து அகற்றும் சதியின் பின்னணியில் இஸ்ரேலிய உளவு அமைப்பான மொசாட் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி பிரேமதாஸ குற்றச்சாட்டு.

* கடும் சண்டை நடைபெற்றுவரும் முல்லைத்தீவு மற்றும் மணலாறு பகுதிகளில் இலங்கை விமானப் படை விமானங்கள் மேற்கொள்ளும் எரிகுண்டு வீச்சினால் காடுகள் தீப்பற்றி எரிவதாகத் தெரிவிப்பு.

07.09.1991

* விடுதலைப் புலிகள் பலம் பொருந்தியவர்கள் என்பதை நாம் ஏற்றாக வேண்டும். அவர்களை நாம் அழிப்பதற்கு முன்னர் நாடே அழிந்து விடும் என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

* ஐக்கிய தேசியக் கட்சியில் தங்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி லலித் அத்துலத்முதலி குழுவினர் தாக்கல் செய்த மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பு.

08.09.1991

* ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டாலும் அதுலத்முதலி, காமினி திஸநாயக உட்பட 8 நாடாளுமன்ற உறுப்பினர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகமாட்டாது என சட்டவல்லுனர்கள் தெரிவிப்பு.

* கொழும்பின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் அமைச்சர் தொண்டமான் இந்தியாவுக்குச் சென்றிருப்பது மேலும் அரசியல் ஊகங்களைக் கிளப்பியிருப்பதாகத் தெரிவிப்பு.

09.09.1991

* நிபந்தனையற்ற பேச்சுக்குத்தயார் என்ற விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் அறிவிப்பை அரசு கருத்திலெடுத்து அவதானித்து வருகின்றது என ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

* தமது உயிருக்கு ஆபத்து விளைவிக்க இஸ்ரேல் நாட்டு உளவுப் படையான மொஸாட் முயற்சிப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸ குற்றச்சாட்டு.

10.09.1991

* சர்ச்சைக்குரிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஜனாதிபதி எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கிவைப்பதை குழப்ப எதிர்க்கட்சிகள் முயற்சிக்கக் கூடும் என அரச தரப்பினர் அச்சம் தெரிவிப்பு.

* கடந்த ஆண்டில் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட 35 பொலிஸாரின் சட லங்கள் மட்டக்களப்புப் பகுதியில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டன என கொழும்பில் அரச தரப்பில் தெரிவிப்பு.

11.09.1991

* மணலாறுப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 10 நாள்களாக தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதலில் நேற்று மட்டும் 20 இராணுவத்தினர் உயிரிழந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு.

* மண்டைதீவுப் பகுதியில் இரண்டு கிணறுகளிலிருந்து 8 மனித எலும்புக் கூடுகள் நேற்று மீட்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

12.09.1991

* பிரிட்டனில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் கிட்டு அங்கிருந்து பிரான்ஸ்சுக்குள் பிரவேசித்த போதும் அங்கிருந்தும் வேறொரு நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார் என்று கொழும்பிலுள்ள பிரெஞ்சுத் தூதரகம் அறிக்கைமூலம் தெரிவிப்பு.

* இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து இந்திய மத்திய அரசு தீவிர பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிப்பு.

13.09.1991

* தமக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு யாழ். மாவட்ட ஈரோஸ் எம்.பிக்கள் 9 பேரின் ஆதரவைப் பெற ஜனாதிபதி பிரேமதாஸ முயற்சித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.

* இலங்கை அரசபடையினர் மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாக லண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் விமர்சிப்பு.

14.09.1991

* இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படையினருக்கும் இடையிலான யுத்தத்தில் மொத்தமாக 1165 இந்தியப் படையினர் உயிரிழந்ததாக இந்திய நாடாளுமன்றத்தில் மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 15 பேர் நேற்று கொழும்பில் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி அறிவிப்பு.

15.09.1991

* தீர்வுக்கான திட்டத்தை புலிகள் சமர்ப்பித்தால் தமிழருக்கு நியாயமான உரிமை வழங்குமாறு ஜனாதிபதியை நாம் வற்புறுத்த இயலும் என மல்வத்த மகாநாயக்க தேரர் தெரிவிப்பு.

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை குறித்து இன்னும் உறுதியான முடிவு இல்லை

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு,மே 28

'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை வழங்குவது தொடர்பாக இலங்கையுடன் தொடர்ந்தும் பேச்சுகளை மேற்கொள்ள உள்ளோம் எனத் தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையால் 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை மீண்டும் பெறமுடியுமா என்பது குறித்து எதனையும் தெரிவிக்க மறுத்துள்ளது.

''ஐரோப்பிய ஆணைக்குழு இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகைகளை தொடர்ந்து வழங்குவதா என்பது குறித்து ஆராய்ந்து வருகிறது. இதுகுறித்து இலங்கை அரசுடன் பேச்சுகளைத் தொடரவும் முடிவு செய்துள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேர்னாட் சவெஜ் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கையால் வரிச்சலுகையை மீளப் பெறமுடியுமா என்பது குறித்து அவர் எதனையும் தெரிவிக்க மறுத்துள்ளார்.

இலங்கையால் 'ஜி.எஸ்.பி.' வரிச் சலுகையைப் பெற முடியுமா எனக் கருத்துத் தெரிவிப்பதன் மூலம் தற்போது நடக்கும் பேச்சுகளை முந்திச்செல்ல முடியவில்லை. எது குறித்தும் இந்தத் தருணத்தில் நான் ஊகங்களை வெளி யிடவிரும்பவில்லை'' - என அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

# திஸ்ஸநாயகம் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு வாபஸ்

கொழும்பு,மே28

தமக்கு விதிக்கப்பட்ட இருபது ஆண்டு கால கடூழியச் சிறைத்தண்டனைக்கு எதிராக ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகம் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுக்கொள்ளும் ஆவணங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலக ஊடக சுதந்திர தினமன்று திஸ்ஸநாயகத்திற்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. எனினும், இந்த பொது மன்னிப்பை அமுல்படுத்துவதில் சில சட்ட் சிக்கல்கள் காணப்பட்டன.

தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக ஊடகவியலார் திஸ்ஸநாயகம் மேன்முறையீடு செய்திருந்தார்.

மேன்முறையீட்டு உத்தியோக பூர்வமாக வாபஸ் பெற்றுக்கொள்ளும் வரையில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை அமுல்படுத்த முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, தமது மேன்முறையீட்டை வாபஸ் பெற்றுக் கொள்வதாக ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகம் நீதிமன்றிற்கு சட்டத்தரணிகளின் ஊடாக அறிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு மனு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டவுடன் பொதுமன்னிப்பு அளிக்க முடியும் என சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (சி)

# ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் குரொடா இலங்கைக்கு விஜயம்

கொழும்பு,மே28

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஹருஹிக்கொ குரொடா மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்தார்.

நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து, ஆசிய அபிவிருத்தி வங்கியின் தற்போதைய நடவடிக்கைகள் தொடர்பில் இவர் கலந்துரையாடுவார்.

யுத்த சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகள், திட்டங்களுக்குத் தொடர்ந்து உதவி வழங்குவது குறித்தும் ஆராயப்படும் என வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் விஜயம் செய்யும் இவர், அங்கு தமது நிறுவனம் நிதி உதவி வழங்கவுள்ள பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பாதைப் புனரமைப்பு, கல்வி நடவடிக்கைகள், மின்சார வசதிகள், வைத்தியசாலை ஆகியவற்றைப் பார்வையிடுவார்.

வருட ஆரம்பத்தில் அவசர நிதி உதவியாக யுத்தப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு 15 கோடி அமெரிக்க டொலருக்கான அங்கீகாரத்தை வங்கி வழங்கியிருந்தது. கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதிவரை 21 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலரை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# கைத்தொலைபேசி மூலமான ஆபாச இணையங்களுக்கு தடை

கொழும்பு,மே28

கையடக்கத் தொலைபேசி மூலமான ஆபாச இணையத்தளங்களைத் தடை விதிக்க கொழும்பு சிறுவர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தது.

இதுதொடர்பில் உரிய கையடக்க தொலைபேசி நிறுவனங்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்குமாறு மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெற்றோர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தொடர்ச்சியான முறைப்பாடுகளை அடுத்தே இந்தப் பிரச்சினைக்கு நீதிமன்றம் மூலமாகத் தீர்வு காணப்பட்டுள்ளது என்று பொலிஸின் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு தெரிவித்தது.

# இந்துக் குருமார்களுக்கு சிறப்புப் பயிற்சி; இந்திய விரிவுரையாளர்கள் வருகின்றனர்

கொழும்பு,மே28

நாட்டிலுள்ள ஆலயங்களில் பூசைக் கடமைகளை மேற்கொள்ளும் அந்தணர் அல்லாத இந்துக் குருமார்களுக்கு இரண்டு வார கால சிறப்புப் பயிற்சியொன்றை வழங்குவதற்காக தமிழ்நாடு கிராமக் கோயில் பூசாரிகள் பேரவையைச் சேர்ந்த நான்கு விரிவுரையாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இவ்வதிவிடப் பயிற்சி நெறியின் போது பூசகர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள், ஆலயங்களின் அனுஷ்டான விதிமுறைகள், அர்ச்சனை முறைகள், கிரியைகள் தொடர்பான விளக்கங்கள், முறையான மந்திர உச்சாடனங்கள், பிரார்த்தனை தியானப் பயிற்சிகள், எளியமுறை யோகாசனப் பயிற்சிகள், திருமுறைப் பஜனைப் பாடல்கள் போன்ற விடயங்களில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தொடர்ச்சியாக ஆலயங்களிற் பணிபுரிகின்ற 45 வயதுக்குட்பட்ட, முதற்தடவையாக பயிற்சி பெறவிரும்பும் பூசகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. சிறந்த முறையில் வதிவிட ரீதியில் அமையவுள்ள இப்பயிற்சி நெறியில் தமது பூசர்களைப் பங்கேற்கச் செய்யுமாறு ஆலயப் பரிபாலன சபையினரை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கேட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட பூசர்களுக்கே இப்பயிற்சி நெறி வழங்கப்படுகின்றமையால் பயிற்சியைப் பெற விரும்பும் பூசகர்கள் உடனடியாக தமது முழுப்பெயர், முக வரி, பணிபுரியும் ஆலயத்தின் பெயர் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு, '' பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்களம், 248,1/1 காலி வீதி, கொழும்பு-04 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2124 திகதி 26 - 05 - 2010

ஆங்கில எழுத்திற்கும் W

வெற்றி எண்கள் 06 18 33 45 போனஸ் இல: 09

ஜக்பொட் பரிசு ரூ. 20,204,025/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 167541 | 20/- | 3,350,820/- |
| 2 இல | 11962 | 100/- | 1,196,200/- |
| 3 இல | 253 | 1,000/- | 253,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6726 | 40/- | 269,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 498 | 1,000/- | 498,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,204,025/- | - |
| 1 இல + போனஸ் இல | 8036 | 100/- | 803,600/- |
| 2 இல + போனஸ் இல | 372 | 500/- | 186,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 310 | 200/- | 62,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,141,160/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 195738 | | 8,741,160/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொணராகலை | 201918052-4-15 |
| பொலன்னறுவை | 201923328-7-25 |
| புத்தளம் | 201919819-9-27 |
| மட்டக்களப்பு | 201926783-2-22 |
| கம்பஹா | 201929534-9-40 |
| கொழும்பு | 201935938-9-18 |
| கண்டி | 201930164-3-07 |
| காலி | 201930902-0-40 |
| அநுராதபுரம் | 201929865-1-36 |
| மாத்தறை | 201920947-2-26 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 20,661,150/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 மே 29 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

# ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 24 திகதி - 26.05.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து O அதிர்ஷ்ட இலக்கம் 07 வெற்றி இலக்கம் 9 9 9 9 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O 07 9 9 9 9 7 | ரூ. 10,295,146.00 | - |
| 1 பரிசு | 07 9 9 9 9 7 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 9 9 9 9 7 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 9 9 9 7 | ரூ. 10,000.00 | 24 |
| 4 பரிசு | 9 9 7 | ரூ. 1,000.00 | 247 |
| 5 பரிசு | 9 7 | ரூ. 50.00 | 2386 |
| 6 பரிசு | 7 | ரூ. 20.00 | 22857 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 9 9 9 9 | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | 9 9 9 | ரூ. 100.00 | 241 |
| 9 பரிசு | 9 9 | ரூ. 50.00 | 2373 |
| 10 பரிசு | O | ரூ. 20.00 | 9261 |
| 11 பரிசு | O 07 | ரூ. 100.00 | 1054 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,720,810.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
2342, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 10,295,146.00

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சொந்தமாக வியாபாரம் நடத்தும் விவாகரத்துப் பெற்ற 50 வயதுடையவருக்கு 40 வயதிற்கு உள்ளடங்கிய விவாகரத்துப் பெற்ற அல்லது கணவனை இழந்த மணமகள் தேவை.

விளம்பர இல:- 4026, C/O உதயன்

## வேலைக்கு ஆள்கள் தேவை

தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு ஆண்/ பெண் வேலையாள்கள் உடனடியாகத் தேவை. பக்கிங் (Packing) செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம். தொடர்பு:- 0771393670

R.S.மகேஸ்வரன்(அப்பனக் கொம்பனி), சீனிப்புளியடி(ஆரம்பப் பாடசாலை அருகில்), K.K.S வீதி, இணுவில்.

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பணிப்பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 0777260974

## காணி வீடு விற்பனை

தேவாலய வீதி, மல்லாகத்தில் 2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு

தொடர்பு:- 0777145235, 0718869785

# மன்னாரில் வெகுவிமரிசையாக வெசாக் கொண்டாட்டங்கள்

மன்னார்,மே 28

மன்னாரில் உள்ள பௌத்த விகாரைகளிலும், காவல் நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்களிலும் வெசாக் வைபவங்கள் நேற்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. அத்துடன் அரச அலுவலகங்கள் மற்றும் தலைமைக் கட்டடங்கள், பொதுவைத்தியசாலைகள் என்பவற்றிலும் வெசாக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

இராணுவ முகாம்களின் நுழைவாயில்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்ததோடு வெளிச்சக் கூடுகளும் அழகாகக் காட்சியளித்தன.

மன்னார் சாந்திபுரம், தலைமன்னார் துறை, பறையன் ஆலங்குளம் (சபுமல்புர) மடுவீதியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகளில் நாள் முழுதும் பிரித் தோதப்பட்டதுடன் மக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (எ-80)

# பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

மன்னார்,மே 28

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் மன்னார் மாவட்டக் கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகஸ்தர் தெரிவும் நடைபெறவுள்ளதாக மன்னார் கிளைச் செயலாளர் அஸ்ஸெய்க் ஏ.எல்.எம். நியாஸ் மௌலவி ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

மன்னார் முன் வீதி முகைதீன் ஜூம்மா பள்ளி வளாகத்தில் அஸ்ஸெய்க் எஸ். அரூஸ் மௌலவி தலைமையில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிறு காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்திற்கு மன்னார் கிளை அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் படி வேண்டப்படுகின்றது. (எ-80)

# இடமாற்றம்

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றிய திருமதி சுபாஜினி கோகுலன் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இதே வேளை மாவட்ட சமூகசேவை அலுவலகத்தில் கடமையாற்றிய திருமதி தர்ஷினி கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு மிக அண்மையில் இடமாற்றம் பெற்றுள்ளார். (எ-121)

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 06.03.1932

உதிர்வு: 28.05.2000

## நீக்கிலஸ் யோசவ்

(ஆசீர்வாதம்)
கரம்பொன்

அன்பும் பண்பும் அறிவும் பாசமும் பொழிந்து
உயர் வாழ்வு வாழ நல்வழி காட்டி
பலன் காணமுன் பறந்து விட்டீங்களே அப்பா
ஐயிரண்டாண்டுகள் ஓடி மறைந்ததுவோ
ஐயன் யேசு திருவடியில் அமைதி பெற்றனையோ
பல் கலையும் கற்று பல் தொழில்கள் செய்து
நல் உறவுடன் எல்லோரையும் கவர்ந்தவரே
முத்தான மூன்று புத்திரரை தந்து
சொத்தாக இங்கு விட்டு சென்றனையோ
எத்தடைவரினும் உங்கள் கனவுகள்
அத்தனையும் நனவாக வாழ்ந்து காட்டுவோம்
நித்திய செல்வமாய் தேவுலகு தேடி
சத்திய மறைக்கேற்ற மைந்தனாய் வாழ்ந்து
இறை திருவடி தேடி அமைதியுற்றாயோ
அப்பா உயிர் உள்ளவரை மறவோம்
ஆத்ம சாந்திக்காய் நித்தம் செபிப்போம்.

நீங்கா நினைவுடன்:
மனைவி,மக்கள்,
மருமக்கள்.
சில்லாலை,
பண்டத்தரிப்பு.

(98777)

# ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 512
சீட்டிழுப்பு திகதி: 26.05.2010

வெற்றி எழுத்து: E வெற்றி இலக்கங்கள்: 01 23 27 36

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 14,473,811.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 199 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 387 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 9499 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 5467 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 136592 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 21789 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 5,793,760.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,977,531.20

ஓம் விராட் விஷ்வ பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் நினைவஞ்லியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 30.04.2010 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் மாணிக்கம் சிவபாதசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.05.2010) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்.வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை மறுதினம் (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்த வைபவத்திற்குத் தாங்களும் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

19, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(98786)

குடும்பத்தினர்.


# கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

## மகளிருக்கான 3 மாத சான்றிதழ் பயிற்சிகள்

- **கேக் ஐசிங்,** Sugar Flowers, Fondant, மற்றும் ஏனைய ஐசிங்வகைகள்.
- **உணவு தயாரித்தல்** (கேக் வகைகள், பீஸா, Pastry, சிற்றுண்டிகள், ஈற்றுணவுகள்)
- **பப்றிக் வர்ணம் தீட்டுதல் :** துணிகளில், கண்ணாடியில், சேலையில் (Saree Painting)
- **கை வேலை :** கம்பளி நூல், Soft Toys, கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள்.
- **பூ வேலை :** கடதாசி, துணி, Paper Ribbon, ஜெலற்றின், கபாயா மலர்கள் செய்தல்
- Saree Work : சேலையில் முத்துக்கள், சுயிக்கின்ஸ் கட்டுதல், Net Work செய்தல்
- **கூந்தல் அலங்காரம் :** 50 வகையான கொண்டைகள் போடுதல்,
- மேற்படி பயிற்சிகளின் இறுதியில் **Facial, Pedicure, Manicure,** முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல், Perming ஆரம்பமாகும்.

## 6 மாத உடை தயாரித்தல் (தையற் கலை) சான்றிதழ் பயிற்சிகள்


(அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள், சாரிபிளவ்ஸ் தைத்தல்)

- மேற்படி வகுப்புக்கள் வார நாட்களில் மட்டும் நடைபெறும்.
- தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், கவுண், சட்டை, Skirts தைத்தல் பயிற்சிகள்.
- வாரநாள்/சனி ஞாயிறு இரு பிரிவுகள்.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 31-05-2010 - திங்கட்கிழமை**

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஐக்கியப்படுத்தலுக்கான 2010' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்றையதினம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எஸ்.துஷிதரன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரச அதிபர் கே.கணேஷ், கல்லூரியின் அதிபர் அருட்தந்தை ஞானப் பொன்ராஜா, சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான தலைவர் ஹான்ஸ் பீற்றர் எற்ற ஆகியோர் அழைத்து வரப்படுவதையும்-

தேசியக் கொடியினை அரச அதிபர் கே.கணேஸும் பாடசாலைகளின் கொடிகளினை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் ஏற்றுவதையும் அணிவகுத்து நிற்கும் வீரர்களையும் முதல்வரிசைப் படங்களில் காணலாம்.

அரச அதிபர், கல்லூரி அதிபர் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும் முதல் போட்டியில் மோதும் மன்னார் சென்.சேவியர், கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரிகளின் போட்டியின் காட்சிகளில் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

# 'ஐக்கியப்படுத்தலுக்கான 2010' உதைபந்தாட்ட போட்டிகள் சென்.ஜோன்ஸில் நேற்று ஆரம்பமாகின

## அரச அதிபர் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைத்தார்

" ஐக்கியப்படுத்தலுக்கான 2010" என்னும் தொனிப் பொருளிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஞானப்பொன்ராஜா தலைமையில் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இப்போட்டிகள் ஆரம்பமாகின. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தின் 7 பாடசாலைகளும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 9 பாடசாலைகளும் கலந்துகொண்டன.

சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான அமைப்பு, கொல்சிம் சிமெந்து நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ், பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானங்களில் இப்போட்டிகள் நடைபெற்றன.

நேற்றுமுதல் நாள் காலையில் இடம் பெற்ற லீக் முறையிலான போட்டிகளில்

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் மன்னார் சென்.சேவியர், கல்லூரி அணி மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணி மோதியது. இதில் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஹென்றியரசர் கல்லூரியை 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டது.

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வெலிசிங்க ஹரிசந்திர கல்லூரி அணி, தேவரையாளி இந்துக் கல்லூரி அணிகள் வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கண்டி திரித்துவக் கல்லூரி அணியை எதிர்த்து வெலிசங்க ஹரிசந்திர வித்தியாலய அணி மோதியது. இதில் வெலிசிங்க ஹரிசந்திர வித்தியாலய அணி தன்னைஎதிர்த்துவிளையாடிய கண்டி திரித்துவக் கல்லூரி அணியை 5:2 என்றகோல்கணக்கில்வெற்றிகொண்டது.

யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் தேவரையாளி இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெறவிருந்த ஆட்டம் யாழ்.மத்திய கல்லூரி அணி போட்டிக்கு சமுகமளிகாததால் தேவரையாளி இந்துக் கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்தக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணியை எதிர்த்து அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்தக் கல்லூரி அணி மோதியது.

இதில் அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்தக் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை சென். ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் காலிறுதிப்போட்டிகளும் நாளை சனிக்கிழமை காலை அரையிறுதிப் போட்டிகளும் மாலை மூன்றாம் இடத்துக்கான போட்டியும் ,இறுதிப்போட்டியும் நடைபெறவுள்ளன. (6-23)

## செவிப்புலன் வலுவற்றோர் வி.கவின் விளையாட்டுப் போட்டி இன்று

வலி.வடக்கு,மே 28

யாழ்.மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டுப் போட்டிகள் இன்று காலை 6.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகாவித்தியாலய மைதானத்தில் தலைவர் கெ.பிரகாஷ் தலைமையில் நடைபெறவுள்ளன.

இன்றைய போட்டியில் யாழ்ப்பாணம், கொழும்பு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இன்றைய நிகழ்வுகளாக சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், 100 மீற்றர், 400 மீற்றர் ஓட்ட நிகழ்வுகள், கயிறு இழுத்தல் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட்போட்டி கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ளது. (6-86)

# பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேப் போட்டி; கொக்குவில் இந்துக் கல்லூரி மாவட்ட சம்பியன்!

வலி.வடக்கு, மே 28

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 9 ஓட்டங்களைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தார்கள்.

10 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு ஆடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை ஓட்டம் பெறமுடியாதவாறு கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர்கள் தடுத்து நிறுத்தினார்கள்.

மத்திய கல்லூரி வீரர்கள் ஓட்டங்களைப் பெற பெரு முயற்சி மேற்கொண்ட போதிலும் அதற்கான வாய்ப்புகள் கிடைக்காத நிலையில் ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்று யாழ்.மத்திய கல்லூரி வீரர்கள் அனைவரும் ஆட்டமிழந்தார்கள்.

ஆட்டநிறைவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 9:1 ஓட்டங்கள் என்ற நிலையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனாகியது.

3ஆம் இடத்துக்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 4 ஓட்டங்களைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தார்கள்.

5 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து வீரர்களும் ஆட்டமிழந்தனர்.

ஆட்ட நிறைவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 4:2 ஓட்டங்கள் என நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (6-86)

# குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## யாழ்.மாவட்ட மட்ட உடற்பயிற்சி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 28

யாழ்.மாவட்ட கல்வி வலயப் படசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**பெண்கள் பிரிவு**

மானிப்பாய் மகளிர் கல்லூரி (முதலாமிடம்), இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம் (இரண்டாமிடம்), பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி (மூன்றாமிடம்).

**ஆண்கள் பிரிவு**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி (முதலாமிடம்), ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி (இரண்டாமிடம்), ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் (மூன்றாமிடம்). (6-23)

## மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், மே 28

இலங்கை மேசைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் சந்தனப்பெரேராவுடன் இணைந்து முன்னாள் தேசிய விளையாட்டு வீரர்கள் நடத்தும் மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (6)

## மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 28

மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும் என்று யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம் அறிவித்துள்ளது. (6)

## கிளிநொச்சி ம.வியின் மூன்று அணிகள் மாகாண மட்டப் போட்டிகளில்

யாழ்ப்பாணம், மே 28

மாகாண மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் மூன்று அணிகள் தகுதி பெற்றுள்ளன.

சதுரங்கப் போட்டிக்கு 15 வயதுப்பிரிவு, 19 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த அணிகளும் பூப்பந்தாட்டப் போட்டிக்கு 19 வயதுப் பிரிவைச் சேர்ந்த அணியுமே மாகாண மட்டத்திற்கு தெரிவாகியுள்ளன. (6-72-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்குச் சென்றுள்ள இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீலுக்கு செங்கம்பள வரவேற்பு

பீஜிங், மே 28

ஜனாதிபதி பிரதீபா பட்டீல், 6 நாள் சுற்றுப்பயணமாக சீனா சென்றடைந்தார். அவருக்கு அங்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

சீனாவில் சுற்றுப்பயணம் செய்ய வருமாறு சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தோ விடுத்த அழைப்பை ஏற்ற பிரதீபா பட்டீல் நேற்றுமுன்தினம் சீனாவுக்கு தனி விமானத்தில் புறப்பட்டார். முன்னதாக அவரை ஜனாதிபதி மாளிகையில், துணை ஜனாதிபதி அன்சாரி, பிரதமர் மன்மோகன்சிங், மத்திய அமைச்சர்கள், பிரமுகர்கள் வழி அனுப்பி வைத்தனர்.

மத்திய அமைச்சர் சுபோத் காந்த் சகாய், நாடாளுமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளருமான ஜெயந்தி நடராஜன், ராம்தாஸ் அகர்வால், ரகுவன்ஸ் பிரசாத், மற்றும் தொழில் அதிபர் குழுவினரும் ஜனாதிபதியுடன் சீனா சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் விமானம், சீனாவில் பீஜிங் சர்வதேச விமான நிலையத்தில் இறங்கியது. விமானத்தை விட்டு இறங்கி வந்த பிரதீபா பட்டீலுக்கு சிவப்புக் கம்பள் வரவேற்பு அளிக்கப்பட்டது.



சீனா சென்றடைந்த ஜனாதிபதி பிரதீபா பட்டீலுக்கு விமான நிலையத்தில் பூங்கொத்து கொடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டபோது.....

சீனாவின் வெளிவிவகாரத் துணை அமைச்சர் ஹூ-ஜென், சீனாவில் உள்ள இந்தியத் தூதர் ஜெய்சங்கர் மற்றும் சீன அதிகாரிகள் வரவேற்றனர். விமான நிலைய வரவேற்பு முடிந்ததும், பிர தீபா பட்டீல் அங்குள்ள விருந்தினர் மாளிகைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

சீனாவில் 6 நாள்கள் தங்கியிருக்கும் பிரதீபா பட்டீல், சீன ஜனாதி பதி ஹூ-ஜிந்தோ, சீன தேசிய காங்கிரஸ் தலைவர் ஹூ-பாங்கோ, பிரதமர் வென்ஜியாபோ ஆகியோரைச் சந்தித்து பேசுகிறார். இரு நாட்டு நல்லுறவு, பிரச்சினைகள், தொழில் சம்பந்தப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களில் பிரதீபா பட்டீல் கையெழுத்திடுகிறார்.

மத்திய சீனாவில் உள்ள லோயாங் நகரில் புதிதாக புத்தர் கோவில் கட்டப்பட்டுள்ளது. அதை இந்திய ஜனாதிபதி திறந்து வைக்கிறார். பிரபல தொழில் நகரமான ஷாங்காய் நகரில் நடக்கும் இந்தியா - சீன தொழில் கண்காட்சியையும் பிரதீபா பட்டீல் தொடக்கி வைக்கிறார்.

முன்னதாக டில்லியில் வெளிவிவகாரச் செயலாளர் நிரூபமா ராவ் செய்தியா ர்களிடம் கூறுகையில், இந்திய ஜனாதிபதியின் சீன பயணம், இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவை பலப்படுத்தும் என்று கூறினார்.

## ஊடுருவ முயன்ற இரு தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், மே28

இந்திய எல்லைக்கு ஊடுருவ முயன்ற தீரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சமரில் இரு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டம் குண்டநார் வனப் பகுதியில் அதிரடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். இதைத்தொடர்ந்து இராணுவத்தினரும் திருப்பிச் சுட்டனர். இரு தரப்புக்கும் இடையே நேற்றுமுன்தினம் மாலைவரை துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இதில் 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப் பட்டனர். பிணமாக கிடந்த அவர்கள் அருகே இருந்து துப்பாக்கிகள் மற்றும் வரைபடங்களை இராணுவத்தினர் கைப்பற்றினர்.

# இந்தியச் செய்திகள்

## ஐ.நாவில் இந்தியா இடம்பெற சீனாவின் ஆதரவு கோரப்படும்

விமானத்தில் ஜனாதிபதி பிரதீபா பட்டீல் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

சீனாவுடன் உள்ள எல்லைப்பிரச்சினை, சுமுகமான முறையில் பேச்சின் மூலம் தீர்வு காணப்படும். இருநாடுகள் இடையே நட்புறவை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாட்டு சபையில் 'வீட்டோ' அதிகாரம் கொண்ட 5 நாடுகளில் சீனாவும் ஒன்று. எனவே, ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியாவுக்கு இடம் கிடைக்க, சீனாவின் ஆதரவு கோரப்படும்.

மிகப்பெரிய அண்டை நாடான சீனாவுடன் நல்ல உறவை கொள்ளவே இந்தியா விரும்புகிறது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

நாடாளுமன்றத்திலும் பெண்கள் இட ஒதுக்கீட்டுப் பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும் என்பது எனது விருப்பம் - என்றார்.

## ஸ்ரீகாளஹஸ்தி இராஜகோபுரம் அடியோடு இடிந்து விழுந்தது!

### ஆந்திராவில் பக்தர்கள் அதிர்ச்சி



ஸ்ரீகாளஹஸ்தி, மே 28

இரண்டாகப் பிளந்து அபாயகரமான நிலையில் இருந்த ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவில் இராஜகோபுரம் நேற்றுமுன்தினம் இரவு 8.05 மணியளவில் அடியோடு இடிந்து தரைமட்டமானது. இதனால், இராஜகோபுரத்தின் அருகில் இருந்த 5 கடைகள், 5 வீடுகளும் இடிந்து விழுந்தன.

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் ஸ்ரீகாளஹஸ்தி நகரில் பிரசித்தி பெற்ற ஞானபிரசுனாம்பிகை உடனுறை ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர் சிவன் கோவில் உள்ளது.

இந்தக் கோவிலின் ராஜகோபுரம் 122 அடி உயரமாகும். இந்தன் கோவில் கடந்த 1516ஆம் ஆண்டு கிருஷ்ணதேவராய மன்னரால் கட்டப்பட்டது. 7 அடுக்குகளைக் கொண்ட இராஜகோபுரத்தில் அண்மையில் விரிசல் ஏற்பட்டது. கோபுரம் எந்த நேரத்திலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் இருந்தது.

இந்தநிலையில் இரண்டாக பிளந்து இருந்த இராஜகோபுரம் நேற்றுமுன்தினம் இரவு 8.05 மணியளவில் பயங்கரச் சத்தத்துடன் அடியோடு இடிந்து விழுந்தது. கோவில் இடிந்து விழுந்த சத்தம் சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு கேட்டது. கோவில் இடிந்து விழுந்த அதிர்வால் அருகில் இருந்த மக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

இராஜகோபுரம் இடிந்து விழுந்த இடத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் வீடுகளை விட்டு வெறியேறி விட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

எனினும் இடிந்து விழுந்த கோபுர கற்களில் பொதுமக்கள், பக்தர்கள் யாராவது சிக்கி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எனவே, மருத்துவக் குழுவினர், தீயணைப்பு படைவீரர்கள், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## நித்தியானந்தாவின் சிறைக்காவல் எதிர்வரும் 9ஆம் திகதிவரை நீடிப்பு

பெங்களூர், மே28

செக்ஸ் சர்ச்சையில் கைதாகி சிறையில் இருக்கும் நித்தியானந்தாவின் நீதிமன்ற காவலை ஜூன் 9 ஆம் திகதிவரை நீடித்து ராமநகர் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

நடிகை ரஞ்சிதாவுடன் நெருக்கமாக இருக்கும் ஆபாச காட்சிகள் வெளியானதை தொடர்ந்து தலைமறைவாக இருந்த நித்தியானந்தாவை, பெங்களூர் சி.ஐ.டி பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அவர் நீதிமன்றக் காவலில் ராமநகர் சிறையில் அடைக்கப்பட்டார். கடந்த 12 ஆம் திகதி நீதிமன்ற காவல் முடிந்து நித்தியானந்தாவை நீதிமன்றில் ஆஜர்படுத்தி இருக்க வேண்டும்.

அதற்கு பதிலாக அவரது காவலை நீடிக்க வேண்டும் என்று சி.ஐ.டி. பொலிஸார் மனு செய்திருந்தனர். அதன்படி, நித்தியானந்தாவின் காவலை வரும் 26ஆம் திகதிவரை நீடித்து ராமநகர் நீதிமன்று உத்தரவிட்டது.

அதன்படி, நேற்றுமுன்தினத்துடன் நித்தியானந்தாவின் காவல் முடிவடைந்து விட்டதால், அவரை சிறையில் இருந்து பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் ராமநகர் மாவட்ட தலைமை மாஜிஸ்திரேட்டு நீதிமன்றுக்கு அழைத்து வந்தனர். அதைத் தொடர்ந்து, மதியம் 12.10 மணிக்கு நீதிபதி புஷ்பாவதி முன்பு நித்தியானந்தாவை பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

இதைத்தொடர்ந்து, நித்தியானந்தாவை ஜூன் 9 ஆம் திகதிவரை நீதிமன்ற காவலில் வைக்க மாஜிஸ்திரேட்டு புஷ்பாவதி உத்தரவிட்டார்.

## இந்திய உறவுகளே காப்பாற்றுங்கள்! மலேஷிய ஈழத் தமிழர்கள் கதறல்

இந்திய உறவுகளே, எங்கள் உயிரைக் காக்கும் உரிமையை உங்களிடம் விடுகிறோம் - என்று மலேஷிய முகாம்களில் தவிக்கும் ஈழத் தமிழர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இந்திய உறவுகளே நாங்கள் உங்கள் சகோதரர்கள்தான். எங்களுக்காக எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். எங்களைக் காக்க தங்கள் உயிர்களையே மாய்த்துக் கொண்ட தியாகிகள் நிறைந்த ரத்த சொந்தங்களே, எங்களுக்காக எல்லோரும் ஒரு மணிநேரம் ஒன்று சேருங்கள்.

உங்களின் ஒன்று சேரும் சூழல், எங்கள் உயிரைக் காப்பாற்றும், உங்களின் குரலை உங்களின் அரசு கேட்கும்.

எங்கள் உயிரை காக்கும் உரிமையை இந்தியச் சொந்தங்களே உங்களிடம் விடுகிறோம். மரண வாயிலில் இருந்து இந்தக் கோரிக்கையை எழுப்புகிறோம் - என்று கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆந்திராவில் வான் - லொறி மோதியதில் 33 பேர் நசுங்கிப் பலி

அடிலாபாத், மே28

ஆந்திராவில், திருமணக் கோஷ்டியினர் சென்ற வேனும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், வானில் பயணம் செய்த 15 பெண்கள் மற்றும் சில குழந்தைகள் உட்பட 33 பேர் நசுங்கி பலியாகினர். மேலும் 24 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயங்கர விபத்து அடிலாபாத் மாவட்டத்தில் உள்ள தனபந்தா என்ற கிராமத்தின் அருகே நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் நடந்தது. விபத்துக்குள்ளான வானில் சுமார் 80 பேர் பயணம் செய்தனர் எனவும்-

அவர்கள் ராம்பூர் என்ற இடத்தில் நடந்த திருமணத்தில் கலந்து கொண்டு விட்டு கொத்தூர் கிராமத்துக்குத் திரும்பிய போது இந்த விபத்து நடந்தது எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ர)

## இலங்கையிலிருந்து தங்கக் கட்டிகளை வயிற்றினுள் வைத்து கடத்தியவர் கைது

### சென்னை விமான நிலையத்தில் மாட்டினார்

சென்னை, மே 28

இலங்கையிலிருந்து ரூபா 15 லட்சம் மதிப்புள்ள தங்கக்கட்டிகளை வயிற்றுக்குள் வைத்துக் கடத்தி வந்தவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்குள் விமானம் மூலம் தங்கம் கடத்தப்படுகிறது என கிடைத்த தகவலின்பேரில், இந்தியாவிலுள்ள அனைத்து விமான நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி நேற்றுமுன்தினம் இலங்கையின் கொழும்பு நகரிலிருந்து விமானம் ஒன்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு வந்தது. அந்த விமானத்தில் பயணம் செய்த பயணிகளை உற்பத்தி வரித்துறை அதிகாரிகள் கண்காணித்தனர்.

அப்போது இளைஞர் ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் காட்சியளித்தார். அவரைப் பிடித்து அதிகாரிகள் விசாரித்தனர். அவர் தன்னிடம் ஆட்சேபகரமான பொருள் எதுவும் இல்லை என்று கூறினார்.

எனினும் அவரைப் பிடித்து அதிகாரிகள் துருவிதுருவிச் சோதனை போட்டனர். அப்போது அவர் தனது வயிற்றில் மலக்குடல் பகுதியில் மறைத்து வைத்து, தங்கக்கட்டிகளை கடத்தி வந்திருக்கிறார் என ஒத்துக்கொண்டார்.

தங்கக்கட்டிகள் தனக்கு உரியவை அல்லன என்றும், தங்கக்கட்டிகளை சென்னைக்குக் கொண்டுவந்து கொடுத்தால் தனக்கு குறிப்பிட்ட தொகை கொடுப்பதாக சிலர் சொன்னமையின்பேரில் இச்செயலில் ஈடுபட்டார் எனவும் அவர் கூறினார்.

அதன்பின் அவரைத் தனியே அழைத்துச் சென்று, முறைப்படி அந்த தங்கக்கட்டிகளை வெளியே எடுத்தார்கள்.

அதன் எடை 800 கிராம். அதன் மதிப்பு ரூபா 14 லட்சத்து 83 ஆயிரத்து 200 ஆகும். அதிகாரிகள் அந்த இளைஞரைக் கைது செய்து மேலும் விசாரித்து வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப். நேட்டோ படைத்தளத்துக்கு வெளியே கார்க்குண்டு வெடிப்பு; வாகனங்கள் சேதம்!

கந்தஹார், மே 28

தென் ஆப்கானிஸ்தானிலுள்ள பெரும் நகரான கந்தஹாரில் உள்ள நேட்டோப் படைத்தளத்துக்கு வெளியே, புதன் கிழமை கார்க்குண்டொன்று பயங்கரமாக வெடித்தது. இதில் இருவர் காயமடைந் தனர். கார்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் ஆகியவை சேதமடைந்தன என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண் டுள்ள நேட்டோ படைகளின் தளங்களை இலக்கு வைத்து கடந்த இரு வாரங்களாக தலிபான் தீவிரவாதிகள் தொடர் தாக்கு தல்களை நடத்தி வருகிறார்கள். இத்தாக் குதல்களில் புதன்கிழமை இடம்பெற்ற பிந்திய தாக்குதல் இதுவாகும்.

கந்தஹார் மாகாணத்திலுள்ள பலம் பொருந்திய தலிபான்களின் நிலைகளிலி ருந்து அவர்கள் துடைத்தெறியப்படு வார்கள் என அமெரிக்க ஒபாமாவின் நிர் வாகம் அண்மையில் அறிவித்தல் விடுத் திருந்தது. அதையடுத்து, நேட்டோ கூட் டுப் படைகள் மீதும், ஆப்கான் படைகள் மீதும் தொடர் தாக்குதல்கள் நடத்தப்படும் என தலிபான்கள் சூளுரைத்திருந்தார்கள்.

கந்தஹார் நகரிலுள்ள நதான் சிமித் தளத்துக்கு வெளியே புதன்கிழமை காலை உள்ளூர் நேரப்படி, 11.30 மணியளவில் வெடித்த கார்க்குண்டால், வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளன என தென் ஆப்கானிஸ்தான் பொலிஸ் கொமாண்டர் ஜெனரல் ஷாபிக் பஷ்லி தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான கனேடிய இராணு வச் சிப்பாய்கள், அமெரிக்க இராணுவ பொலிஸார், அபிவிருத்தித் திட்டங்களில் பணிபுரியும் கனேடிய அரச ஊழியர்கள் ஆகியோர் இந்த தளத்தில் முகாமிட்டுள் ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இந்தக் கார்க்குண்டுத் தாக்குதலில் எவர் ஒருவரும் மரணிக்கவில்லை. ஒரு பாதுகாப்பு அதிகாரியும், இராணுவத் தளத் தில் பணிபுரியும் ஓர் ஆப்கானிய ஊழிய ரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்த ஆப்கான் ஊழியர் காலித் என அடை யாளம் காணப்பட்டுள்ளார்'' என்றும் அவர் கூறினார். எனினும், அவர் இதர விவரங் களை வெளியிடவில்லை.

இக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஆப்கான் உள்துறை அமைச்சு அறிக்கை யொன்றை விடுத்துள்ளது. அதில், "வெளிப் புறம் நிறுத்தப்பட்டிருந்த 11 கார்களும், 50 மோட்டார் சைக்கிள்களும், ஒரு டசினுக்கு மேற்பட்ட பைசிக்கள்களும் இக்குண்டுவெடிப்பில் சேதமடைந்துள் ளன'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இராணுவத் தளத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த 'டொயாட்டோ கொரல்லா' காரொன்றுக்குள் அதிசக்தி வாய்ந்த குண்டொன்றை வைத்து, தீவிர வாதிகள் தன்னியக்கக் கருவி மூலமாக அதை வெடிக்க வைத்துள்ளார்கள். கந்த ஹார் தலிபான் தீவிரவாதிகளின் பலம் பொருந்திய கோட்டையாகும்'' என பிறி தொரு பொலிஸ் உத்தியோகத்தர் தெரி வித்தார்.

# வடகொரிய - தென்கொரிய மோதல் போக்கு முற்றுகிறது

சியோல், மே 28

இரு நாடுகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியில் வானொலி ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டால் இரு நாடுகளுக்கு இடையேயான எல்லைப் பகுதியை மூடத் தயங்கமாட்டோம் என்று தென்கொரியா வுக்கு வடகொரியா எச்சரிக்கை விடுத்துள் ளது.

வானொலி ஒலிபரப்பைத் தொடங்கும் பட்சத்தில் இரு நாடுகளின் கட்டுப்பாட் டின் கீழ் உள்ள தொழிற்சாலை பகுதியில் தென்கொரியர்களையும், வாகனங்களை யும் நுழைய அனுமதிக்கமாட்டோம் என் றும் வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

தென்கொரிய இராணுவக் கப்பலை சமீபத்தில் வடகொரியா தாக்கி மூழ்கடித் தது. இதற்கு தென்கொரியா கடும் எதிர்ப் புத் தெரிவித்து வருகிறது. இந்த விவ காரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச்சென்று வடகொரியா மீது பொரு ளாதாரத் தடை விதிக்க வலியுறுத்தவும் அது ஆயத்தமாகி வருகிறது.

இதனிடையே, வட கொரியாவுக்கு பாடம் புகட்டும் சில திட்டங்களைத் தென் கொரியா தீட்டி வருகிறது. அதில் ஒன்று தான் இரு நாடுகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த 6 ஆண்டுகளாக நிறுத் திவைக்கப்பட்டிருந்த வானொலி சேவையை மீண்டும் ஆரம்பிப்பது.

வானொலி சேவை ஆரம்பிக்கப்படும் என தென்கொரியா அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு வடகொரியாவுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

வானொலி சேவையை ஆரம்பித்தால் தென்கொரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் என்று வடகொரியா எச்சரித்துள்ளது.

தென்கொரியாவின் நடவடிக்கை இரு நாடுகளுக்கு இடையே போரை மூட்டும் வகையில் உள்ளது என வடகொரியா மேலும் தெரிவித்துள்ளது.




தென்கொரியா வந்திருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் (இடது) தென்கொரிய வெளியுறவு அமைச்சர் யூமையோங்ஹாவொன் ஆகியோர் தலைநகரான சியோலில் கூட்டாக ஊடகவியலாளர்களுக்குப் பேட்டியளித்தனர்.

உலக அரங்கில்

# அமெரிக்க மாநில ஆளுநர் பதவிக்கு இந்திய பெண் போட்டி

வாஷிங்டன், மே 28

அமெரிக்காவில் சவுத் கரோலினா மாநில ஆளுநர் பதவிக்கு இந்திய வம்சா வளி பெண்ணான நிக்கி ஹாலிரந்தாவ போட்டியிடுகிறார். ஏற்கனவே இந்திய ரான பாபி ஜிந்தால் அமெரிக்காவில் ஒரு மாநில ஆளுநராக இருக்கிறார். இந்தத் தேர்தலில் நிக்கி வெற்றி பெற்றால் அவர் 2 ஆவது இந்திய ஆளுநராக இருப்பார்.

இவர் இப்போது சவுத் கரோலினா சட்ட சபையில் உறுப்பினராக இருக்கிறார். இவர் குடியரசு கட்சி சார்பில் ஆளுநர் பதவிக்குப் போட்டியிடவிருக்கிறார். இவர் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு நியமனம் செய்யப்படவேண்டும். இதற்கு அவர் கட்சி பிரபலங்கள் பலரின் ஆதர வைப் பெற்றிருக்கிறார்.

கட்சியின் முக்கிய பிரமுகரும், சமீபத் தில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்த லில் துணை ஜனாதிபதிப் பதவிக்கு போட் டியிட்டவருமான சாரா போலின் ஆதரவும் இவருக்குக் கிடைத்துள்ளது.

இந்நிலையில், மாநில ஆளுநர் சான் போர்டின் முன்னாள் உதவியாளர் வில் போல்க்ஸ் தனது இணையத்தளத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் நிக்கியுடன் தான் உடல் உறவு கொண்டிருந்தார் எனக் கூறி யிருந்தார். இது அந்த மாநிலத்தில் பர பரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டை நிக்கி மறுத் திருக்கிறார். இது முழுப்பொய். எனக்கு திருமணமாகி 13 ஆண்டுகளாக என் கண வருக்கு 100 சதவீதம் உண்மையானவளாக நடந்து கொண்டிருக்கிறேன் என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

# அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம்: இந்தியா, பாக். கைச்சாத்திட நிர்ப்பந்தம்

நியூயோர்க், மே 28

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந் தம், விரிவான அணு சோதனை தடை ஒப்பந்தம் ஆகியவற்றில் இந்தியா, பாகிஸ் தான், இஸ்ரேல் ஆகிய நாடுகள் கையெ ழுத்திடவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்துள்ள அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் தொடர்பான மறு ஆய்வு மாநாட்டில் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டின் இறுதி ஆவண முத லாவது வரைவு அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஐ.நா. நடத்தும் இதுபோன்ற மாநாடுகளின் இறுதியில் வெளியிடப்படும் அறிக்கை யில், நாடுகளின் பெயர்களை வெளிப் படையாகக் குறிப்பிட்டு, வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும். இது வழக்கத்துக்கு மாறான தாகும்.

அணு ஆயுதமற்ற உலகை உருவாக்க இந்த இரு ஒப்பந்தங்களிலும் இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய மூன்று நாடுகளும் நிபந்தனையின்றி கையெழுத் திட வேண்டும். இதன்மூலம், அணு ஆயுதங் கள் அல்லது இதர அணு வெடிபொருட் களைத் தயாரிப்பதில்லை என்ற சர்வதேச நாடுகளின் உத்தரவாதத்தை இந்த மூன்று நாடுகளும் ஏற்றுக்கொண்டு அதன்படி செயற்பட வேண்டும் என்றும் அதில் கோரப்பட்டுள்ளது.

இதேபோல, விரிவான அணு சோதனை களைத் தடை செய்ய வகைசெய்யும் ஒப் பந்தத்திலும் இந்த மூன்று நாடுகளும் தாமதமின்றி உடனடியாகக் கையெழுத் திட வேண்டும் என்றும் அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1970 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் பல்வேறு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் தொடர்பான மறுஆய்வு மாநாடு 5 ஆண்டு களுக்கு ஒரு முறை ஐ.நாவால் நடத்தப் படுகிறது.

இந்த ஆண்டிற்கான மாநாடு கடந்த 3 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் தொடங்கியது. இன்று 28 ஆம் திகதி இம்மாநாடு நிறைவடைகிறது.

# ரஷ்யப் படமாளிகையில் குண்டுவெடிப்பு: ஆறு பேர் உயிரிழப்பு; 40 பேர் படுகாயம்!




மாஸ்கோ, மே 28

ரஷ்யாவின் ஸ்டவர் போல் நகரிலுள்ள பட மாளிகை முன் இடம் பெற்ற குண்டுவெடிப் பில் 6 பேர் கொல்லப் பட்டனர். 40 பேர் படு காயமடைந்தனர்.

ரஷ்யாவில் செசன்ய தீவிரவாதிகளும், பழை மைவாத அமைப்பு களின் தீவிரவாதிகளும் அடிக்கடி வெடிகுண்டு தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். சமீபத்தில் சுரங்க ரயில் நிலையங் களில் மேற்கொள்ளப் பட்ட குண்டுத்தாக்குதல்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஸ்டவர்போல் நகரிலுள்ள படமாளிகை முன்பு குண்டுவெடித்தது. இதில் 5 பெண்கள், ஒரு சிறுமி ஆகியோர் கொல்லப்பட்டனர். 40 பேர் படுகாயமடைந்தனர். குண்டுவெடித்தபோது படமாளிகைக்குள் நடன நிகழ்ச்சி ஒன்று நடந்துகொண்டி ருந்தது. உள்பகுதிக்குள் குண்டுவெடித்து இருந்தால் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும்.

இந்தத் தாக்குதலை செசன்ய தீவிரவாதிகள்தான் நடத்தி இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.

# பொருளாதாரத் தடைவிதிக்க முயற்சி: ரஷ்ய ஆதரவுக்கு ஈரான் கண்டனம்

தெஹ்ரான், மே 28

அணுத் திட்ட விவகாரம் தொடர்பாக ஈரானுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை களை விதிக்க அமெரிக்கா மேற்கொண் டுள்ள முயற்சிக்கு ரஷ்யா ஆதரவு அளிப் பதற்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அணு ஆராய்ச்சியில் ஈரான் ஈடுபட்டு வருவதற்கு ரஷ்யா உதவி செய்து வந்தது. இந்நிலையில், ஈரானின் இந்த ஆராய்ச் சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த அமெரிக் காவையும், ஐரோப்பிய நாடுகளையும் சமாதானம் செய்யும் பொருட்டு, யுரேனியத்தை செறிவூட்டும் பணியை வெளிநாட்டில் ஒப்படைப்பது என்ற திட் டத்தை ஈரான் அறிவித்தது. இதை அந்த நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அணு ஆயுத ஆராய்ச்சியை கைவிடும் படி அந்த நாடுகள் கேட்டுக்கொண்டன. அப்படி கைவிடாவிட்டால், ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிப்போம் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அறிவித் தன. அமெரிக்காவின் இந்த முயற்சிக்கு ரஷ்யா ஆதரவு அளித்துள்ளது. இதற்கு ஈரான் தற்போது கண்டனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெசாக்' கொண்டாட்டங்களுக்காக குடாநாட்டுக்கு வந்துசேரும் பயணிகள்

கொழும்புத்துறை, மே 28

தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்தை நோக்கி மீண்டும் பெரும் எண்ணிக்கையில் வர ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக இம்முறை பிரமாண்டமான முறையில் இடம்பெறும் 'வெசாக்' பண்டிகைக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் முகமாகச் சுற்றுலாப் பயணிகள் இவ்வாறு அதிகமாக வருவதை காணமுடிகின்றது.

ஏ- 9 வீதியூடாக பஸ்கள், வாகனங்களில் இவர்கள் தொடர்ந்தும் வந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் யாழ்.நகரப் பகுதியில் மக்கள் நடமாட்டமும் வாகன நெரிசல்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

யாழ்.முற்றவெளிப் பகுதி 'வெசாக்' கொண்டாட்டத்திற்கான அலங்காரத்திற்கு ஒதுக்கப்பட்டமையால் சுற்றுலாப்பயணிகள் வாகனங்களை நிறுத் திவைப்பதிலும் நகரப் பகுதியில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(எ-க-135)


Study in Singapore

With industry attachment Diploma, Advanced Diploma in Tourism & Hospitality Management (12 Months)

Hurry, Admission is open for June intake!

Call: Mr.N.Geethan 0773484467

International Placements(S) (Pte) ltd, Singapore

மாபெரும் கருத்தரங்கு

ரில்கோ ஹோட்டல்
No. 70/6 K.K.S. Road,
30 th May at 10 am - 12 pm

அனுமதி இலவசம்



PROPOSED CONSTRUCTION OF MEMORIAL HALL AT URUMPIRAI

EXPRESSION OF INTEREST

The late Mr.V. Kandasamy's family members of UK intends to invite suitable constructors to bid for the proposed construction of a three storied Memorial Hall at Urumpirai in the Jaffna District.

The Scope of Work (Major Items) is as follows

1. Mostly suitable for constructors who could achieve the completion with in the target date of 12 months from the date of receipt of the Letter of Award.
2. Estimated Value of the Project is 28 Million
3. Major Works are

i). 50 ft span beams of maximum depth 3 ft and 3 ft x 1 ft columns
ii. Floor Work —Cemented floor
iii .Dravidian cultured Front Columns and sculpture works
iv. PVC Coated Aluminum Windows
v.Met roof sheeting
vi. Gypsum board Ceilings Work vi. Electrical Installation Works

If you wish to express your interest to participate in the tender process ,you are kindly requested to inform our consultant on or before the 1st of June 2010, whose address is given below:

Chief Executive Officer
RUDRA Engineering & Architectural Consultancy Organization
08,Nallur Cross Road, Jaffna.
e-mail: ruhlins@yahoo.com Tele/Fax: 021 222 5534
T.Rajaratnam Chankanai T.P. 0213217355


## வல்லிபுர ஆழ்வார் கோயிலில் புதனன்று திருக்கல்யாணம்

யாழ்ப்பாணம், மே 28

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு அவல் பூசை இடம்பெற்று, திருக்கல்யாணம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பெருமான் வெளிவீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் காட்சி கொடுப்பார். விஷேட மேளக்கச்சேரியும் இடம்பெறும். (ஓ-10)

## சாவகச்சேரியில் நாளை நடன, இன்னிசை அரங்கம்

யாழ்ப்பாணம், மே 28

ஜதிலயா நுண்கலைப் பயிலகம் வழங்கும் 'லயசங்கமம்' நடன, இன்னிசை அரங்கம் நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராகப் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் குமாரசுவாமி சதாசிவமூர்த்தி கலந்துகொள்வார்.

நடன நிகழ்வாக செல்வி காயத்திரி இராசையாவும் அவரது மாணவர்களும் இணைந்து வழங்கும் பரதம், மோஹினி, புத்தாக்க நடன நிகழ்வுகள் நடைபெறும்.

இன்னிசை நிகழ்வாக கல்வியங்காடு அருணா இசைக்குழுவின் 'திரை இசையில் சாஸ்திரிய இசைப் பாடல்கள்' என்னும் நிகழ்வு நடைபெறும். (ஓ-10)

## சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், மே 28

வலி.கிழக்கு சைவசமய அருள் மன்றத்தின் திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை விழா நாளைமறுதினம் ஞாயிறு மாலை நீர்வை கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

. மன்றத் தலைவர் சிவஸ்ரீ.சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் சிவஸ்ரீ.கு.தியாகராஜக் குருக்கள் (நீர்வை மணி) வாழ்த்துரை வழங்குவார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன், பாடசாலை மாணவர் மத்தியில் நடைபெறும் வினாடிவினா போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களை வழங்குவார். சைவப்புலவர் கந்தசத்தியதாசன் போட்டியில் நடுவராகப் பணியாற்றுவார்.

நீர்வை ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும். (ஒ-1)

* * *

யாழ்ப்பாணம், மே 28

வழக்கம்பரை, சுழிபுரத்திலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறும்.

இந்த நிகழ்வில் வட்டு மத்திய கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-1)


பாராட்டி வாழ்த்துகின்றோம்





திரு.கோ. சிவபாலலிங்கம்

எமது பாடசாலை ஆசிரியர் திரு.கோ.சிவபாலலிங்கம் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவி ஏற்றதையிட்டு எமது பாடசாலைச் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.த.விக்கினேஸ்வரன்

எமது பாடசாலை ஆசிரியர் திரு.த.விக்கினேஸ்வரன் அவர்கள் 01.04.2006 தொடக்கம் ஆசிரியர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு பாடசாலைச் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ மீசாலை விக்கினேஸ்வர ம.வி

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள்.



கருகம்பனை கவுணாவத்தை

நரசிங்க வைரவர் ஆலய பொங்கல் விழா

காலம்: நாளை (29.05.2010) சனிக்கிழமை

நேரம்: காலை 6 மணி

மேற்படி நிகழ்வு வழமைபோல நடைபெறும் என்பதனை அடியவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.



தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்

University of Colombo

A/L? Pass → BIT
No → FIT → BIT
DIT ⇨ HDIT ⇨ BIT



பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. பரீட்சைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்திலும் விரிவுரைகள் MCS நிறுவனத்திலும் நடாத்தப்படுகின்றன.

Further More,MCS offers

** Computer Engineering to BIT students. You also achieveMCSE and get Professional membership from MICROSOFT, Sun JAVA, BCS

**COMTIAA+,ICDL(Computer Driving License)module totally free

**CISCO-CCNA *TOFEL *E-learning facilities also available

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

பதிவுகளுக்கு நேரில் MCS, 324, Palaly Road, Jaffna. T.P-772395895

Supported by UNDP/JRRP


31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



சாந்தகுமார் அபிநயன்

பிறப்பு:12.03.2008
இறப்பு:23.04.2010

சாந்தகுமார் வாசுகி

பிறப்பு:14.04.1980
இறப்பு:28.04.2010

எமது அன்புத் தெய்வங்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.05.2010) வெள்ளிக்கிழமை மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி எனும் முகவரியுடைய எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

குடும்பத்தினர், சி.தேவராஜா.

நிரந்தர முகவரி:
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

மரண அறிவித்தல்

திருமதி பாலசிங்கம் இரத்தினசிகாமணி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் இரத்தினசிகாமணி 22.05.2010 அன்று காலமானார்.

அன்னார் கந்தையா - இராசமலர் தம்பதியரின் அன்பு மகளும், பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், சோமசுந்தரம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தவயோகராஜன் (லண்டன்), கமலராஜன் (கனடா), குகதாஸ் (லண்டன்), ஜெயதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரேணுகா (லண்டன்), சுஜிதா (கனடா), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், லண்டனில் வசிக்கின்ற ரீசிபன், கரிசா, கபிசா, அக்சயா, கனடாவில் வசிக்கின்ற அஜய், சஜீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்வரட்ணம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, அண்ணாமலை, துரைசிங்கம், வரதராஜா மற்றும் மனோன்மணி (கனடா), சந்திரவதனா, பராசக்தி (கனடா)ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்துத்துறை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை.

(98853)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெசாக் பண்டிகையை ஒட்டி அமைக்கப்பட்டிருந்த பந்தல்கள் சிலவற்றின் படங்கள் இவை.
யாழ். நாக விகாரையிலும் புல்லுக்குளத்திலும் அமைக்கப்பட்டிருந்த பந்தல்களை முதலிரு படங்களிலும், யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, கோட்டைப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த பந்தல்களை அடுத்துள்ள மூன்று படங்களிலும் அங்கு தொங்கவிடப்பட்டிருந்த பறக்கும் குதிரை வடிவிலான வெளிச்சக் கூட்டை இறுதிப்படத்திலும் காணலாம்.
(படங்கள்: ரத்தினம்)

# குடாநாட்டில் மோசடியாகப் பணம் கறக்கும் சம்பவங்கள் குறித்து ஏ.எஸ்.பி. எச்சரிக்கை

## வங்கியில் கடன்பெற்றுத் தருவதாக பெண் ஒருவர் புருடா

யாழ்ப்பாணம், மே 28

குடாநாட்டில் இயங்கும் வங்கிகளில் குறைந்த வட்டியிலான கடனைப் பெற்றுத் தருவதாக தரகுப்பணம் பெற்று பெண் ஒருவர் மோசடி செய்த சம்பவம் தொடர்பாக மேலும் ஐந்து பேரிடம் இருந்து நேற்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி) எம்.எம். ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்:-

பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதில் ஈடுபட்டுவந்தவர்கள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ளவர்கள் எனப்படுவோரை விடுவிக்க உதவுவதாகக் கூறி அவர்கள் குறித்தபெயர் விவரங்களைக் கேட்டு அதற்காக பணம் கறக்கும் முயற்சியில் ஈடுபடுவதாகவும் அறியமுடி கிறது. இதுகுறித்து அவதானமாக இருக்க வேண்டும்.

இது போன்ற சம்பவங்கள் குறித்து பொது மக்கள் பொலிஸாரிடம் முறையீடு செய்ய முடியும். வாரம் தோறும் புதன் கிழமை காலை 9மணிக்கு உதவி பொலிஸ் அதிபர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரை மக்கள் சந்திக்க முடியும்- என்றார் அவர். (ஒ-க-111)

# கொழும்பு - வவுனியா பஸ் தடம்புரண்டு 27 பேர் காயம்

அநுராதபுரம், மே 28

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப்பயணித்துக் கொண்டிருந்த இரவு நேர தனியார் பயணிகள் பஸ் ஒன்று நேற்றுக் காலை 5.55 மணியளவில் அநுராதபுரம் - தம்புள்ள வீதியிலுள்ள குருந்தம் குளம் பகுதியில் பாதையைவிட்டு விலகித் தடம் புரண்டது. இந்த விபத்தில் 27பேர் காயமடைந்தனர் என்று மிஹிந்தலைப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்களில் 19பேர் பெண்கள்.



காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் இவர்களில் பெரும்பாலானோருக்கு சிறிய காயங்களே ஏற்பட்டுள்ளன என்று அநுராதபுரம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டபிள்யூ எம்.ரீ.பீ. விஜயகோன் தெரிவித்தார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை மிஹிந்தலைப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி)

# கைத்தொலைபேசியில் புலிகள் ஆதரவுப் பாடலுடன் இருவர் கைது!

மட்டக்களப்பு, மே 28

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான பாடல்களை கைத்தொலைபேசியில் பதிவு செய்து வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் இருவர் மட்டக்களப்பில் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாண்டிருப்பைச் சேர்ந்த முத்துலிங்கம் கருணாகரன் (வயது 34) என்பவர் கல்முனையில் வைத்தும் மயிலியதனையைச் சேர்ந்த நடராசா சிவரூபன் (வயது 26) என்பவர் சாய்ந்தமருதுவிலும் வைத்தும் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவரும் மட்டக்களப்புப் பொலிஸாரிடம் மேல் விசாரணைக்காக விசேட அதிரடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஒ-1)

# போட்டி ஒத்திவைப்பு

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். செயலக விளையாட்டுப் பிரிவினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் போட்டிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (6-23-86)

## சாவகச்சேரி நகரில் நேற்று

# நகைக்கடையில் 'மாயா ஜாலம்' காட்டிய தென்னிலங்கை மங்கையர் இருவர்!

கைதடி, மே 28

சாவகச்சேரி நகைக்கடை ஒன்றில் மோசடியில் ஈடுபட்டதாகக் கருதப்படும் தென்னிலங்கையில் இருந்து வந்த 20 - 22 வயது மதிக்கத்தக்க இரு இளம் பெண்கள் வகையாக மாட்டிக்கொண்டனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

இரு இளம் யுவதிகள் நகை வாங்குவதற்காக குறிப்பிட்ட கடைக்குச் சென்றனர். மோதிரம் வாங்கப் போவதாகத் தெரிவித்து, மோதிரங்களை பார்வையிட்டனர்.

மோதிரங்கள் உள்ள பெட்டியில் தம்மிடம் இருந்த சிறு மோதிரத்தை வைத்து விட்டு, அந்தப் பெட்டிக்குள் இருந்த நிறைகூடிய மோதிரத்தை எடுத்து தமது கைப்பையில் வைத்து விட்டனர்.

போதிய பணம் இல்லாததால் பின்னர் வருவதாக நகைக் கடை உரிமையாளரிடம் கூறிவிட்டு அவர்கள் வெளியேறினர்.

அந்தப் பெண்கள் சென்ற பின்னர் அங்கு நின்றிருந்த இளைஞர் ஒருவர் தாம் அவதானித்த விடயத்தை உரிமையாளரிடம் தெரிவித்துள்ளார். மோதிரம் வைத்த பெட்டியைப் பார்த்த உரிமையாளர் அதிர்ச்சியடைந்தார்.

அந்த இரு பெண்களையும் பஸ் நிலையதில் தேடிய போது, அவர்கள் பஸ் ஏறி யாழ்ப்பாணம் சென்று விட்டதை அறிந்து கொள்ளமுடிந்தது. பஸ்ஸைக் கலைத்துச் சென்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்து மறிக்கப்பட்டது.

பொலிஸாரின் உதவியுடன் இரு பெண்களும் விசாரணை செய்யப்பட்ட போது அவர்களின் பையில் இருந்து மோதிரம் மீட்கப்பட்டது.

இருவரையும் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றனர். (ஒ-1-288)

# அகதிகளைப் பார்க்க கூட்டமைப்புக்குத் தடையா? சமாதானப் பேச்சுக்களைக் கூட அது பாதிக்கும்

## முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கிறது

கொழும்பு, மே 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை வவுனியா அகதி முகாம்களுக்குள் செல்லவிடாமல் அரசு தடுத்துள்ளமை மூலம் எதிர்காலத் தில் சமாதானப் பேச்சுகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று அறிவித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து உரையாடுவதற்கு என கடந்த வாரம் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு நான்கு நாள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியாவில் அவர்கள் செட்டிகுளம் முகாமுக்குள் செல்ல முயன்றபோது பாதுகாப்புத் தரப்பினரால் உள்ளே செல்ல விடாமல் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த மு.காங்கிரஸ் எம்.பி. எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தவை வருமாறு:-

வன்னி மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்திலும் அரச கட்சியில் இருந்து எந்தத் தமிழ்ப் பிரதிநிதியையும் தமிழ்மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் தெரிவு செய்யவே இல்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்துள்ளனர். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அம்மக்களைப் பார்வையிடுவதற்கு அரசினால் தடைவிதிக்கப்பட்டு விட்டது. இது ஜனநாயக விரோதச் செயலாகும். இதை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளாது.

உண்மையில் இந்த அரசு சுயமாகவே முன்வந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று மக்களின் நிலையை திறந்த மனதுடன் காட்டி யிருக்கவேண்டும்.

அரசுக்கும், தமிழ்க் கூட்டமைப்பினருக்கும் இடையில் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய சமாதானப் பேச்சுகளுக்கு இச்சம்பவம் பெரும் தடைக்கல்லாக அமைந்துவிடும். - என்றார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்" கண்காட்சி இன்று தொடக்கம் யாழ். மத்திய கல்லூரியில்

## தொடர்ந்து 3 தினங்கள் நடக்கும்

யாழ்ப்பாணம், மே 28

''உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்'' என்ற தொனிப் பொருளின் மாபெரும் வடக்கு மாகாணக் கண்காட்சி இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகின்றது. இன்று 28ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை - மூன்று தினங்கள் - இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காகவும் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் அனைத்துத் திணைக்களங்களும் இக்கண்காட்சியில் பங்கேற்கின்றன.

கண்காட்சிக் கூடங்கள், செய்முறைக் கூடங்கள், விற்பனைக் கூடங்கள் என்பன தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோரும்,

விசேட விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ. சிவசுவாமி ஆகியோரும் - கலந்து கொள்வர்.

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தினமும் கண்காட்சி இடம்பெறும். (ஒ-1)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, 5 விசேட வாகனங் களும் யுனிசெவ் நிறுவனத்தினால் இந்த வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

நேற்று இடம்பெற்ற திறப்புவிழாவில் அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ, ரிஷாத் பதியுதீன், சம்பிக்கரணவக்க, டக்ளஸ்தேவானந்தா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-சி)

### சகல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் திணைக்களத்தை மக்களுக்குரிய நிறுவனமாக மாற்ற நான்முயற்சி செய்துகொண்டிருக்கின்றேன். அத்தோடு பொலிஸார் தமிழ் மொழி கற்பதைக் கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாம் பலதரப்பட்ட சமூக நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளோம். பிரச்சினைகளுடன் பொலிஸ் நிலையங்களுக்கு வரும் மக்களுக்கு எமது சேவை திருப்திகரமானதாக இருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் மக்களிடமிருந்து எமக்கு சரியான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. ஆனால், இப்போது நாம் மக்களின் முறைப்பாடுகளைப் பெறுவதற்காக விசேட நாள்களை ஒதுக்கியுள்ளோம். அதனால் மக்களிடமிருந்து எமக்கு நல்ல பதில் கிடைத்துள்ளது.

பொலிஸாருக்கு டிப்ளோமா போன்ற பாடநெறிகளை வழங்குவதற்காக பொலிஸ் கல்லூரிகளை ஆரம்பிக்கவுள்ளோம். கடந்த காலங்களில் தமிழ் மொழி மூலமான முறைப்பாடுகளைப் பெறமுடியாத நிலைமையைப் பொலிஸார் எதிர்நோக்கினர். அந்தப் பிரச்சினையை நீக்கி பொலிஸார் தமிழ் மொழி கற்பதைக் கட்டாயமாக்கியுள்ளோம்.

நாம் பொலிஸாருக்கு 5 மாத தமிழ் மொழிப் பயிற்சியை வழங்குகின்றோம். இவ்வாறான முயற்சி ஒன்று எடுக்கப்பட்டிருப்பது வரலாற்றில் முதல் தடவையாகும். இலங்கையில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் இனி தமிழ் மொழி மூலம் முறைப்பாடுகள் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். - என்றார். (ஒ-சி)

### அரசமைப்புச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் ஸ்தாபிப்பதில் அக்கறை காட்டப்படுகிறது.

அரசமைப்புச் சபை செயலிழந்துள்ளமையால் அதன்கீழ் வரும் பல ஆணைக் குழுக்களும் செயலிழந்துள்ளன. இந்த அரசமைப்புச் சபையையும், ஆணைக் குழுக்களையும் மீண்டும் ஸ்தாபிப்பதன் மூலம் நல்லதோர் ஆட்சியை உருவாக்க முடியும் என்று நாம் நம்புகிறோம்.

இன்னும் இரண்டு மாதங்களுக்குள் அரசமைப்புச் சபை மீள ஸ்தாபிக்கப்படும். அதனைத் தொடர்ந்து அதன்கீழ் வரும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதித்துறை ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு போன்றவற்றிற்கும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு அவ்வாணைக்குழுக்கள் செயல்வடிவம் பெறும்.

நாடாளுமன்றில் ஜூன் மாதம் ஆரம்பமாகும் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் ஜூலையில் நிறைவுபெறும். அதனைத் தொடர்ந்து அரசமைப்புச் சபைகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (ஒ-சி)

### அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுமன்ற உறுப்பினர்கள் வவுனியாவில் உள்ள அகதி முகாம்களுக்குள் அரசினால் செல்லவிடாமல் தடுக்கப்பட்டமைக்கு சர்வதேச சமூகம் இன்னமும் கண்டனம் வெளியிடாமை குறித்து கருத்துக் கூறிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசின் தடை நடவடிக்கைக்கு எதிராக எந்த ஒரு சர்வதேச அமைப்பும் இன்னமும் கண்டனம் வெளியிடவே இல்லை. சர்வதேசத்தின் மௌனம் தமிழ் மக்களை மிகவும் காயப்படுத்தி உள்ளது. தமிழ் மக்களுக்கு அரசு எந்தவொரு தீர்வையுமே தரப்போவதில்லை.

தீர்வுத் திட்ட யோசனைகளைத் தயாரிப்பதற்காகச் சர்வகட்சிக் குழு ஒன்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையில் 2006ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அது கடந்த நான்கு வருடங்களில் 140 கூட்டங்களை நடத்தியது. அது தற்போது செனற் சபைக்கு 63 பிரதிநிதிகளின் பெயர்களைச் சிபார்சு செய்துள்ளது. இது தானா தமிழர் பிரச்சினைக்கு சர்வகட்சிக் குழு கண்டிருக்கும் தீர்வு?

தமிழ் மக்களுக்குத் தீர்வு கொடுப்பதில் அக்கறை இல்லாத அரசு இப்படி எல்லாம் நாடகங்களை அரங்கேற்றி வீணே காலத்தை நகர்த்துகிறது என்பதே உண்மையாகும்.

முடிவில்லாமல் துன்பங்களைத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் நிலையை சர்வதேசம் நன்கு அறிந்திருந்தும் கூட இன்னமும் மௌனமாக இருப்பது தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றத்தையும் வேதனையையும் தருகின்றது - என்றார். (ஒ-சி)

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

புதிய பிரிவு
**BITSMANS**
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2012

| ★ கலை ★ | | ★ கணித ★, உயிரியல் | |
|---|---|---|---|
| தமிழ் | - என்.பாலா | இரசாயனம் | - என்.மகேஸ்வரன் |
| வரலாறு | - எம்.பத்மன் | பௌதிகம் | - ஜெயசீலன், பார்த்தீபன் |
| புவியியல் | - என்.பாபு | இணை.கணிதம் | - பிரதீபன் |
| இந். நாக. | - எஸ்.ஜெயக்குமார் | உயிரியல் | - ஞானேந்திரன், போல், நிமாயன் |
| கிறிஸ்தவம் | - வசந்தன், யூட் | ★ வர்த்தகம் ★ | |
| அரசியல் | - ஜெனா | பொருளியல் | - பி.சண் |
| நாட. அரங்கு | - மங்களேஸ் | கணக்கீடு | - என். ராஜன் |
| அளவையியல் | - ஆர்.பி. சர்மா | வணிகக்கல்வி | - ரூபன் |
| ஆரம்பம் - 29.05.2010 சனி 2 p.m. | | ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும் | |

### குப்பிளானில் இன்று கட்டடம் திறப்பு

வலி.வடக்கு, மே 28

குப்பிளான் வடக்கு கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குப்பிளான் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க. கவாஸ்கர் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (ஒ-86)

### யாழ். குடாநாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியை மேற்கொள்வதற் காக ஜப்பான் ஜெய்சிக்கா நிறுவனம் 3,200 மில்லியன் ரூபாவையும் கிளிநொச்சியில் இருந்து சுன்னாகத்துக்கான 68 கிலோ மீற்றர் தூரத்துக்கான மின் இணைப்புப் பணியை மேற்கொள்ள ஆசிய அபி விருத்தி வங்கி 3,559 மில்லியன் ரூபாவை யும் - வழங்கவிருக்கின்றன.

இந்தச் செயற்றிட்டம் திட்டமிட்டுள்ளவாறு பூர்த்தியடைந்ததும் இரு பிரதேசங்களுக்கும் 24 மணிநேர மின்சார விநியோகம் கிடைக்கும் என்று மின்சார சபையின் அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ-1)

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

### பயங்கரவாதத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ கடந்த வருடம் நடந்த போரின் போது குற்றம் ஏதும் இழைக்கப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்டவர் எவராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவர். அவர்கள் எனது உறவினர்களாக இருப்பினும், இராணுவத் தளபதியாக இருப்பினும் தண்டிக்கப்படுவர். குற்றத்தை எவர் இழைத்தாலும் அவர் குற்றவாளியே.

★ ஆனால் பயங்கரவாதத்தைத் தோற்கடித்த எவரையும் நாம் தண்டிக்க முடியாது. பயங்கரவாதத்தைத் தோற்கடித்தவர்களை தண்டிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகம் கூறுமானால் அதனை என்னால் ஏற்க முடியாது.

★ போரின்போது நாம் பொதுமக்கள் எவரையும் கொல்லவில்லை. பொதுமக்கள் மீது இலக்கு வைத்து தாக்குதல் எதனையும் நடத்தவில்லை.

★ நடைபெற்றது போரென்பது உண்மைதான். ஆனால் பொதுமக்கள் தமது பாதுகாப்பின் நிமித்தம் அரசாங்கப் பகுதிக்கு வந்தார்கள். எமது படையினர் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தால் அவர்கள் எவ்வாறு படையினரை நம்பி அரசாங்கப் பகுதிக்கு வந்திருப்பார்கள்?

★ அரசாங்கத்தை, படையினரை நம்பாவிடில் எவ்வாறு 3 லட்சம் மக்கள் இராணுவ முகாம்களை நோக்கி வந்திருப்பார்கள்.

★ அரசாங்கப்படைகள் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை என்றால் குற்றம் இழைக்கவில்லை என்றால் சர்வதேச சுயேச்சையான குழு விசாரணைக்கு ஏன் அனுமதிக்கவில்லை என்று கேட்கிறீர்கள்.

★ இந்த நாட்டில் நடைபெற்ற போர் முழுக்க முழுக்க உள்நாட்டு விவகாரம். எமது விவகாரம் குறித்து வெளிநாடுகளோ அரச சார்பற்ற நிறுவனங்களோ விசாரிப்பதை நான் விரும்பவில்லை. அதனாலேயே யுத்த நெறிமுறைகள் மீறப்பட்டதா என்பதை கண்டறிவதற்காக விசேட விசாரணைக்குழு ஒன்றை நியமித்துள்ளோம்.

★ போர்க் குற்றங்கள் போன்று எதுவும் இடம்பெற்றிருப்பின் எமக்கு முறையிடட்டும். நாங்கள் அது குறித்து விசாரிப்போம்.

★ குற்றங்கள் இழைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவர்.

ஆனால் பயங்கரவாதத்தை தோற்கடித்த எவரையும் நாம் தண்டிக்க முடியாது.

நாம் உள்நாட்டிலேயே விசாரணை நடத்துவதால் அதில் வெளிப்படைத் தன்மை இருக்குமா என்று கேட்கிறீர்கள்.

ஆனால் இத்தகைய கேள்வியை அமெரிக்காவிடம் கேட்கமாட்டீர்கள். ஈராக்கில், ஆப்கானிஸ்தானில், பாகிஸ்தானில் என்ன நடக்கிறது என்று பிரிட்டிஷ்காரரிடமோ அல்லது அமெரிக்காவிடமோ நீங்கள் கேட்பதில்லை. ஏன்? இலங்கையிடம் நியாயமாக நடந்துகொள்ளுங்கள்.

நாங்கள் பயங்கரவாதத்தை ஒழித்திருக்கிறோம் என்பதனால் எங்களை கொள்ளிக் கண்கொண்டு பார்க்காதீர்கள்.

★ வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இலங்கைக்கு வர விரும்பவில்லை. அங்கு உள்ளது போல் இங்கு உல்லாச வாழ்க்கை நடத்த முடியாது என்று நினைக்கிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு இதுவரை சென்றதில்லை. கொழும்புக்கு அப்பால் சென்றதில்லை. தமது மக்களையே அவர்கள் சென்று சந்தித்ததில்லை. அங்குள்ள மக்களுடன் எந்தவித கலந்துரையாடலையும் நடத்தியதும் இல்லை.

★ ஆனால் நான் திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்று அவர்களின் குறைநிறைகளை கேட்டறிகின்றேன். சாதாரண பொது மக்களுடனேயே நேரடியாகக் கலந்துரை யாடுகின்றேன்.

★ தமிழ்க் குழுக்கள் தமக்கும் பிரதிநிதித்துவம் தேவை என்று சொல்வதாகக் கூறுகிறீர்கள். தமிழ் அரசியல் தலைவர்களும் தங்களுக்கு அதிக பிரதி நிதித்துவம் தேவையென குறைப்படுவதாகவும் சொல் கிறீர்கள். அவர்களை நான் நம்புகிறேனா என்றும் கேட்கிறீர்கள்.

★ நான் அவர்களை நம்புகின்றேன். அவர்களும் என்னை நம்பவேண்டும். அதனால் தானே நாம் அவர்களை பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைத்திருக்கின்றேன்.

தமிழ் அரசியல் வாதிகளில் பலர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்தவர்கள். அவர்கள் நாடாளுமன்றத்தில் புலி களையே பிரதிநிதித்துவம் செய்தார்கள் என்பதும் உண்மை.

ஆகையால் அவர்களை பேச்சுக்கு அழைப்பது எமது கடமையென்று நினைத்தோம். அதனாலேயே அவர்களை பேச்சுக்கு அழைத்திருக்கின்றேன்.

அவர்கள் எங்களுடைய கஷ்டங்களை உணர்ந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தின் கஷ்டங்களை உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் எங்களுடன் பேசி, இருதரப்புகளும் ஓர் இணக்கத்துக்கு வர வேண்டும். நாங்கள் இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்கு தயாராக இருக்கின்றோம். எங்களைப் பொறுத்தமட்டில் தமிழர் களாக இருந்தால்லென்ன, முஸ்லிம்களாக இருந்தாலென்ன, சிங்களவர்களாக இருந்தா லென்ன அவர்கள் எமது மக்களே. அதனை நான் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் எல்லோரும் எமதுநாட்டு மக்களே என்ற கண்ணுடனேயே எப்போதும் - பார்ப்பதுண்டு - என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி. (அ)

அதிசிறந்த கல்விக்கான இடத்தினை தேடிவரும் மாணவருக்கானது!

| கணக்கீடு | பொருளியல் | வணிகக் கல்வி | A/L 2012 வர்த்தகப்பிரிவு |
|---|---|---|---|
| திரு.பாலகஜன் சனி, ஞாயிறு 9-12 மணி | திரு.அருணன் திரு.M.C. சுதாகரன் சனி, ஞாயிறு 10 மணி | திரு.S.K.மகேஸ் சனி, ஞாயிறு 11 மணி | BEACON- யாழ்.நகர் (பெருமாள் கோவிலடி) |
| ஆரம்பம் | 29.05.2010 | சனி 9மணி | |

வலது நிரல் (BEACON- யாழ்.நகர் (பெருமாள் கோவிலடி)) அட்டவணையின் கடைசி இரண்டு வரிசைகளுக்கும் பொதுவாக செங்குத்தாக அச்சிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org